# மூவர் தமிழ் - மூன்று பார்வைகள்

காவிரி நாடன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# மூவர் தமிழ்
# மூன்று பார்வைகள்

முனைவர் காவிரிநாடன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் : பா. டாக்டர் சிவந்தி ஆதித்தனார், அதிபர், தினத்தந்தி)
வரிசை எண் : 19

## BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | : | Mūvar tamil̲ mūn̲ru pārvaikaḷ |
| Author | : | Dr. Kavirinadan M.A., B.Ed., Ph.D.<br>Tamil Teacher<br>E.L.M. Fabricius Higher Secondary School<br>Purasaivakkam, Chennai - 600 007 |
| General Editor | : | Dr. K.A. Gunasekaran<br>Director<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 669 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | viii + 104 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 50/- (Rupees Fifty Only) |
| Printed by | : | United Bind Graphics<br>43/95, Millers Road<br>Kilpauk, Chennai - 600 010. |
| Subject | : | Views of the Three Saiva Saints |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

'அவ்வினைக்கு இவ்வினையாம்' எனத் தொடங்கும் பதிகம் திருச்செங்கோட்டில் தம்மைச் சூழ வந்த அடியார்களுக்கு ஏற்பட்ட சுரநோய் நீக்கியது.

திருவாவடுதுறைக்குத் திருஞானசம்பந்தர் வந்து வேள்வி செய்ய நிதி வேண்டியபோது,

**இடரினும் தளரினும்**

எனத் தொடங்கும் பதிகம் உருவானது.

**கழுமல ஊரார்க்கு அம் பொன் ஆயிரம்**
**கொடுப்பார் போலும் ஆவடு துறையனாரே**

என்று நாவரசர் தம் பதிகத்தில் பதிவு செய்தார்.

ஊர்ப்பயணம் செய்த வணிகக் காதலர் இருவர் இரவுப் பொழுதில் ஒரு கோயிலில் தங்கினர். தங்கிய வேளையில் பாம்பு தீண்டியதால் பயணிக்க இயலாத நிலை ஏற்பட்டது. திருமருகலில் சம்பந்தர் தங்கியிருந்த வேளையில் தகவல் பெற்றுக் காதலர் இருவரும் தொடர்ந்து பயணிக்கத் தக்க வகையில் பாம்பு கடித்து நோகிய காதலனை நலம் பெறச் செய்து தன் காதலியுடன் தொடர்ந்து பயணிக்க அருள் செய்தார்.

'சடையாய் எனுமால் சரன் நீ. . .' எனத் தொடங்கும் பதிகம் பிள்ளையார் அவர்களால் பாடப்பெற்றது.

பல்வேறு பதிகங்கள் எவ்வாறு திருஞானசம்பந்தரால் பாடப் பெற்ற சூழல் ஏற்பட்டது என இந்நூலாசிரியர் சுவைபட இந்நூலில் விளக்கிச் செல்கிறார்.

வாசி தீரக் காசு பெறுதல்

மறைக் கதவம் அடைந்தது

மதுரைக்குச் செல்லல்

அனல் வாதம், புனல்வாதம்

ஓடம் ஒட்டியது

இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே (தில்லை)

என்பதான பல பதிகங்கள் பாடிய விதங்கள், சூழல்கள் எனத் தொடர்ந்து முனைவர் காவிரிநாடன் விரித்துரைத்துச் செல்கிறார்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் இம்மூவருள் நாவுக்கரசரே இரண்டாமவர் ஆவார். மருணீக்கியார் சமணராவார். ஒரு முறை சூலை நோய் அவரைத் தாக்கச் சைவமதம் தழுவினார். பின் சைவத் தலங்கள் தோறும் சென்று தொண்டர்களுடன் பதிகங்கள் பாடி வழிபட்டு உழவாரப் பணி செய்தார். மருணீக்கியாரின் பாடல் கேட்டு,

**பண் சுமந்த தமிழ் கேட்ட பரமன் நாவுக்கரசு**

என முதற்குருவான சிவபெருமான் திலகவதியாரை நாவுக்கரசருக்கு மானிடக் குருவாக ஆக்கினார்.

திருவாரூரிலும் திருவீழிமிழலையிலும் திருவாய்மூரிலும் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் இணைந்து இறைவனை வணங்கித் தனித்தனியே பதிகங்கள் பாடியுள்ளனர். சோழ நாட்டின் பல தலங்களுக்கும் சென்று ஆங்காங்கே பதிகங்கள் பாடினர். வெற்றுச் சடங்குகள் வேண்டாம் என நதிகளில் நீராடுதல், வழிபாடாற்றல், வேதம் ஓதுதல், உபதேசித்தல் முதலிய செயல்களை இறையுணர்வு இல்லாமல் அன்பில்லாமல், வெளி வேடங்களாகச் செய்வது சாதாரணச் சடங்காகுமே ஒழியப் பயன்தராது எனத் திருநாவுக்கரசு,

**கங்கை யாடில்என் காவிரி யாடில்என்**
**கொங்கு தண்குமரித் துறையாடில் என்**
**ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடில் என்**
**எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே** (ப. 50)

எனத் தன் பதிகத்தில் பதிவு செய்துள்ளார் எனுமாறு பல பதிவுகளை இந்நூலாசிரியர் பரக்கப் பேசியுள்ளார்.

ஆலால சுந்தரர் என்ற பெயரில் கயிலையில் சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டராகப் பணி செய்தவர் சுந்தரர் ஆவார்.

'பித்தா பிறைசூடி' எனும் பாடல் பிறந்த சூழலை இந்நூலாசிரியர் சுவைபட (ப. 71-72) விளக்கியுள்ளார். நம்பியாரூரர் பரவையாருடன் இனிதே இல்லறம் நடத்திவரும் வேளையில் குண்டையூர் கிழார் தந்த நெல்லினைச் சிவன்தன் பூத கணங்களை அனுப்பித் திருவாரூர் சேர வழிவகை செய்துள்ளார்.

மேற்காணும்படி மூவர் பாடிய தேவாரம் பிறந்த சூழல்களை இந்நூலில் விரிவுபடக் காணமுடிகிறது.

**சமணப் பின்புலம்**
**அனல்வாதம் புனல்வாதம்**
**சோழநாட்டில் உள்ள தலங்கள்**

மட்டுமே பரவலாகப் பதிகங்கள் பாடப்பெற்ற தலங்கள் என ஆய்வுப் பார்வையுடன் இந்நூல் ஆக்கப்பட்டிருக்குமே எனில் இன்னும் கூடுதல் சிறப்புப் பெற்றிருக்கக் கூடும். மாறாகச் சமயப் பார்வையுடன் சரிவரச் செய்யப்பட்ட நூலாக இதனை அறியும்போது நூலாசிரியர் காவிரிநாடனை நாமும் போற்றுவோமாக.

இந்நூலாக்கத்திற்குத் துணை நிற்கும் நல்ல உள்ளங்களை நன்றியுடன் இங்கு நினைவுகூர்கிறோம்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு ஆர். சிவகுமார் இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்



# என்னுரை

உலகம் படிப்படியாக மாற்றத்துடன் முன்னேற்றம் அடைவது இயல்பு. உயிர்களும் அவ்வாறே. இவ்வுண்மையைப் பிறப்பு முதல் இறப்பு வரை நிகழும் பல்வேறு உணர்வுகளையும், அறிவுத் தெளிவையும் வைத்து மெய்யுணரலாம். நாம் நாள்தோறும் உறங்கி எழுந்ததும், உடலுக்கும், மனத்திற்கும் புத்துணர்வுப் பெறுகிறோம். இதிலிருந்து உயிர்கள் ஒவ்வொரு பிறப்பிலும் புதிய புதிய நுகர்வு களையும், தெளிவையும் பெறுகின்றன என்பது தெளிவாகின்றது. இவ்வுண்மையைத் தெய்வப் புலவர் திருவள்ளுவர்,

**உறங்குவது போலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு** *(239)*

என்று கூறுகிறார். சைவ சமயத்தின் நெறிகளைப் பகுத்தறிவு வாதிகளும் ஏற்றுப் போற்றுகின்றனர். யாரும் மறுக்க முடியாத கொள்கைத் தெளிவு உடையது சைவ சமயம் ஆகும் என்பதைத் தாயுமானவர் 'சைவ சமயமே சமயம்' என்று போற்றிப் பேசுகிறார்.

சைவ சமயத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட சமயாச்சார்யர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்போரில் முதல் மூவரின் தமிழை 'மூவர் தமிழ் மூன்று பார்வைகள்' என்ற தலைப்பில் சிந்தித்துள்ளேன். பாலைத் தந்து ஆட்கொள்ளப்பட்ட திருஞானசம்பந்தரின் தமிழைப் பக்தி நோக்கிலும், இறைவன் சூலைத் தந்து ஆட்கொண்ட திருநாவுக்கரசரின் தமிழைச் சமூக நோக்கிலும், சிவபெருமான் ஓலை கொடுத்து ஆட்கொண்டு தோழமை அருளிய சுந்தரரின் தமிழை இலக்கிய நோக்கிலும் நூலாக்கியுள்ளேன்.

பார்வைகள் பலவிதம் என்பது உலக வழக்கு என்றாலும், உயர்தனிச் செம்மொழியாம் தமிழில் மலர்ந்த மூவர் தமிழை என் பார்வையாகச் சிந்தித்ததை அறிஞர் உலகம் ஏற்கும் எனப் பெருமித வுணர்வில் நம்புகிறேன்.

பல நூறு அறிஞர்களையும், பல்லாயிரம் நூல்களையும் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு வழங்கிவரும் போற்றுதலுக்குரிய இயக்குநர் உள்ளிட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு என்றும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

வாழ்க உயர்தனிச் செம்மொழித் தமிழ்!
வளர்க தமிழ்ப் பனுவல்கள்!

இன்ப அன்பில்
**காவிரிநாடன்**

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பக்தி நோக்கில் திருஞானசம்பந்தர் தமிழ் | 1 |
| சமூகநோக்கில் திருநாவுக்கரசர் தமிழ் | 35 |
| இலக்கிய நோக்கில் சுந்தரர் தமிழ் | 63 |

# பக்தி நோக்கில் திருஞானசம்பந்தர் தமிழ்

## திருஞானசம்பந்தர் அவதரித்தார்

தாய்நாட்டைத் தங்கமாக்கும் பொன்னிநதியாம் காவிரி சூழ்ந்த சோழ வளநாட்டில் சிவபெருமான் புகழ்பாடும் பெரும் சிறப்புமிக்க பதிகளில் மிகுசிறப்பும் பிரமபுரம், வேணுபுரம் புகலி, பெருவெங்குரு, தோணிபுரம், சிரபுரம், சண்பைநகர், காழி, கொச்சைவயம், திருகழுமலம், பூந்தராய், புறவயம் என்னும் பதினொரு சிறப்புப் பெயர்களைக் கொண்டதுமான சீர்காழிப் பதியில், வேதியர் குலத் தோன்றலாகி, சிவனை, சிவபெருமானின் திருவடிகளை இதயத்தில் தாங்கும் பெரும் சைவராம் சிவபாத இருதயருக்கும், பகவதி அம்மைக்கும் திருமகனாய் அவதாரம் செய்தவர் திருஞானசம்பந்தர் ஆவார்.

மலர்கின்ற மலர்களனைத்தும் மணப்பதில்லை; மன்றாடும் பெருமானின் மலர்ப்பாதம் சேருவதில்லை. அதுபோலப் பிறக்கின்ற எல்லாக்குழந்தைகளும் கருவில் திருவுடையதாக அமைவதில்லை. இது மகேசனின் திருவிளையாடல். ஆனால் சீர்காழியில் தோன்றிய குழந்தை எல்லாக்குழந்தையையும் போலப் பிறந்தது என்று பதிவு செய்யாமல், பக்திச்சுவை நனிசொட்ட, சொட்டப்பாடும் சேக்கிழார் பெரியபுராணத்தில் அவதரித்தார் எனப் பாடுகிறார்.

அவதாரம் என்ற சொல் மேலிருந்து இறங்கியும், இரங்கியும் வருதலைச் சுட்டும். மனிதன்மாட்டு, தர்மம் நிலைபெறக் கடவுள் மானுடவுருவுடன் அவதரிப்பார் என்பது பொதுவான கருத்து. அதுபோலத்தான் சீர்காழியில் சிவபாத இருதயருக்கும் பகவதி அம்மைக்கும் திருஞானசம்பந்தர் அவதரித்தார் என்று பதிவு செய்கிறார். சேக்கிழார் தாம்பாடிய பெரியபுராணத்துள் பிள்ளையாரைச் சிவம்பெருக்கும் பிள்ளையார் அவதாரஞ் செய்தார்[1] என்றும்; திருநாவுக்கரசுப் பெருமானை, 'இருள் நீக்கி ஒளி விளங்கு கதிர்போற்பின் மலரு மருணீக்கியார் வந்தவதாரஞ் செய்தார்'[2] என்றும், சுந்தரமூர்த்தி நாயனாரை," தீதகன்று உலகம் உய்யத்

திருவவதாரம்[3] செய்தார் என்றும் பாடுகிறார். மேலும் மனுநீதிகண்ட புராணத்தில் மனுநீதிச் சோழன் புதல்வனை 'மைந்தன் பிறந்தனன்'[4] எனவும்; கண்ணப்ப நாயனார் புராணத்தில் கண்ணப்பரை "மகப்பயந்தபோது"[5] எனவும், சண்டேசநாயனார் புராணத்தில் அவரது தோற்றத்தை "வந்து உதயம் செய்தார்"[6] எனவும், காரைக்காலம்மையார் புராணத்தில் அவரது தோற்றத்தைப் "புனிதவதியார் பிறந்தார்"[7] என்றும் பாடும் சேக்கிழார், சிறுத்தொண்டர் புராணத்தில் அவர் மகன் சீராளரைத் "திருமைந்தர் அவதரித்தார்"[8] எனவும் பாடுவதில் சில நுட்பங்கள் உள்ளன.

அவதாரம் செய்தார், உதயஞ்செய்தார், பிறந்தார் என்று சேக்கிழார் மூவகையாகப் பதிவு செய்வதில் கிடைக்கும் சிறப்புயாதெனின், இறைவனால், விண்ணுலகில் இருந்து மண்ணுலகிற்கு வந்தவர்கள் அவதாரம் செய்தார்கள் என்றும், வினைவழிப் பிறப்பவர்களைப் பிறந்தார் என்றும் சிறப்புக் கருதி உதயம் செய்தார் என்றும் படுகிறார் என்று சிந்திக்கலாம். அவ்வரிசையில் இறைவன் மண்ணுலகில் சிவபாதவிருதயர் பகவதியார் வழியாகத் திருஞானசம்பந்தரை அவதரிக்கச் செய்தார் எனலாம்.

திருஞானசம்பந்தரின் பிள்ளைத் திருநாமம் பிள்ளையார் என்பதே ஆகும். சேக்கிழாரின் சொற்றொடர்கள் பல இதனை விளக்குகின்றன.

*"வருமுறைப் பருவத்தில் வளர்புகலிப் பிள்ளையார்"*[9]

*"பெருகிய இன்புற அளித்தார் பெரும் புகலிப் பிள்ளையார்"*[10]

என்று சேக்கிழார் திருஞானசம்பந்தரைச் சிறுகுழந்தைப் பருவத்தில் எல்லாம் 'பிள்ளையார்' என மொழிகிறார்.

*"யாவருக்கும் தந்தைதாய் எனும் இவர் இப்படி அளித்தார்*
*ஆவதனால் ஆளுடைய பிள்ளையாராய் அகில*
*தேவருக்கும் முனிவருக்கும் தெரிவறிய பொருளாகும்*
*தாவில் தனிச் சிவஞான சம்பந்த ராயினார்"*[11]

இதனால் இளமைப் பெயர் 'பிள்ளையார்' என்பதைப் பெற்றோரும் மற்றோரும் பெருமையுடன் அழைத்துவந்தனர் என்பதை அறியலாம்.

**ஞானப்பால் உண்டது**

பிள்ளையார் தளர்நடையிட்டும், சிறுதேர் உருட்டியும், காழிப்பதி இறைவன் அருளால் வளர்ந்துவரலானார். மூன்றாம் ஆண்டு அகவை தொடங்கியது. சிவபாத விருதையர் தினமும் சீர்காழி ஆலயத் திருக்குளத்தில் புனித நீராடிப் பூசனை செய்வார். ஓர்நாள் நீராடச் செல்லும் தந்தையாருடன் தாமும் செல்லத்துடித்துப் பிள்ளையார் அழுதார். தந்தையார் வெகுண்டும், பிடிவாதம் குறையவில்லை. தந்தையார் பாதம்பிடித்து அழுதார். வேறு வழியின்றிச் சிவபாத இருதயர் பிள்ளையாரை அழைத்துக் கொண்டு சீர்காழி திருக்கோயிலினுள் உள்ள திருக்குளத்தை அடைந்தார்.

பிள்ளையைக் குளக்கரையில் அமரவிட்டு நீராட அஞ்சிய சிவபாத இருதயர் தோணிபுர இறைவனையும், தேவியையும் வணங்கிப் பிள்ளையைக் காத்திடவேண்டிக் கொண்டு நீராடச் சென்றார். இதனைச் சேக்கிழார் சிறப்பாகக் கூறுகிறார்.

*"பிள்ளையார் தமைக்கரையில் வைத்துத்தாம் பிரிவஞ்சித்*
*தெள்ளுநீர்ப் புகமாட்டார் தேவியொடு திருத்தோணி*
*வள்ளலார் இருந்தாரை எதிர் வணங்கி மணிவாவி"*[12]

இந்த நிகழ்வு, கடவுளை, அதாவது தோணிபுரத்து ஈசனையும் தேவியையும் நீங்கள்தான் இக்குழந்தைக்குக் காவல் என்று கூறுவதாகவும், நான் வேறுயாரிடம் ஒப்படைப்பேன்? என்றுமில்லாது இன்று என் குழந்தை அடம்பிடித்து என் பூசனைக்கு இடர்ப்படுத்திடு கிறதே என்று உருகும்படிச் சிவபாத இருதயரின் செயல் உள்ளதை அறியலாம்.

மூன்று வயது குழந்தையைக் குளக்கரையில் உட்கார வைத்து விட்டு, மன ஒருமையுணர்வுடன் தருப்பணம், சந்தியாவந்தனம், அகமருடணம் எப்படி செய்யமுடியும்? குழந்தைக்கு யாரையாவது காவல் வைத்தால்தான் ஒருமையான மனம் தன்செயலில் ஈடுபட முடியும். ஆனால் சிவபாத இருதயர் தோணிபுரத்து ஈசனையும் ஈசுவரியையும் தன் குழந்தையைக் காத்திடவேண்டியுள்ளார். பிறகென்ன இறைவனும் இறைவியும் குழந்தையைக் காத்திட முற்பட்டனர்.

சிவபாத இருதயர் வேறுஒரு பரிசனத்திடம் ஒப்படைத்தால் அதிசய நிகழ்வு ஏற்படுமா? என்பது சிந்திக்கத்தக்கது தான். சிவபாத இருதயர் குளத்தில் பூசனை செய்து நிறைவில் நீருக்குள் மூழ்கி அகமருடணம் செய்யத்துணிந்தார்.

தந்தையாரைக் காணாமல் குழந்தை அழுதது. அக்குழந்தை, சீர்காழி கோபுரத்தின் மீதுள்ள பார்வதி பரமேசுவரனைப் பார்த்து அம்மே அப்பா என அழுதது. தந்தையார் குழந்தையைக் காத்திட வேண்டிக் கொண்டு சென்றுள்ளார். பிரமபுர ஈசன் மனம் பொறுக்காமல் அம்மை அப்பராகத் திருக்குளக்கரைக்கு வந்து, அழும் குழந்தைக்கு "முலைப்பாலைப் பொன்கிண்ணத்தில் ஏந்தி ஊட்டுக" எனப் பெருமான் கூற அவ்வாறே உமா தேவி, திருமுலைப்பாலைக் குழந்தைக்கு ஊட்டினாள். பிள்ளைப் பருவத்திலேயே அம்மையப்ப ரால் ஆட்கொள்ளப்பட்டதால் ஆளுடைய பிள்ளையாரானார். உமாதேவி திருமுலைப்பாலுடன், சிவஞானத்தையும் குழைத்து ஊட்டியதால் சிவஞானம் கைவரப்பெற்றார். திருஞானசம்பந்தரானார். திருஞானசம்பந்தர் ஞானத்துடன் சம்பந்தம் ஆக்கிக்கொள்ள உமாதேவியின் பாலுணவு காரணமானது.

எல்லாக் குழந்தைகளும் அழும். ஆனால் இந்தக் குழந்தை தன் மேலைச் சார்பு தூண்டியதால் அழுதது.

**மேலைச்சார்பால் அழுததா?**

*"கண்மலர்கள் நீர்ததும்பக் கைம்மலர்களாற் பிசைந்து*
*வண்ணமலர்ச் செங்கனிவாய் மணிஅதரம் புடைதுடிப்ப*
*எண்ணில் மறைஒலிபெருக எவ்வுயிரும் குதூகலிப்ப*
*புண்ணியக் கன்றனையவர் தாம்பொருமி அழுதருளினார்."*[13]

என்று சேக்கிழார் பிள்ளையார் அழுததைக் காவியங்களிலெல்லாம் இல்லாத கவிநயத்தில் நமக்குக் கவினுடன் காட்டுகிறார். குழந்தை அழுவது இயல்புதான். இங்கே குழந்தையின் கண்ணும் மலர், கைகளும் மலர், செங்கனிவாயும் மலர், இப்படி மலராலே உவமைகளை ஒன்றுகூட்டும் சுவைமிகு கவி இது. அத்தோடு இக்குழந்தை அழுவதால் உலகமே இன்பமாய்க் குதூகலிக்கிறது. குழந்தை பிறந்தவுடன் அழுதால்தான் உறவினர் மகிழ்வர். பெற்றோர்

மகிழ்வர். இது உலக இயல்பு. ஆனால் இங்கே உலகமே மகிழ்கிறது. இது பிள்ளையாரின் சிறப்பு. ஆம் இயல்பாக அழும் குழந்தைக்கு முகம் கோணலாகும். ஆனால் இவர் முகம் ‘மலர்ந்ததாம்’. இந்தச் சொல்லைச் சேக்கிழார் பெய்ததன் நோக்கம், உலகில் பிறந்த குழந்தையின் செயல்போல இக்குழந்தை அழவில்லை என்பதற்காகத் தான். சேக்கிழார்,

*“பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத”*[14]

என்று பாடலிசைப்பதால் பிள்ளையார் சாதாரணக் குழந்தைகள் போல அழவில்லை என்பதை விளக்குகிறார்.

அச்சத்தாலோ, பசியாலோ அழாமல் மேலைச்சார்பு உணர்ந்தே அழுகிறது. இதற்குச் சேக்கிழார்,

*தம்மேலைச்சார்பு உணர்ந்தோ சாரும்பிள்ளைமை*
*தானோசெம்மேனி வெண்ணீற்றார் திருத்தோணிச்*
*சிகரம் பார்த்து அம்மே அப்பா என்று என்று*
*அழைத்தருளி அழுதருள*[15]

என்று சரியாக விடையைப் பாடல் மூலமாகத் தருகிறார்.

சார்பு என்ற சொல்லுக்குத்தொடர்பு என்பது பொருளாகும். மேலைச்சார்பு என்பதால் முன்புள்ள தொடர்பு எனக்கொள்ளலாம். சிறுகுழந்தை முன்புள்ள சார்பை எப்படி சிந்திக்க முடியும்? என்ற வினா நமக்கு மட்டுமல்ல பின்னரும் நமக்கெல்லாம் முன்னரும் தோன்றிய சேக்கிழார் அறிந்துதான் ‘உணர்ந்து’ என்ற சொல்லை இடுகிறார் எவ்வாறு என்றால்?,

‘உணர்வு’ அவரவர் மனத்தின்பாற்பட்டது. ஆழ் மனத்தின் பாற்பட்டது. முந்தைய பிறப்பு முதலியன உணர்வில் சிறு குழந்தை யானாலும் பெரியவரானாலும் வெளிப்படலாம். குழந்தை கூறமுடியாது. பெரியவர் விவரிப்பர். ‘உணர்ந்து’ என்ற சொல்லைச் சேக்கிழார் மனதில் கொண்டு பாடலில் ‘உணர்ந்தோ’ என்ற வினாச் சொல்லை முறையாக இடுகிறார். இதனால் திருஞான சம்பந்தர் முற்பிறப்பிலும் இருந்தமை குறிப்பால் அறியலாம்.

திருஞானசம்பந்தர் ஞானப்பாலுண்டு பின்னர் இறைவனால் ஆட்கொண்டபோது ‘திருத்துருத்தி’ தலப் பதிகத்தில்,

*"துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருத்தடி*
*மறக்குமாறு இலாத என்னை மையல் செய்து*
*இம்மண்ணின்மேல்*
*பிறக்குமாறு காட்டினாய் பிணிபடும் உடம்புவிட்டு*
*இறக்குமாறு காட்டினாய்க் கிழுக்குகின்ற தென்னையே'*[16]

இப்பாடல் அவரது அகச்சான்றாய் மேலுலகில் இவ்வுடம்பு, அதாவது சிவபாத இருதயர், பகவதியார்க்கு மகனாகும் முன்னர் மேலுலகில் இருந்தார் என அறியமுடிகிறது. சேக்கிழார் மிகமிக துணுகி ஆராய்ந்து பாடியதற்கு இது ஒரு சிறு சான்றாவது அறிந்து மகிழலாம்.

**ஞானப்பாலுடன் கலைஞானம் பெறுதல்**

*சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்*
*பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்*
*உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்*
*தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்*[17]

என்று சம்பந்தர் புராணத்தில் சேக்கிழார், உமாதேவியின் திருமுலைப் பாலைவுண்டபோதே, உவமையில்லாக் கலை ஞானத்தையும் சம்பந்தர் பெற்றார் எனக்கூறுகிறார்.

**சிவபாத இருதயர் சிவனைக் காணவில்லை**

குளக்கரையில் அழுத குழந்தைக்குத் தோணிபுரத்து ஈசன் ஆணையால் உமாதேவி பொற்கிண்ணத்தில் தன் தனத்திலிருந்து பால் கறந்து ஊட்டினாள். பாலடிசிலுடன் கலைஞானத்தையும் ஊட்டினார். குழந்தை ஊன்உடல் நீங்கி உணர்வுமிகு, சிவவுடல் பெற்று மகிழ்ந்தது. சிறிது நேரத்தில் சிவபாத இருதயர், குளத்தின் மேலே வந்து குழந்தையைக் கண்டார். வெகுண்டார். காரணம், குழந்தைக் கையில் பாலமுதக்கிண்ணம். வாயில் பால் வழிகிறது. அவர் 'யார் அளித்த பாலை உண்டாய் ?' எனக் கோல் எடுத்து அடிக்க ஓங்கினார். குழந்தை அவ்வளவில்,

உச்சியில் கரமலரைத்தூக்கிக் காட்டி, மறைகளினாலும் காணவொண்ணாத மணிகண்டரைக் காட்டினார். தோணிபுரத்துக் கோபுரம் மீது அம்மையப்பரைக் காட்டினார். மகிழ்ந்தார். சிவஞானம்

மேலோங்க ஞானவேள்விக்கு உறுதுணையாகும் புலனாம் செவியைச்சுட்டி, பெருமான்புகழைப் பதிகமாகப்பாடித் திருக்கடைக் காப்புச் சார்த்தினார். சிவபாத இருதயர், பெருமானையும் பெருமாட்டியையும் கண்டு குழந்தை அரும்தமிழ்ப் பாடுவது அறிந்து மகிழ்ந்தார். ஆனால் இறைவனை அவர் காணவில்லை. குழந்தை பின்னே ஆலயம் சென்றார். நம் குழந்தை தெய்வக்குழந்தை என்பதை உணர்ந்தார். வானவர் மலர்பொழிந்தனர். அர அர ஓசை பிரமபுரம் முழுதும் முழங்கியது. வேதியரும், யாவரும் இது அதிசயம் என வியந்து வணங்கினர். திருஞானசம்பந்தரே எல்லாம் என்னை ஆட்கொண்டவர் உமையொடு இருந்த இவர் என்று உரைத்தார். சிவபாத இருதயர் தம் தோளின்மேல் அமர்த்தி வீதிவலம் வந்து தமது வீட்டைச் சேர்ந்தார்.

**பொற்றாளம் பெற்றது**

திருஞானசம்பந்தர் காலை வழிபாடாற்றிடத் திருக்கோலக்கா என்னும் தலத்திற்குச் சென்று பதிகம்பாடிட முயன்றார். 'மடையில் வாளைபாய' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைத் தம் மெல்லிய பூக்கரத்தால் தாளமிட்டுப் பாடினார். அதுகண்ட கோலக்கா இறைவன், பிள்ளையாரின் பிஞ்சுக் கரங்கள் வருந்துகின்றனவே என உள்ளம் உருகி, திருவைந்தெழுத்துப் பொறிக்கப்பட்ட பொன்னாலான தாளத்தை அருளினார். பொற்றாளத்திற்கு அவ்வாலய அம்மை ஓசைதந்து ஓசைகொடுத்த நாயகியானார். இவ்வரிய நிகழ்வு திருஞானசம்பந்தர் தாளமுடன் பண்ணிசைத்துத் தமிழ் வளர்த்த தற்கு வெளிப்பாடு.

**பாலை நிலத்தைப் பதிகம்பாடி நெய்தலாக்கிய சிறப்பு**

திருஞானசம்பந்தரைப் பெற்றெடுத்த தாயார் பகவதி அம்மையார் பிறந்த ஊர் 'திருநனிப்பள்ளி' என்னும் சிற்றூராகும். அவ்வூரின் ஆன்றோர்கள் திருஞானசம்பந்தரைத் தம்வூருக்கு அழைத்தனர். திருஞானசம்பந்தர் சீர்காழி தோணியப்பரிடம் அனுமதி பெற்றுத் திருநனிப்பள்ளிக்குச் செல்ல முற்பட்டார்.

பிஞ்சுப்பாதங்கள் தரையில் நடப்பதைப் பொறுக்காத ஊனுடல் தந்த தந்தையார் சிவபாத இருதயர் பிள்ளையாரைத் தம்

தோளின்மேல் அமர்த்திக் கொண்டு அடியார்கள் புடைசூழச் சென்றார்.

திருநனிப்பள்ளி வறண்ட நிலமாக இருந்தது. திருஞான சம்பந்தர் 'காரைகள் கூகைமுல்லை' என்று பதிகம் இசைத்தார். முதல் இரண்டடிகள் பாலைநில இயல்பும் பின்புள்ள இரண்டடிகள் நெய்தல் நில இயல்பும் உள்ளவாறு பதிகமிசைத்தார். பதிகம் நிறைவடைந்ததும் நனிப்பள்ளி வறட்சி நீங்கி வளமுடைய நிலமானது கண்டு அன்பர்கள் மகிழ்ந்தனர்.

*"நாதன் நனிபள்ளி சூழ்நகர் சானகம் ஆக்கியஃதே*
*போதின் மலிவயல் ஆக்கிய சேரன்"*[18]

என்று ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் 17–ஆம் பாடலில் நம்பியாண்டார் நம்பி கூறியுள்ளார். இவ்வரிய செய்தி சேக்கிழார் பெரியபுராணத்தில் இல்லை.

## திருநீலகண்ட யாழ்ப்பாணர் நட்பு

பல திருத்தலங்களைத் திருஞானசம்பந்தர் வழிபாடாற்றிச் சீர்காழியில் இருக்கும்போது அவரது அற்புதங்களை அறிந்து வணங்கிடுவதற்காகத் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர் மனைவி மதங்க சூளாமணியாரும் சீர்காழி வந்தனர். பிள்ளையார் அவர்களை எதிர்கொண்டழைத்துத் தோணியப்பரை வழிபாடாற்றினார். தன்னுடனே அவர்களை இருத்திக் கொண்டார். சிதம்பரம் சென்று தில்லைக் கூத்தனை வணங்கினார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஞானசம்பந்தரின் பாடலுக்கு யாழ் இசைத்து வரலானார்.

திருஎருக்கந்தம்புலியூர் செல்லும்போது பாணர் தம் ஊர் இது என்றார். ஞானக்குழந்தை பதிகம்பாடியது. பாணரும் ஊர் மக்களும் மகிழ்ந்தனர். பாணரும் பிள்ளையாருடனே இருந்து யாழிசைத்து வரலானார்.

## முத்துச்சிவிகை, குடை, சின்னம் பெறுதல்

திருஞானசம்பந்தர் அடியார்களுடன் திருநெல்வாயில் அரத்துறையை வழிபடச் சென்றார்.

திருஞானசம்பந்தர் தந்தையாரின் தோளின் மீது அமர்ந்து செல்வது தவிர்த்து மெல்லியபாதம் தரையில் வருந்த, விரைந்து

நடந்தார். திருநெல்வாயில் அரத்துறையினை அடைவதற்கு முன் மாறன்பாடி என்ற ஊரில் அடையும்போது இரவானது. அங்கேயே பிள்ளையார் தங்கினார்.

பிள்ளையாரின் வழிநடை வருத்தம் அறிந்த வழித்துணை மருந்தாகிய அரத்துறையப்பர் அவ்வூர் அன்பர்கள் கனவில் தோன்றி 'ஞானசம்பந்தன்' நம்பால் வருகிறான். அவன் வருத்தமில்லாது வருகைதர முத்துச் சிவிகை, முத்துக்குடை, முத்துச் சின்னம் ஆகியவற்றை நம்பால் பெற்றுக்கொண்டு அவரை அடைந்து கொடுத்தழைத்து வாருங்கள் என்றார். அவ்வாறே மாறன் பாடி சென்று சம்பந்தர் கனவிலும் ஏற்றுக்கொள்ளக் கூறினார் இறைவன்.

இந்நிகழ்வின்படி திருஞானசம்பந்தர் அடியார்கள் அளித்த முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச் சின்னத்துடன் திருநெல்வாயில் இறைவனை வழிபட்டார்.

**உபநயனச் சடங்கு**

திருநெல்வாயில் இறைவனை வணங்கியபின் திருஞான சம்பந்தர் சிவிகையில் பல தலங்களை வணங்கி, சீர்காழி வந்தடைந்தார்.

தம்குல முறைப்படி உபநயனச் சிறப்பினைச் செய்தனர். 'மறைநான்கும் தந்தோம்' எனக்கூறி முப்புரி நூலினை அணிவித்தனர். அந்நிலையில், எல்லா மந்திரங்களுக்கும் மூல மந்திரமான நமச்சிவாய மந்திரத்தை வேதியர்களுக்கு உணர்த்தி, திருவைந்தெழுத்துப் பதிகம் பாடினார். உபநயனம் செய்ததால் திருஞானசம்பந்தருக்கு வயது 'ஏழு' என்பதை (உலக நிகழ்வில் ஏழாண்டில் உபநயனம் செய்வர்) அறியலாம்.

**திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரை வணங்குதல்**

திருஞானசம்பந்தர் மூவாண்டில் சிவஞானம் பெற்றதை அறிந்த நாவுக்கரசர் தில்லை அம்பலவாணனை வழிபட வந்த நேரத்தில் மேலும் திருஞானசம்பந்தர் பற்றி அறிந்து மகிழ்ந்து பிள்ளையாரைச் சந்திக்கச் சீர்காழி வந்தார்.

கல்லைத் தெப்பமாக்கிக் கடலினைக்கடந்த திருநாவுக்கரசர் வருவதறிந்து ஞானப்பிள்ளையார் எதிர்கொண்டு அழைத்தார். திருநாவுக்கரசரின் சிவ தோற்றத்தை உணர்ந்த குழந்தை,

கையெடுத்து வணங்கி 'அப்பரே' என்றது. நாவரசரும் 'அடியேன்' என்றார். இவ்விரு குரவர்களும் சீர்காழியில் பல நாட்கள் இருந்து தோணியப்பர் அருள் பெற்றனர். நாவரசர் சோழ நாடு சென்றார்.

**தந்தையாருக்குத் திருவெழுகூற்றிருக்கை வழங்குதல்**

திருஞானசம்பந்தரின் தந்தையார், தினமும் தன் மகவு பாடும் பதிகம் அனைத்தையும் படனம் செய்து வந்தார். வயோதிகம் காரணமாக அனைத்துப் பதிகங்களையும் அவரால் பாராயணம் செய்ய முடியவில்லை. இதனைப் பிள்ளையாரிடம் கூறியபோது, தந்தையாருக்கென ஒரு பதிகம் பாடினார். இந்த ஒரு பதிகத்தைப் படனம் செய்து வந்தால், தாம் பாடிய அனைத்துப் பதிகங்களையும் படனம் செய்ததற்கு ஒப்பாகும் என்ற குறிப்பில் 'திருவெழு கூற்றிருக்கை' அருளினார். இதனை வெளிப்படுத்தும்படி சேக்கிழார்,

> *"எந்தைக்கு எழுகூற்றிருக்கை . . . எல்லாப்*
> *பொருள்களும் முற்றப் பாடினார்"*[19]

என்று பெரியபுராணத்தில் பதிவு செய்துள்ளார்.

**முயலக நோய் நீக்குதல்**

திருஞானசம்பந்தர் பல திருத்தலங்களை அடியார்களுடன் சென்று வழிபட்டு, திருப்பாச்சிலாச்சிரமம் என்னும் தலத்தை அடைந்தார். அவ்வூரில் வாழும் குறுநில மன்னன் ஆகிய கொல்லிவளவன் என்பவரின் மகளுக்கு முயலகன் என்னும் நோய் ஏற்பட்டிருந்தது. பல மருத்துவர்கள் மருந்தளித்தும் பயனில்லை. நிறைவாகப் பாச்சிலாச்சிரமத்து இறைவன்முன் அப்பெண்ணைக் கிடத்தினர். இதைக் கண்ட திருஞானசம்பந்தர், விபரம் அறிந்து

> துணிவளர் திங்கள் விளங்க[20]

என்று தொடங்கும் பதிகமிசைத்தார். மழவனின் மகள் எழுந்து நன்னிலை யடைந்தாள். குறுநில மன்னனும் மகிழ்ந்து திருஞானசம்பந்தர் திருவடியில் விழுந்து வணங்கினான்.

**சுரநோய் போக்கியது**

பல தலங்களை வணங்கியபின் திருஞானசம்பந்தர் திருச்செங்கோடு சென்றார். அப்போது பனிக்காலம் ஆதலால்

பிள்ளையாருடன் வந்த அடியார்களைச் சுரநோய் பற்றி வருத்தியது. இதனை அறிந்த திருஞானசம்பந்தர் 'அவ்வினைக்கு இவ்வினையாம்' எனத் தொடங்கும் பதிகம் பாடினார். அந்நிலையிலேயே அன்பர்களுக்கும் அவ்வூரில் உள்ளோர்களைத் துன்புறுத்திய சுரநோய் நீங்கியது.

**முத்துப்பந்தர் பெறுதல்**

தலங்கள் பல வழிபாடாற்றிச் சோழ நாட்டுச் சத்திமுற்றம் உறையும் பெருமானை வழிபாடாற்ற, திருஞானசம்பந்தர் நண்பகலில் வந்தார். பட்டீசுரத்து இறைவனையும் தரிசித்தார். அந்நிலையில் வானத்தில் சூரியனை மறைத்து முத்துப் பந்தர் தோன்றியது. வானத்திலிருந்து இறங்கிய முத்துப் பந்தரை அடியார்கள் பிடித்துத் திருஞானசம்பந்தருக்கு நிழலாகப் பிடித்தனர். நிழல் தந்த இறைவனை வணங்கினார். அடியார்கள் மகிழ்ந்தனர்.

**உலவாக்கிழி பெற்றுத் தருதல்**

திருஞான சம்பந்தப் பெருமான் பல தலங்களை வணங்கி, திருவாவடுதுறை அடைந்தார். அவ்வாலயம் தொழச் சென்றார். அவ்வேளையில் பிள்ளையாரின் தந்தையார், தாம் வேள்வி செய்யக் காலம் அணுகியது; அதற்குரிய பொருள் வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவ்வேண்டுகோட்கு இசைந்த பிள்ளையார், திருவாவடுதுறை ஈசனை வணங்கித் தொழுது நீள்நிதியைப் பெற்றுத்தந்தார்.

"*இடரினும் தளரினும்*"[21]

எனத் தொடங்கும் பதிகமிசைத்தார். அப்போழ்து சிவ பூதம் ஒன்று பொற்கிழி ஒன்றை எடுத்து வந்து பலிபீடத்தின் மேல் வைத்தது. இப்பொற்கிழி எடுக்க எடுக்கக்குறையாத உலவாக்கிழி என்று கூறி மறைந்தது. உலவாக்கிழியைப் போற்றிய திருஞானசம்பந்தர் தந்தையாரிடம் அளித்து மகிழ்ந்தார். இவ்வற்புதத்தை,

"*கழுமல ஊரர்க்கு அம்பொன் ஆயிரம்*
*கொடுப்பார் போலும் ஆவடு துறையனாரே*"[22]

என்று நாவரசர் தம் பதிகத்தில் பதிவுசெய்வது கொண்டு அறியலாம்.

### யாழ்முரி பாடியது

திருஞானசம்பந்தர் அடியார்களுடன் பல தலங்களை வணங்கி, தருமபுரம் வந்தார். இவ்வூர் உடன்வரும் திருநீலகண்ட பெரும்பாணரின் தாயார் பிறந்த ஊராகும். எனவே அவரது உறவினர்கள் சம்பந்தரை எதிர்கொண்டு அழைத்தனர். மேலும் பாணரின் உறவினர் தம்குலத்துப் பாணர் யாழில் பாடுவதால்தான் திருஞானசம்பந்தர் பாடல் பரவுகிறது என முகமனுரை கூறினார்கள். அவ்வுரை கேட்டுத் திடுக்கிட்ட திருநீலகண்ட பெரும்பாணர் பிள்ளையாரின் திருவடிகளில் விழ்ந்து வணங்கி,

திருப்பதிகங்களின் இசை அளவில் அடங்காதபடி ஒரு திருப்பதிகம்பாடியருள வேண்டும் என வேண்டினார்.

திருப்பதிகத்தின் இசை கருவியில் அடங்காதபடி 'மாதர் மடப்பிடி' எனத்தொடங்கும் திருப்பதிகத்தைப் பிள்ளையார் பாடினார். யாழில் இசையடங்காமை அறிந்து பாணர் வருத்தமுறவே, இனி இந்த யாழ் பயனில்லை என யாழினினை வீசமுற்பட்டார். பிள்ளையார் யாழினை வாங்கி, "பெருமானின் பெரும்புகழ் யாழில் அடங்குமா? அடங்காது? எனவே இயன்ற அளவு வாசிப்பீர்களாக என்றார். பாணர் யாழினை ஏற்றுக்கொண்டார். இக்காரணம் பற்றியே 'யாழ்முரி' என்னும் பெயர் வந்தது. யாழ்முரி என்பது பண் அன்று இப்பதிகத்துப் பண் யாது என்பது தெரியவில்லை. ஆனாலும் இக்காலத்தில் அடாணா இராகத்தில் பாடுவர். பாணரும் யாழினைப் பெற்றுக் கொண்டு பிள்ளையாருடன் இசைத்து வரலானார்.

### விடம் போக்கியது

திருமருகல் தலத்தை, திருஞானசம்பந்தர் அடியார்களுடன் அணுகினார். வழிபாடாற்றினார். அப்பொழுது வணிகன் ஒருவன் கன்னி ஒருத்தியை அழைத்துக் கொண்டு வரும்போது கோவிலின் அருகில் ஓர் இரவு தங்கினான். நள்ளிரவில் வணிகனைப் பாம்பு தீண்டியது. அவனுடன் வந்த கன்னிப்பெண் மணம் செய்யப் பெறாமையால் அவனைத் தீண்ட முடியாத நிலையில் அழுதாள்.

அவளது கண்ணீரைத் துடைத்து அருள்செய்யத் திருஞான சம்பந்தர் விரைந்தார். பெண்ணிடம் விபரம் கேட்டு அறிந்தார். பின்னர் வருந்தி, பெருமானிடம் அருள்பெற்று, நியாயமான உன் உடன்போக்குக்கு உதவி செய்வேன் என்று,

*"சடையாய் எனுமால் சரன் நீ எனுமால்"*[23]

எனத் தொடங்கும் பதிகம் பாடினார். வணிகனும் விடம் தீர்ந்து உயிர் பெற்றான். பிள்ளையார் இருவருக்கும் திருமணம் செய்து வைத்தார்.

**வாசி தீரக் காசு பெறுதல்**

அக்காலத்தில் மழையின்மையால் பஞ்சம் உண்டாயிற்று. உயிர்கள் பசியால் வருந்தும் சமயம், திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் தலயாத்திரையாக, திருவீழிமிழலை வந்தனர். பஞ்சத்தால் யாது செய்வது என வருந்தித் துயில் கொண்டனர்.

இறைவன் கனவில் தோன்றி, உங்கள் வருத்தம் போக்கும் பொருட்டு இப்பஞ்சம் நீங்கும் வரை நாள்தோறும், கிழக்கு மற்றும் மேற்குப் பீடத்தில் காசுதருகிறோம். அதனைக் கொண்டு பஞ்சம் போக்குவீர் எனக்கூறி மறைந்தார்.

இறைவன் கனவில் கூறியபடி கிழக்குப் பலிபீடத்தில் இருந்த காசினைத் திருஞானசம்பந்தரும், மேற்குப் பலி பீடத்தில் இருந்த காசினைத் திருநாவுக்கரசரும் எடுத்துப் பஞ்சம் போக்கினர்.

திருநாவுக்கரசர் மடத்தில் விரைவான உணவு படைக்கப் பட்டது. மக்கள் மகிழ்ந்தனர். திருஞானசம்பந்தர் மடத்தில் காலதாமதமாக உணவு வழங்கப்பட்டது. காரணத்தை ஞானசம்பந்தர் கேட்டபோது நமது காசு வாசியுடையதாக உள்ளது. கடைகளில் வட்டம் கேட்கிறார்கள் அதனால் கால தாமதமாகிறது என்றனர். அதனைக் கேட்ட திருஞானசம்பந்தர் காசு வாசி தீரும்படி இறைவனிடம் கேட்டுப் பெற்றார்.

*"வாசி தீரவே காசு நல்குவீர் . . . . . . . . . .*
*மாசின் மிழலையீர் ஏசல் இல்லையே"*[24]

என்று திருப்பதிகம் பாடி நல்ல காசினைப் பெற்றார். சில நாள்களில் பஞ்சம் நீங்கியது.

**மறைக்கதவம் அடைத்தது**

ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடைய அரசரும் கூட்டத்துடன் வேதாரண்யம் வந்தனர். திருக்கோயிலை வலம் வந்தனர். கோபுரத்து நுழைவு வாயிலை அணுகினர். அது அடைக்கப்

பட்டிருந்தது. பக்கத்து வாயில் வழியாக மக்கள் வழிபட்டனர். இதன் விபரத்தைத் திருஞானசம்பந்தர் ஊராரிடம் கேட்டு அறிந்தார்.

வடமொழி வேதங்களால் அடைக்கப்பட்ட கதவினைத் திறக்கத் திருநாவுக்கரசரைப் பணித்தார். அரசரும் பதிகம் பாடித் திறந்தார். பின்பு கதவு மூடவும் திறக்கவும் திருஞானசம்பந்தர் "சதுரம் மறைதான்"[25] எனத் தொடங்கும் பதிக மிசைத்தார். கதவு திறக்கவும் மூடவும் செய்தது. மக்கள் மூல வாயில்வழியாகச் சென்று வழிபாடியாற்றி வரலாயினர்.

**மதுரைக்குச் செல்லல்**

பாண்டி நாட்டினைக் கூன் பாண்டியன் என்பான் ஆண்டு வந்தான். அவன் சமணர்களின் சூழ்ச்சியில் சிக்கிச் சமணனானான். பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும், சைவத்தில் இருந்து வரலாயினர். சமணர்களின் தொல்லை பெருகவே, பரிசனங்கள் மூலம் பிள்ளையாரை மதுரைக்கு அழைத்தார் மாதரசி.

மதுரைக்கு வந்த பிள்ளையாரை அமைச்சரும், அரசியும் மகிழ்ந்து அழைத்தனர். சைவசமயத்தைப் பெருக்க வருகை தந்த பிள்ளையாரும் அடியவரும் தங்கிய மடத்தைத் தீயிடச் சமணர்கள் மேற்கொண்டனர்.

மன்னனின் ஆதரவுடன் "மந்திரத்தீயால்" நாங்கள் அச்சுறுத்து வோம். சிறுகுழந்தையும் சிவனடியார்களும் அஞ்சி ஓடுவர் எனச் சமணர்கள் கூற அரசன் ஆவது இதுவேயாகில் செய்க என்றான்.

அடியார்கள் மடத்தில் தீ பற்றியது அறிந்த திருஞானசம்பந்தர் பையவே சென்று பாண்டியற்காகவே"[26] எனப் பதிகம் பாடினார். மன்னன் வெட்பு நோயால் வருந்தினான்.

**திருநீற்றின் பெருமை**

மன்னன் துயர்கண்டு அரசியாரும், அமைச்சரும் கலங்கினர். சமணர்கள் பலவகையில் நோய் நீக்க முயன்று தோற்றனர். நிறைவாக அரசியாரின் வேண்டுதல்படி திருஞானசம்பந்தர் வந்தால்தான் இந்நோய் நீங்கும் என அரசன் உணர்ந்தான். திருஞானசம்பந்தர் வந்து திருநீற்றை மன்னனுக்கு அளித்து, வயிற்றில் திருநீற்றைப் பூசினார்.

மன்னன் நோய் நீங்கினான். தலைமேல் கைகுவித்துப் பிள்ளையாரை வணங்கினான்.

**அனல்புனல் வாதம்**

தருக்க வாதத்தில் வெல்ல இயலாது என உணர்ந்த சமணர்கள் தீயிலும் நீரிலும் வெல்ல முடிவு செய்து திருஞான சம்பந்தரை அனல், புனல் வாதத்திற்கு அழைத்தனர்.

நெருப்பு மூட்டி அதில் அவரவர் தம் கருத்தை ஓலையில் எழுதி இட வேண்டும். அது வேகாமல் இருந்தால் அவரே வென்றவராவர்.

திருஞானசம்பந்தர் தாம்பாடிய திருமுறைகளில் கயிறு சாற்றிப் பார்த்தார். "போகமார்ந்த பூண்முலையார்" என்ற திரு நள்ளாற்றுப் பதிகம் வந்தது. சிவபெருமான் மெய்ப்பொருள் ஆகில் இவ்வேடு எரியாது என வேண்டி, தீயிலிட்டார். "தளர் இளர் வளர் ஒளி" என்னும் பதிகம்பாடி வழிபட்டார். சம்பந்தப் பெருமானாரின் ஏடு தீயில் எரியவில்லை. பச்சையாய் விளங்கியது. சமணர்கள் இட்ட ஏடு சாம்பலானது. திருஞானப்பிள்ளையார் வென்றார். அவர் எழுதியிட்ட ஏடு பச்சையாக விளங்கியதால் பச்சைப்பதிகம் எனத் திருநள்ளாற்றுப் பதிகம் அழைக்கப்பெற்றது.

**புனல் வாதம்**

இரு திறத்தாரும் தம் சமண உண்மைகளை ஏட்டில் எழுதி ஆற்றிலிட வேண்டும். ஏடு வெள்ளத்தில் செல்லாது எதிர் சென்றால் அவரே வென்றவராவர். இதுவே புனல் வாதம் ஆகும்.

சமணர்கள் போட்டிக்குத் தயாராயினர் – அமைச்சர், எல்லாப் போட்டிகளிலும் திருஞானசம்பந்தர் வெற்றி பெற்றுவருகிறார். தோற்றவர்கள் தோல்விக்கு அடையாளம் பெறும் இழப்பு யாது ? என்பதைக் கூறுங்கள் என்றார்.

அது கேட்ட சமணர்கள் சினம் மிகுந்து யாம் இவ்வாதில் தோற்றால் கழுவேற்றலாம் எனக் கூறினர். அரசன் வைகையாற்றில் அவரவர் ஏட்டினை இடப் பணித்தான்.

சமணர்கள் 'அஸ்தி நாஸ்தி' என்ற வடமொழி வசனம் எழுதி ஆற்றிலிட்டனர். அவ்வேடு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. சம்பந்தர் "வாழ்க அந்தணர்" எனத் தொடங்கும் பாடலை எழுதி

அவ்வேட்டினை வைகையாற்றில் இட்டார். அவ்வேடு வெள்ளத்தை எதிர்கொண்டு சென்றது. அதனைக் காண அமைச்சர் குதிரை ஏறிச் சென்றார். ஏடு, ஏடகம் என்ற இடத்தில் கரையேறியது. சமணர்கள் வெட்கம் கொண்டு தாமேசென்று கழுவேறினர். திருஞானசம்பந்தர் சமணர் மாட்டுச் சிறிதும் பகைமை இல்லாதவர். எனவேதான் வாதத்திற்குத் தண்டனை ஏதும் அவர் விளம்பவில்லை. நிறைவில் மன்னன் சைவசமயம் சார்ந்தான். மக்கள் மகிழ்ந்தனர்.

**ஓடம் ஓட்டியது**

பாண்டி நாட்டுத்தலங்களை வணங்கிய பின்பு திருஞான சம்பந்தர், முள்ளியாற்றங்கரை வந்தார். அப்பால் உள்ள திருக்கொள்ளம் பூதூர் இறைவனை வழிபட விரும்பினார்.

கரையில் உள்ள ஓடத்தில் அடியார்களுடன், தாமும் ஏறினார். "கொட்டமே கமழும்"[27] என்னும் பதிகம் பாடினார் ஓடம் தானே அக்கரை சேர்ந்தது. அடியார்களுடன் ஆலயம் சென்று வழிபட்டார்.

**புத்தரை வாதில் வென்றது**

திருஞானசமபந்தர் திருத்தெளிச்சேரியை அடைந்தார். புத்தர்கள் அதிகம் வாழும் போதி மங்கையில், புத்தர்கள் புத்தநந்தி என்பவனிடம் வாதில் வெல்ல அழைத்தனர்.

அடியவர் ஒருவர் "புத்தர் சமண் கழுக்கையர்"[28] என்னும் திருஞானசம்பந்தர் பாடிய பாடலைப் பாடினார். புத்த நந்தி தலையில் இடி விழுந்தது. புத்தர்கள் அஞ்சினர். பின்பு சாரிபுத்தன் என்பானுடன் அடியவர் வாதில் வென்றனர். பிள்ளையாரின் அடியவரே வாதில் வென்றதை அறிந்த புத்தர்கள் பிள்ளையாரின் திருவடியில் வீழ்ந்து வணங்கினர்.

**ஆண்பனையைப் பெண் பனையாக்கியது**

திருஞானசம்பந்தர்பிரான் அடியார்களுடன் திருவோத்தூர் என்ற தலத்திற்கு வந்தார், அங்கு உள்ள சமணர்கள், இவ்வாலயத்திற்கு எண்ணெய்க்கு எனச் சிவனடியார்கள் வளர்த்த பனைகள் எல்லாம் ஆண்பனையாயின என்றும் திருஞானசம்பந்தரால் பெண் பனையாக்க முடியுமா ? என வினாவெழுப்பி இகழ்ந்துரைத்தனர்.

இகழ் மொழி கேட்ட பிள்ளையார் இறைவனை வணங்கி "பூத்தேர்ந்து ஆயன"[29] எனத் தொடங்கும் பதிகம் இசைத்தார். பதிகம் நிறைவில் பனைகள் பெண்பனைகளாயின. அடியார்கள் மகிழ்ந்தனர். சமணர்கள் சைவம் சார்ந்தனர்.

**எலும்பைப் பெண் ஆக்குதல்**

திருஞானசம்பந்தர் அடியார்குழாமுடன் மைலாப்பூர் வந்தார். மைலாப்பூரில் சிவநேசர் என்பவர் வாழ்ந்து வந்தார். இவர் திருஞானசம்பந்தர் மீது அளவற்ற பக்தி கொண்டு தம் மகளான "பூம்பாவையை" மணம் தர உறுதிபூண்டு வளர்த்தார். பூம்பாவை, பருவம் எய்தி வந்தார். ஓர் நாள் பூப்பறிக்க வந்தபோது பூ நாகம் கடித்து இறந்தார்.

சிவநேசர் மனம் வருந்தினார். ஆனால் தாம் உறுதி செய்தபடி பூம்பாவை சம்பந்தருக்கே சொந்தம் எனக்கருதி, இறந்தாலும் அவளது எலும்பையும் சாம்பலையும் கலயத்தில் வைத்துக் கன்னிமாடம் அமைத்துப் பூசனை செய்து வந்தார்.

திருஞானசம்பந்தர் திருவொற்றியூரிலிருந்து மைலாப்பூர் வருவதறிந்து மகிழ்ந்து எதிர்கொண்டழைத்து வணங்கினார். பிள்ளையாரிடம் தம் மகள் பூம்பாவை குறித்து விபரம் கூறினார். திருஞானசம்பந்தர் பூம்பாவைக் குடத்தினை எடுத்து வரக்கூறினார். சிவநேசரும் கொணர்ந்தார்.

ஆளுடைய பிள்ளையார் குடத்தைப் பார்த்து மைலாப்பூர் இறைவனை வேண்டி "மட்டிட்ட புன்னை"[30] எனும் பதிகம் இசைத்தார். பருவ வயது நிறைந்த மகளாகப் பூம்பாவை குடத்தில் இருந்து வெளி வந்தார். அனைவரும் மகிழ்ந்தனர்.

சிவநேசர், பிள்ளையாரிடம் என் மகவு உமது உடைமை; ஏற்றருளும் என்று பணிந்தார். திருஞானசம்பந்தர், நீ பெற்ற பெண் விடத்தினாள் இறந்து விட்டாள். இறைவன் திருவருளால் நாம் பிறப்பித்தோம். ஆதலின் இவள் என் மகளாவாள் என்றார். பூம்பாவை, சிவனையே சிந்தித்துச் சிவத்தை அடைந்தார்.

**திருமணம்**

பலபதிகளை வணங்கியபின் சீர்காழி வந்தார் திருஞான சம்பந்தர். பதினாறு வயதை எட்டினார். தந்தையார் சிவபாத விருதையர் மகனுக்கு மணம் முடிக்க எண்ணினார். நல்லூரில் வாழும் நம்பாண்டார் நம்பியின் மகளை மணப்பெண்ணாக்கி நிச்சயம் செய்தனர். பெற்றோரின் மனவுணர்வைப் பிள்ளையார் ஏற்றார்.

நல்லூர் என்ற தலத்தில் பெருமணம் என்னும் ஆலயத்தைத் திருஞானசம்பந்தர் வழிபட்டார். திருமணக் கோலம் பூண்டார். திருநீலநக்கர், திருமணச்சடங்கை மேற்கொண்டார். மணமேடையில் உள்ள மணப்பெண்ணின் மலர்க்கரம் பற்றிய திருஞானசம்பந்தர் ஆலயத்தில் உள்ள இறைவனைப் பாடினார். "நல்லூர் பெருமணம்" எனத் தொடங்கும் பதிகமிசைத்தார்.

ஆலயத்தின் முன்பு பெரும் சோதி உண்டானது. இறைவன் "ஞானசம்பந்தனே நீயும் உன் மனையாளும் உனது திருமணம் காணவந்தோர் யாவரும் சோதியுள்புகுக" என்றார்.

திருஞானசம்பந்தர் மனையாளுடன் "காதலாகி"[31] நமச்சிவாயப் பதிகமிசைத்துச் சோதியுள் புகுந்தார். யாவரும் சோதியுள் புகுந்து பேறுபெற்றனர். இவ்வாறு ஞானசம்பந்தர் அருள் வரலாறு ஓர் அற்புதத்தைத் தமிழ் மண்ணில் நிகழ்த்திக் காட்டியுள்ளது. இனி அவரது பதிகங்களில் பக்தியைக் காணலாம்.

**திருஞானசம்பந்தர் பதிகங்களில் பக்தி**

சங்க இலக்கியங்களில் 'சிவபெருமான்' பற்றிய குறிப்புகள் மிகுந்து காணப்படுகின்றன. பக்தி என்ற உணர்வு காலம் காலமாகத் தமிழகத்தில் இழையோடி வரலாயிற்று எனலாம். அது முதிர்ச்சி பெற்ற காலமே நாயன்மார்கள், ஆழ்வார்கள், காலம் என்றால் மிகையில்லை.

தேவாரங்களை ஓதும் போதும், உருகும்போதும் கனிந்து பக்தியில் படரும் போதும், இறைவனின் பேராற்றலை எண்ணி எண்ணி அவனது, திருவடிகளில் கலக்கும் ஆனந்தம் பெறும் வாய்ப்பைப் பதிகங்கள் தருகின்றன எனலாம். பதிகங்கள் நன்னெறி ஒன்றையே வலியுறுத்துகின்றன. தாம் பெற்ற பேரின்பத்தை

அருளாளர்கள், மக்கள் மாட்டு அளிக்கவே பதிகம் இசைத்தனர். நம் திருஞானசம்பந்தரும் அவ்வாறே பதிகமிசைத்தார் எனலாம். பக்தியுணர்வு இவரது பதிகங்களில் மிளிர்வதைக் காணலாம்.

பக்தியில் மலர்ந்த திருஞானசம்பந்தரின் பதிகங்களில் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுணர்வுடன் மனம்சார்ந்த பாக்கள் மிகுந்துள்ளன எனலாம். சமூகம் வாழ்வதற்காகவே தம் அருள்மொழிகளைப் பதிகங்களாக்கினார். மெய்ப்பொருள் உணர்வை நுகருவதற்கு வழிகாட்டினார். அவ்வகையில் திருஞானசம்பந்தர் காணும் பக்தி முதலில் காதலன் காதலி (நாயக நாயகி பாவனை) முறையாகும்.

**அகப்பாட்டுடன் பக்திநெறி**

இறைவனை அருளாளர்கள் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கருதிப் பாடலிசைத்தனர். இவ்வகைக் கவிதைகளைப் பல அருளாளர்கள் படைப்புகளில் காணலாம்.

கனிந்த உள்ளம் காதல் மிகுதியில், காதலன் காதலி மனவுணர்வுடன் ஒன்றுபடுதலைப்போல இறைவன் பால் கலத்தலை அடியார்கள் மேற்கொண்டனர். இவ்வகை இன்பக்காட்சிகள் பல உண்டு. தொல்காப்பியர் தம் இலக்கணத்தில் கடவுளைத் தலைவனாகக் கொண்டு பாடலிசைப்பதை,

*"காமப்பகுதி கடவுளும் வரையார்*
*ஏனோற் பாங்கினும் என்மனார் புலவர்"*[32]

என்று கூறுகிறார்.

திருஞானசம்பந்தர் 14 பதிகங்களை அகப்பொருள் தழுவிப் பதிகம் இசைத்துள்ளார். தனிப்பாடல் ஒன்றினையும் பாடியுள்ளார். முதற்பதிகத்தில் அகப்பொருட் குறிப்பில் பக்தியில் பாடுகிறார். "என் உள்ளம் கவர் கள்வன்" என்று தன் உள்ளம் கவர்ந்து சென்ற தலைவனைத் தலைவி ஒருத்தி அடையாளம் காட்டுவதாகப் பாடியது உணரலாம்.

*தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்*
*காடுடைய சுடலைப் பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்*
*ஏடுடைய மலரான் முனைநாட் பணிந் தேத்தவருள் செய்த*
*பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மானி வனன்றே*[33]

இப்பாடலில் என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வனாகிய சிவபெருமான் பிரமாபுரம் மேவிய பெம்மான். அவன் தோடு உடைய திருச்செவியினன். விடையேறிவந்தனன். தலையில் தூய வெண்பிறை சூடியவன். திருநீற்றுப் பூச்சினை உடல் முழுதும் உடையவன். பிரம்மன் முன்னை நாளில் வழிபட அவனுக்கு அருள்செய்தவன். பெருங்கருணையாளன் என்று தலைவி உரைப்பதுபோல உரைக்கிறார். இவ்வாறு இப்பதிகம் முழுதும் காதல் மிகுதியில் காதலி தலைவனின், மாட்சியை எண்ணி உருகுவதாக அமைந்துள்ளது.

நாயக நாயகி முறையில் இறைவனிடம் பக்தியைச் செலுத்தும் பாங்கு அளப்பரிய சிறப்பு மிக்கது. பேரன்புமிகு பக்தி வெளிப்பாடே இப்பாடலாகும். திருக்கடைக்காப்பில் "ஒரு நெறியமனம் வைத்துணர் திருஞானசம்பந்தன் உரைசெய்த திருநெறிய தமிழ்"[34] என்ற அழகுமிகுதொடரைத் தம்பதிகத்தில் பதிக்கிறார் பாலறாவாயர்.

அகப்பொருள் நெறியில் இறைவனை அடைந்து அனுபவிக்கும் உயர்ஞானச் சிவசெந்நெறியின் மூலவித்தாகவே இப்பதிகம் கருதத்தக்கதாக உள்ளது. திருநெறி என்று தம்பக்தி மார்க்கத்தைக் குறிப்பிடுவது போற்றுதலுக்குரியதாகும். ஆன்மாவானது ஆண்டவனுடன் கலத்தலை வெகு சிறப்பாகப் பதிவு செய்கிறார். இவ்வாறு உயிர்த்துணையான இறைவனோடு கலத்தலைக் குறிக்கோளாக அடையும் நெறியே திருநெறி என்ற குறிப்பு நினைத்து நினைத்துக் காதலிக்கத்தக்கதாகும். இவ்வாறு திருஞானசம்பந்தர் முதற் பதிகத்திலேயே தலைவி, தலைவன் உள்ளம் கவர்ந்த செய்தியை உரைப்பதாக உள்ளது. தலைவி கூற்றாகத் திருஞானசம்பந்தர் பாடலடிகள் பக்தியின் உச்சத்திற்கு நம்மைத் தோரணம்கட்டி வரவேற்பதை உணரமுடிகிறது.

*"இவன் எனது நெஞ்சம் நிறையழித்த கள்வன்"*[35]

என்று முத்தொள்ளாயிரமும்,

*"யாருமில்லைத் தானே கள்வன்"*[36]

என்று குறுந்தொகையடிகளும் கூறும் பொருளார்ந்த பொன்வரிகளை இங்கு ஒப்பிட்டு மகிழலாம்.

**இயற்கையை நோக்கும் பக்தி**

திருவீழிமிழலையில் வேதங்களை ஓதியும், ஓதுவித்தும் அன்பர்கள் பணி செய்கின்றனர். அருகில் மரத்தில் வாழும் கிளிகள் அவ்வொலியினை அறிந்து தாமும் வேதம் ஓதுகின்றனவாம். அதுமட்டுமல்ல; அக்கிளிகள் வேதம் ஓதுவதுடன் தவறாகக் கற்று ஒலிக்கும் பிள்ளைகளின் வேத ஒலிப்பைத் திருத்தித் திறம்பட வேதத்திற்குப் பொருள் கூறுவதாகத் தமிழுலகம் வியக்கும் அளப்பரிய கற்பனையைப் பக்திப்பனுவலாக்குகிறார் பாலடிசில் உண்ட பாலறாவாயர். தவிர யாருக்கு இத்தகைய பக்தியுணர்வு மிகு கற்பனை வாய்க்கும், பாடலைப் பார்ப்போம்.

*பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும்*
*ஓசைகேட்டு*
*வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட்சொல்லும்*
*மிழலையாமே*[37]

என்று பாடுகிறார்.

**பரவச நிலை**

மனம் இறைவன் புகழ்பாடி அவனது திருவடிகளில் இலயிக்கும் பரமானந்த நிலையே பரவச நிலை எனச் சான்றோர் செப்புவர். திருஞானசம்பந்தர் இந்த ஆனந்தப் பரவச நிலையை இயற்கைப் புனைவுக் குறியீடுகள் மூலம் அளிக்கிறார் எனலாம். அவற்றில் சில,

*"சேறாடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு*
*வேறாய உருவாகிச் செவ்வழி நற்பண்பாடும் மிழலையாமே"*[38]

என்ற பாடலின் உட்பொருள் பரவசநிலையை விளக்குவது எனக் கொள்வதில் தவறேதுமில்லை. சேற்றில் மலர்ந்த செங்கழுநீர் பூவில் உறவாடி மகிழ்ந்த வண்டுகள் அப்பூவில் உள்ள மதுவினை உண்டு தம்நிலை மாறிச் செவ்வழிப்பண்பாடுவது இதன்நேர் பொருளாகும்.

மானிடன் இறைவனை அடைய அன்பு வழி மேற்கொள்ள வேண்டும். மலம் நிலை இவ்வாழ்வினை முதலில் நீக்கிட இறைவன் புகழ் அவசியமாகிறது. அவனருள் கிட்டியவுடன் நம் ஆணவ, கன்ம, மாயை நீங்க, இறையின்பம் மதுவாக நமக்குக் கிடைக்கிறது. அந்த ஆனந்த நிலையில் நம் உடல் வேறாகி இறைநிலையை அடைந்து

ஆனந்தப் பரசவமடையும் என்ற உட்கருத்தைப் பக்தி நோக்கில் இயற்கையோடு ஒப்பிட்டுப் பாடுகிறார் ஞானசம்பந்தர் என்று நாம் காணுவதே பக்தியுணர்வாகும்.

வண்டு பூக்களில் தேனுண்டு மயங்கிவிடுவது இயல்பான இயற்கை நிகழ்ச்சியாகும். இங்குத் திருஞானசம்பந்தர் பரவசநிலைக்கு வண்டு தேனுண்டு மயங்கியதையும், நாம் இறைவனை இமைப் பொழுதும் நீங்காது அவன் நாமத்தை ஒலிக்கவேண்டும் என்பதை வண்டு பாடியதையும் அவர் உள்ளுறையாகப் பாடுவதாகக் கொள்ளலாம்.

மனித இனம் இறைப் பக்தியை உணர்ந்து வழிபாடாற்ற வேண்டும். அவ்வாறு பக்தியில் வாழ்க்கை நடத்தினால் இறைவன் தானே வந்து அருள் தருவான் என்பதைத் திருஞானசம்பந்தர் பதிகங்கள் பல உலகிற்கு உணர்த்துகின்றன.

சம்பந்தர் சிறுகுழவி; திருநெறிய தமிழைப் பொழியும் இளம்மேகம்; ஒளிதரும் இளம் ஞாயிறு அவர் இயற்கைக் காட்சிகளைப் பார்த்து வர்ணிப்பதில் இப்பெருந்தகையார் மற்றையாவரினும் மேம்பட்டு விளங்குகிறார். இதனை அனைத்து அறிஞர்களும் ஏற்பர். அவ்வாறு இயற்கையினும் உள்ளார்ந்த பக்தியுணர்வு அவரது பதிகங்களில் மிளிர்கிறது.

**இறைவன் கழலே இன்பம்**

நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனாம் தில்லைச் சிற்றம்பலத்தில் மாறாப் பேரன்பு கொண்ட ஞானசம்பந்தர் பெருமானைப் புகழ்ந்து பதிகங்கள் பாடுகிறார். அப்பதியில்,

*நிறைவெண் கொடிமாடநெற்றி நேர்தீண்டப்*
*பிறைவந்திறைதாக்கும் பேரம்பலந்தில்லைச்*
*சிறைவண்டறையோவாச் சிற்றம்பலமேய*
***இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே***[39]

என்று பாடுகிறார். கொடிகளுடன் கூடி மாடங்களும் பிறை நிலவினைத் தொடும் பேரம்பலத்தில்லையில் திருச்சிற்றம்பலத்துள் நடனமிடும் நடராசப்பெருமானின் திருக்கழல் அணிந்த குஞ்சிதபாதமே; ஊன்றிய பாதமே இன்பத்துள் இன்பம் தரும் என்று ஞானக்குழந்தை

ஞானப்பேரானந்த இன்பத்தை விவரிக்கிறது. இவ்வுணர்வு பக்தி மேம்பாடாகும்.

பக்தி என்பது எண்ணமும், செயலும் ஒன்றுபட்ட ஒருநிலைத் தன்மை எனலாம். அறிவும், மனமும் ஒன்றுபட்டு மனவுணர்வு பொங்கி, ஆன்ம நேயம் மிகுந்து பேரானந்த உணர்வில் எதையும் காணும் நிலை என்று கருத இடமுண்டு.

பாண்டியன் இராசசேகரன் மதுரையில் எல்லாக் கலைகளும் கற்று ஆட்சிப் பீடத்தில் கோலோச்சினான். அவன் ஆடற்கலை பயிலவில்லை. ஆடற்கலையையும் ஆண்டவன் அருளோடு, பயில முற்புட்டான். பயிற்சியும், கலையார்வமும் மேலோங்கின. உடல் உபாதையும் பெருகியது. ஓர்நாள் மதுரையம்பலத்தில் ஆடும் ஈசனிடம் மனம் போக்கினான். அப்பனே! மூர்த்தியே! உலக நன்மைக்காக நட்டம் பயின்றாடும் ஈசா! உன் வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி நின்று கொண்டிருக்கிறாயே! உன் கால் வலிக்கவில்லையா? ஐயா. எனக்காகக் கால்மாறி ஆடி உன் வலி போக்கிக்கொள் என்று கதறினான். இவன் ஆடற்கலைக் கற்றுவருவதால் வரும் வலியுணர்வை ஆண்டவன்மாட்டு வேண்டினான். பெருமான் நகைத்து மேலும் நடனமிட்டார்.

பாண்டியன் தன்மாட்டுக் குற்றம் ஏதுமுண்டோ? எனத் தன் உயிர் நீக்க வாளை ஓங்கினான். என்ன அதிசயம்!பெருமான் கால்மாறி ஆடினார். பாண்டியன் மகிழ்ந்தான். இன்றும் மதுரை வெள்ளியம்பலத்தில் நடராசர் கால் மாறி நடனமிடுவதை நாம் காணுகிறோம். இதுதான் பக்தியின் வெளிப்பாடு. பாண்டியன் தன்மன உணர்வைக் கடவுளிடத்துக் காட்டினான். பெரும்பக்தி இராசசேகரப் பாண்டியனிடம் வெளிப்பட்டது. அது போலவே ஞானசம்பந்தர் உலக இன்பங்களில் சிறந்தது சிற்றம்பலத்து இறைவன் திருவடியே இன்பம் என்று பக்தி மேம்பாட்டால் பாடுவது அறியலாம்.

**தீவினைகள் நீங்கிட ஞானசம்பந்தர் கூறும் பதில்**

பூக்களைக் கொண்டு சிவனைப் பூசிக்க வேண்டும். குளத்து நீரினைக் கொண்டு இறைவனைக் குளிரூட்ட வேண்டும். எப்பொழுதெல்லாம் என்றால் காலை மாலை இரவு என்று பாராது எப்பொழுதும் மலரினைப் பறித்து இறைவன் திருவடியில் இட்டுப்

போற்ற வேண்டும். எவ்வாறு போற்ற வேண்டுமாம்! குடிக்க நீரினையும், வாழ்வதற்கு இவ்வுலக வாழ்வையும் தந்த தலைவனே! முப்புரங்களை ஆணவம், கன்மம், மாயை ஆகியனவற்றைக் கொண்ட அரக்கவுணர்வை அம்பு தொடுத்து எரியுண்ணச் செய்தவரே! எம்மாட்டு உள்ள தீய குணத்தையும் எரித்துவிடு; தீவினைகளை நீக்கு என வேண்டினால் நமக்குத் தீவினைகள் அண்டாது நலமாய் வாழலாம் என்னும் குறிப்பில்

*காவினை இட்டும் குளம்பல தொட்டும் கனிமனத்தால்*
*ஏவினையால் எயில் மூன்றும் எரித்தீர் என்று இருபொழுதும்*
*பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாம் அடியோம்*
*தீவினை வந்து எமைதீண்டப் பெறா திருநீலகண்டம்*[40]

என்று தெள்ளுதமிழில் தீஞ்சுவைப் பாடலில் பதிவு செய்கிறார். இது பக்தியின் வெளிப்பாடாகும். திருஞானசம்பந்தர் கொடிமாடச் செங்குன்றத்து ஈசனிடம் பக்தி முனைப்பில் நம்பிக்கை ஒளியில் பாடியதே இப்பாடல் உள்ளடக்கிய பதிகமாகும். இப்பதிகம் முழுவதும் தீவினை நம்மை நாடாது என்று தெளிவுபடுத்தி ஞானசம்பந்தன் இன்தமிழைப் பாடும் அடியார்கள் தேவலோகத்தில் சிவனொடு ஒன்று சேர்வர் என்று அறுதியிட்டுத் திருக்கடைக்காப்புச் சாற்றியுள்ளார்.

**வாழ்க்கைக்கு வழி காட்டுபவர் யார்?**

திருஞானசம்பந்தர் சோழநாட்டுக் கோடிகா (கோடிக்காவல்) என்ற தலத்திற்குச் சென்று வாழ்விற்குரிய வழியை விளக்குகிறார். எவ்வாறு விவரிக்கிறார் என்று பார்ப்போம்.

*இன்றுநன்று நாளைநன்று என்று நிறை இச்சையால்*
*பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்*
*மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்*
*கொன்றைச் சோதியான் கோடிகாவு சேர்மினே*[41]

என்று இக்காலமக்களுக்கு விடைபகர்வது போல ஆழ்ந்த பக்தியில் பாடல் இசைக்கிறார். நேற்றுவரை துன்பப்பட்டவர் இன்று நல்ல நாளாக இருக்கும் என்றும் இன்றும் துன்பமே கண்டவர் நாளை நல்ல நாளாக அமையும் என்றும் இப்படி எதிர்பார்ப்புடனும், இச்சையோடும் சுழலும் வாழ்வினை வெறுக்காதீர்; மின்னல் போன்ற ஒளிவிடும் சோதியானவன், வெண்மதி சூடியவன், கங்கையைத் தலையில்

அணிந்தவன், கொன்றை மாலையணிந்த கோடிக்கா இறைவனை அடைந்தால் வாழ்வின் சிறந்த ஒளி கிடைக்கும். நல்வழியுடன் நலமாய் வாழலாம் என்று பாடுகிறார்.

கோடிக்கா தலப்பதிகத்தில் திருக்கடைக்காப்பில் கோடிக்காவில் உறையும் சிவபெருமானை, கல்வி, கேள்விகளில் சிறந்த திருஞான சம்பந்தர் பாடிய பாடல்களைப் பாடினால் அடியார்கள் பாவங்கள் கெட்டு ஒழியும் என்று கூறுகிறார். பக்தியுணர்வில் நமக்கு மனித நேயத்தொடு பதிலுரைப்பது போற்றுதலுக்குரியதாகும்.

**தற்குறிப்பேற்றத்தில் பக்தியுணர்வு**

கவிஞர்கள் தம் கருத்தை இயற்கையாக நிகழும் நிகழ்வில் ஏற்றிக் கூறுவதைத் தற்குறிப்பேற்ற அணி என்று அணியிலக்கணம் புகலும். இங்குத் திருஞானசம்பந்தர் இயல்பாக நிகழும் விலங்கினங்களின் காட்சியில் பக்தியை வெளிப்படுத்துகிறார்.

திருவலிதாயம் தலத்தில் மந்திகள் வந்து கடுவனொடு ஈசனை வணங்கித் தொழுகின்ற மாண்புமிகுகாட்சியை அழகாகப் படமிட்டுக் காட்டுவது போலத் தற்குறிப்பேற்றத்தில் பதிகம்வழிப் படமிடுகிறார்,

*புந்தியொன்றி நினைவார் வினையாயின தீரப் பொருளாய*
*அந்தியன்ன தொரு பேரொளியான் அமர் கோயில்*
*அயலெங்கும்*
*மந்தி வந்து கடுவன்னொடுங்கூடி வணங்கும் வலிதாயஞ்*
*சிந்தியாத அவர் தம்மடும் வெந்துயர் தீர்தலெளிதன்றே*[42]

என்று பாடுகிறார். பறவை (வலியன்குருவி) வழிபட்டுப் பேறு பெற்ற வலிதாயத்தில் விலங்கினமான கடுவனும் மந்தியும் கூட்டு வழிபாடாற்றும் போது ஆறறிவுள்ள மானிடர்கள் வழிபடாது நிற்பானேன்? வழிபடுங்கள் என்னும் குறிப்பில் பக்தியுணர்வுடன் பதிகமிசைக்கிறார். குரங்குகள் கூட்டுவழிபாடு, செய்யும் கற்பனை யுள்ளம் கலைமலி ஞானசம்பந்தரால் மட்டுமே இயற்ற இயலும். அளவளாவிப் போற்றும் பெருமைமிக்கது. இது பக்தி யுணர்வின் வெளிப்பாடே ஆகும்.

திருக்கடைக் காப்பில் திருஞானசம்பந்தர் தன் பாடல்களை இசையுடன் பாடி வழிபாடாற்றுபவர்கள் வானத்து உயர் வாழ்வரே

என்று கூறுகிறார். மேலோனைப் பாடினால் நாமும் மேலோராவோம் என்ற குறிப்பில் விவரிக்கும் திருஞானசம்பந்தர் மந்திகடுவன் வழியாகப் பக்தியையூட்டுகிறார்.

**யானைகளின் பக்தி**

காளையார் கோயில் என வழங்கும் கானப்பேர் என்ற தலத்தில் காடுகள் நிறைந்துள்ளன. காட்டில் யானைகள் வாழ்கின்றனவாம். அவை ஆணும் பெண்ணுமாக அதிகாலையில் எழுந்து விடுகின்றனவாம். பொய்கையில் மூழ்கி விதியினால் வழிபாடு செய்கின்றனவாம். இங்கு மணிவாசகரின் வாக்கைச் சிந்திக்காமல் இருக்க முடியாது. ஆம் மணிவாசகர் திருவாசகத்தில்,

*"மூலபண்டாரம் வழங்கினான்*
*வந்து முந்துமினோ"*[43]

என்று கூறுவது போல, யானைகள் இங்கு வழிபட முந்துகின்றனவாம். இப்படிப்பட்ட கற்பனை நயத்தைக் கொண்ட இவரது தமிழ், மக்களிடத்தில் பக்தியை ஊட்டியது என்று கூறலாம். அப்பாடலில்

*பிடியெலாம் பின்செலப் பெருங்கை மாமலர்தழீஇ*
*விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்*
*கடியுலாம் பூம்பொழிற் கானப்பேர் அண்ணல்நின்*
*அடியலால் அடைசரண் உடையரோ அடியரே*[44]

என்று யானைகள் ஆறறிவு கொண்ட மனிதன் செய்யவேண்டிய பக்தியை விதியால் செய்வதாகத் திருஞானசம்பந்தர் பக்தி நயத்துடன் பாடிமகிழ்கிறார்.

*உள்ளத்தில் உள்ளது கவிதை - இன்ப*
*உருவெடுப்பது கவிதை*[45]

என்ற இக்காலக் கவிஞரின் செயலை மெய்ப்பிப்பதாக உள்ளது. திருஞானசம்பந்தரின் உள்ளமான பக்தியில் எப்போதும் உலாவரும் தன்மைமிக்கது. மேலும் உமாதேவியின் திருமுலைப்பால் அடிசில் அவரை இமைப்பொழுதும் சிவன் சிந்தை மாறாத தன்மையைத் தருவதால் அவரது இசைப்பாடல்களில் முழுதும் பக்தியுணர்வு இழையோடுகிறது.

**வேழப் பூசை**

குற்றாலத்தில் யானைகள் குறும்பலாவீசரைப் போற்றித் துதிப்பதைத் திருஞானசம்பந்தர் பதிவுசெய்கிறார். மேகங்கள் கொஞ்சும் பொதிகைமலை; தாவரங்கள் தாலாட்டும் குற்றால மலையில் அருவிகள் அழகாக ஆர்ப்பரித்துக் கொண்டு வீழ்கின்றன. வேங்கை மரங்கள் அணிசேர்க்கின்றன. அம்மரங்களில் கொத்துக் கொத்தாய்ப் பூத்துள்ள மலர்களை, யானைகள் மத்தகத்திலே சூடிக் கொண்டு குறும்பலா ஈசரின் புகழ் பணிந்து வணங்கும் அற்புதக் காட்சியைப் பக்திச் சுவையுடன் திருஞானசம்பந்தர் திறம்படப் பாடுகிறார். வனத்தில் திரியும் பிடியும், களிறும் குறும்பலாவீசனைக் கும்பிடுவதாகப் பாடலிசைப்பது மனிதவர்க்கத்திற்குச் சவால் விடுவதாக உள்ளது எனலாம். விலங்குகளே ஈசனைப் பணிந்து வழிபடும் குற்றாலத்தில் மனிதர்கள் வணங்குவதற்குக் கவி எதற்கு ? குற்றாலத்துப் பதிகத்தைப் பார்ப்போம்.

*"பூந்தண் நறுவேங்கைக் கொத்திறுத்து மத்தகத்திற்*
*பொலிய ஏந்திக்*
*கூந்தற்பிடியுங் களிறுமுடன் வணங்குங் குறும்பலாவே"*[46]

என்று பதிகம் பாடிக் கடைக்காப்பில் இப்பதிகத்தைப் பாடிக் குற்றாலத்துக் குறும்பலாவீசனாரை வழிபடும் அன்பர்கள்,

*"தம்பால தீவினைகள் போயகலும் நல்வினைகள்*
*தளராவன்றே"*[47]

என்று அன்பர்களுக்குத் தீவினைகள் அகலும் என்று அறிவிக்கிறார். பார்க்கும் இயற்கையையும், விலங்குகள் பறவைகளையும் பக்தி மார்க்கத்தில் ஒழுகுவதாகத் திருஞானசம்பந்தர் காணுகிறார். இது அவரது பக்திப் பெருநோக்கை நமக்கு வெளிப்படுத்துகிறது எனலாம். யானைகளிடம் மட்டும்தானா பக்தியைப் பார்க்கிறார். இதோ மந்திகளிடம் உள்ள பக்தியுணர்வைப் பாடுவதை அடுத்துக் காணலாம்.

**திருமுது குன்றில் மந்திகளின் பக்தி**

தீந்தமிழ்பாடும் திருவாளர் திருஞானசம்பந்தப் பெருமான் திருமுதுகுன்றத்து ஈசனைத் தொழச் செல்கிறார். அங்கு

மணிமுத்தாறு மகிழ்ந்தோடி வளம் சேர்க்கிறது. ஆறுகள் அருளாளர்களின் பதிகங்களில் குடியேறி அருள் பெறும் பாக்கியம் தமிழகத்து ஆறுகளுக்கு உண்டு. அந்தவரிசையில் மணிமுத்தாறு பெருமைமிக்கதாகும்.

இப்படி மணிமுத்தாற்று வனத்தில் மூங்கில் மரங்கள் நிறைந்துள்ளன. அதில் மந்திகள் விளையாடுகின்றன. சில மந்திகள் குட்டிகளோடு உள்ளன. மேகங்கள் கும்மாளமிட்டு மழைக்காதலியை வரவேற்கின்றன. அம்மழைக்கு அஞ்சிய மந்திகள் மலைக்குகைகளில் ஒளிந்து முகில்பார்த்து விளையாடுகின்றனவாம். சில மந்திகள் மலையேறுகின்றன. இதுவரை வரும் கற்பனைகள் தமிழகத்துக் கவிஞர்கள் மட்டுமல்லாது யாவரும் படைக்கும் இயற்கை வர்ணனைக் காட்சியாகும். இதற்கு ஒருபடிமேல் சென்று சிகரம் வைத்தாற்போல் பக்தியுணர்வில் பாடலைப்புனையும் பேராற்றல் கலைஞானம் மிகு தமிழ்வேந்தர் ஞானசம்பந்தரையே சாரும் எனலாம். ஆம். மந்திகள் மலர் பறித்து முதுகுன்றத்து முதல்வனைத் தொழுகின்றனவாம். என்னே! கற்பனை. என்னே! பக்தி! தமிழ் திருஞானக்குழந்தையின் இதழால் இளமையான இக்காட்சி பக்தியாவதைப் போற்றலாம்.

*எந்தை யிவனென்றிரவி முதலா இறைஞ்சுவார்*
*சிந்தையுள்ளே கோயிலாகத் திகழ்வானை*
*மந்தியேறி யினமாமலர்கள் பலகொண்டு*
*முந்தித்தொழுது வணங்குங் கோயில் முதுகுன்றே*[48]

என்று இயற்கையழகில் மெய்மறந்து பாடிக் கூடவே பூக்களைப் பறித்துக் கொண்டுபோய் முதுகுன்றத்து ஈசனை மந்திகள் பூசிக்கின்றனவே? ஏ மானுடா மந்திகளுக்கு இரங்கும் அந்திவண்ணபிரான் உங்களுக்காகவா இரங்கமாட்டார். வாருங்கள் பூவும் நீரும் கொண்டு பூசிப்போம் முதுகுன்றத்து முதல்வனை என்று அழைப்பதாகப் பாடல் உள்ளதை அறிய முடிகிறது.

இந்தப் பதிகக்கடைக்காப்பில் தான் பாடிய முதுகுன்றத்துப் பதிகத்தைக் கூடிப்பாடும் அடியவர்கள் பிறையார் சடையான் திருவடிப் பிரியாமல் வாழ்வர் என்று பக்திக்கு நம்பிக்கையூட்டுகிறார். அவரின் பக்தி மென்மையாக நம் மனதில் குடியேறுவதைப் இப்பதிகம் உணர்த்துகிறது எனலாம். திருஞானசம்பந்தர் மேலுமொரு அறிவு

விருந்தை ஓவியமாக முதுகுன்றத்துப் பதிகத்தில் வரைகிறார். இக்காட்சி எவ்விலக்கியத்திலுமிலாப் புதுக்காட்சி. இயற்கைச் சூழலில் ஈகைக் காட்சியைக் காட்டுகிறார்.

பக்தியுள்ளாரிடம் ஈகையுண்டு என்பதுதானே இயற்கை. இம்முதுகுன்றில் காந்தள் மலர்கள் கையேந்தி நிற்கின்றனவாம். மூங்கில் முத்துக்களை உதிர்க்கின்றனவாம். அதனை,

*"மதுவாய் செங்காந்தள் மலர் நிறையக் குறை வில்லா*
*முதுவேய்கள் முத்துதிரும் பொழில் முதுகுன்றடைவோமே"*[49]

என்று பூத்திருக்கும் காந்தளையும் முத்துதிரும் மூங்கில்களையும் தற்குறிப்பேற்றமாகத் திருஞானசம்பந்தர் கொடைக்காட்சிகளை அரங்கேற்றியுள்ளார். கூடவே கொஞ்சுதமிழை மிஞ்சும் கவியை இயற்றிப் பத்தியை வளர்ந்துள்ளார். இவ்வீகையினை மேலுமோர் இடத்தில் ஒளிரச்செய்வதைக் காணலம்.

தவமுதல்வராம் சம்பந்தர் பிறந்த சீர்காழிக்குப் பன்னிரு பெயர்களுண்டு. இவற்றில் புறவயம் என்பது சிபி சக்கரவர்த்தியிடம் இந்திரன் பருந்தாகவும், அக்னிதேவன் புறாவாகவும் சென்று சோதிக்க, புறாவின் எடைக்குச் சிபி தன் உடல் தசையை அறுத்து நிரப்பியும் போதாமை கண்டு தானே துலையேறினான். அப்பாவம் போகப் புறாவாகிய தீக்கடவுள் சீர்காழி ஈசனைப் பூசித்தான். அதனால் புறவயம் எனப் பெயராயிற்று அப்பெயர்பெற்ற ஊரில் ஞானசம்பந்தர் அவதரித்தார். அங்கே அவர்,

*"மாதவி மேயவண்டிசை பாட மயிலாடப்*
*போதலர் செம்பொன் புன்னை கொடுக்கும் புறவம்மே"*[50]

என்று பாடுகிறார். குறுக்கத்திக் கொடிகளில் வண்டுகள் இசை பாடுகின்றனவாம். மயில்கள் நாட்டியம் செய்கின்றவாம். புன்னை மரங்கண்டு இரசித்துப் போதலரைச் செம்பொன்னெனக் கொடுக்கிறதாம். கொடைப்பரிசாக, எப்படிப்பட்ட இனிய கற்பனை நயம். பக்தியின் படிக்கட்டே கொடை எனலாம். இப்படி இயற்கையைக்கண்டு பக்தியோடு, பதிகம்பாடும் ஞானசம்பந்தரின் பக்தியுணர்வைப் பாராட்டாமல் அறிவுலகம் இருக்குமா? பாராட்டிப் பொற்றாளைப் போற்றுவோம்.

**எல்லாவுயிருக்கும் அருளும் பிரான்**

திருஞானசம்பந்தர் சீர்காழி நகருக்கு அருகில் உள்ள திருவெண்காட்டு இறைவனை வழிபடச் செல்கிறார். திருவெண்காட்டை,

*"சோமகுண்டம், சூரியகுண்டம் துறைமூழ்கிக்*
*காமவேள் கோட்டம் கை தொழுவார்; கணவரொடும்*
*தாமின்புறவர் உலகத்துத் தையலார்"*[51]

என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சிறப்பிக்கிறார். அவர் சிறப்புடைய முக்குளமாம் சூரிய, சந்திர, அக்கினிக் குளம் பொருந்திய முதுபெரும் பதி என்கிறார். அத்தலத்தின் சிறப்பைத்தன் பதிகத்தில் ஞானக்குழந்தை பக்தியுணர்வில் இயற்கைச் சிறப்பைப் பாடுவதைப் பார்ப்போம்.

தமிழ்ப் பண்ணொடு பரமனின் திருப்புகழைப்பாடப் பசிய இளங்கிளிகள் பனையின்மேல் வாழ்கின்றனவாம். அஃறிணை உயிர்களின் அரன்பக்தியை ஞானசம்பந்தர் உணர்ந்து அருளியுள்ளார். ஓரறிவு உயிர்முதல், பொதுமையாக இறைவன் அருள் செய்கிறான். எறும்புக்கும், கரிக்குருவிக்கும், நாரைக்கும், பன்றிக்கும், காகத்திற்கும் அணிலுக்கும், கழுதைக்கும், காளைக்கும் அருள்தருவான் நம் இறைவன் என்பதை நாம் புராணங்கள் மூலம் அறிந்து பெருமிதத்துடன் பக்தி கொள்கிறோம். அதுபோலவே பெருமிதத்தில் கிளிகள் பரமன் புகழ்பாடுவதாக,

*"பண்மொழியால் அவன் நாமம்*
*பலவோதப் பைங்கிளிகள்*
*வெண்முகில்சேர் கருப்பெண்ணை*
*வீற்றிருக்கும் வெண்காடே"*[52]

என்று மெய்மறந்துப் பதிகம் இசைப்பது பக்தியுணர்வின் பெருமித வுணர்வாகுமன்றோ?

**நிறைவுரை**

திருஞானசம்பந்தர் சைவசமய நெறிகளில் சரியை நெறியில் நின்று சைவ சமய நெறியைப் பரப்பினார். (சற்புத்திரமார்க்கம்) தந்தை மகன்மை முறையில் இவர் இறைவனை வழிபட்டு வரலானார்.

சரியை (சீலம்) நெறியில் விளங்குபவர் சீலமுடையவராய் இருந்து சிவபக்தி செய்ய வேண்டும். மனம், மொழி, மெய் மூன்றும் தூய்மையாக இருந்து நன்மை பயக்கும் செயலில் நிற்க வேண்டும். காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என்ற குற்றங்களைப் புரியாமல் சிவசிந்தனையோடு திகழ வேண்டும். இறைவன்புகழ் பாடுவதே சரியை ஒழுக்கம் எனலாம்.

*"இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்*
*பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"*[53]

என்ற வான்புகழ் வள்ளுவனாரின் குறள் இறைவனுடைய பொருள் பொருந்திய புகழ்தரும் சொற்களைப் பேசி ஒழுகி வந்தால் பிறப்பிற்குக் காரணமாகிய இருவினைகள் அதாவது நல்வினை, தீவினைகள் நம்மை வந்தடையா.

சரியை நெறி வாழ்பவர், நோன்பு, தியானம், யோகம் முதலிய அருள் ஞானம் பெற்று உய்தி பெறுவர். இது கருதியே சரியையில் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம் சரியையில் ஞானம் என்று நான்மை நெறியில் சரியையை வகுத்துள்ளனர். இந்நெறிகளின்படி நின்று ஞானசம்பந்தர் பக்தியை வளர்த்தார்.

பதிகங்கள் தோறும் பாடல்களை அமைப்பதில் ஓர் ஒழுங்கைத் திருஞானசம்பந்தர் திருமுறைகளில் காணலாம். எட்டாம் பாடலில் இராவணன் பற்றியும்; ஒன்பதாம் பாட்டில் அடிமுடிதேடிய வரலாறும், பத்தாம்பாட்டில் சமணசாக்கியர்களின் இறைமறுப்புக் கொள்கையைச் சாடியும் கூறுகிறார். தத்துவநோக்கில் இவ்வைப்புமுறை ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலநீக்கத்தைக் குறிக்கின்றன எனலாம். பதினொராம் பாட்டு திருக்கடைக்காப்பாகும்.

திருக்கடைக்காப்பு என்பது பதிகப்பயன், பாடுபவர் கேட்பவர் அடையும் பயன்களைக் கூறி, தம் ஊர், தமக்கு அடைமொழி கொடுத்து ஒவ்வொரு பதிகத்தையும் பாடுகிறார்.

ஞானசம்பந்தர் பதிகங்களை, நாள்தோறும் பாடிவந்த செய்தியை அவரே பதிவு செய்கிறார். படிப்பவர் பெறும் பயனையும் கூறுகிறார். அதனைப் பல பதிகக் கடைக்காப்புச் செய்யுள்கள் விவரிக்கின்றன.

*நான்மறை நாவன் நற்றமிழ்க்கு இன்துணை*
*ஞானசம்பந்தன் பாடல் பத்தும் வல்லார்போய்*
*வெந்துயர் கெடுதிட விண்ணவரோடும் வீடு*
*பெற்று இம்மையின் வீடு எளிதாமே*[54]

என்பதால் உணரலாம். திருஞானசம்பந்தர் பதிகங்களில் இயற்கைச்சிறப்புகள் மிகுந்தும், இறைவன் பெருமைகள் மலர்ந்தும் விளங்குகின்றன. மேலும், அவரது பதிகங்களில் பத்தியூட்டி மனதைத் தன்வயப்படுத்தும் பேராற்றல் விரவி உள்ளது. இவராலே பதிகப் பெருவழி தமிழுலகில் மலர்ந்து விரிந்ததை அறியமுடிகிறது. இறைவனைச் சடங்குகளால் அடைய முடியாது. பக்தியுணர்வால் எளிதாக அடையமுடியும் என்ற நம்பிக்கையைத் தன் பாக்களின் மூலம் தமிழுலகிற்கு அளித்துள்ளார் என்றே கூறலாம். இதுகாறும் சிந்தித்தவழி திருஞானசம்பந்தர் பதிகங்களில் பக்தியுணர்வு மிகுந்திருப்பதை உணரலாம். மேலும், விரிவு கருதியே, சில பதிகங்களின் சிறப்புகள் மட்டும் சிந்திக்கப்பட்டன.

## குறிப்புகள்

1 பெரியபுராணம் திருஞானசம்பந்தசுவாமிகள் புராணம் பா.26
2 பெரியபுராணம் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் பா.18
3 பெரியபுராணம் தடுத்தாட்கொண்ட புராணம் பா.2
4 பெரியபுராணம் திருநகரச்சிறப்பு பா.17
5 பெரியபுராணம் கண்ணப்பநாயனார் புராணம் பா.13
6 பெரியபுராணம் சண்டேசுரநாயனார் புராணம் பா.12
7 பெரியபுராணம் காரைக்காலம்மையார் புராணம் பா.2
8 பெரியபுராணம் சிறுத்தொண்டநாயனார் புராணம் பா.17
9 பெரியபுராணம் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் பா.44
10 பெரியபுராணம் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் பா.49
11 பெரியபுராணம் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் பா.69
12 பெரியபுராணம் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் பா.59
13 பெரியபுராணம் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் பா.62
14 பெரியபுராணம் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் பா.1
15 பெரியபுராணம் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் பா.63
16 (2:27:5)
17 பெரியபுராணம் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் பா.70
18 ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி பா.17
19 பெரியபுராணம் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் பா.276, 77
20 (1:53:1)
21 (3:26:1)
22 (4:27:1)
23 (2:63:1)
24 (1:50:1)
25 (1:99:1)
26 (3:1:1)
27 (3:90:1)

28 ( பொது 3:10 )

29 ( 1:5:1 )

30 ( 2:18:1 )

31 ( 3:பொது:1 )

32 தொல் – பொருள் –107

33 ( 1:14:1 )

34 ( 1:14:11 )

35 முத்தொள்ளாயிரம் பா.102

36 குறுந்தொகை பா.25

37 ( 1:50:1 )

38 ( 1:50:7 )

39 ( 1:1:1 )

40 ( 1:பொது:1 )

41 ( 2:30:1 )

42 ( 1:16:5 )

43 திருவாசகம்

44 ( 3:10:1 )

45 கவிமணி பாடல்

46 ( 2:12:8 )

47 ( 2:12:11 )

48 ( 2:6:2 )

49 ( 1:6:9 )

50 ( 1:14:27 )

51 சிலப்பதிகாரம் – கனாத்திறமுரைத்த காதை வரி 59–61

52 ( 2:11:6 )

53 திருக்குறள் 5

54 ( 1:76:11 )

# சமூகநோக்கில் திருநாவுக்கரசர் தமிழ்

திருநாவுக்கரசர் சைவசமயத்தில் "மூவர் முதலிகள்" என்று போற்றப்படுபவர்களில் இரண்டாமவராவார். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் சமகாலத்தில் வாழ்ந்து சைவம் பரப்பியவர் களாவர். பெரும்பாலும் அறிஞர்கள் இவர்களது காலத்தை ஏழாம் நூற்றாண்டென்பர். இந்த ஏழாம் நூற்றாண்டில் சைவசமயத்திற்கு இவ்விருவரும் இருகண்களாக விளங்கினர்.

**திருநாவுக்கரசர் தோற்றம்**

தமிழன்னை சுகமாக வாழ்ந்து வந்த நேரத்தில் சமணமும், பௌத்தமும் மேலோங்கின. தமிழகத்துத் தென்பகுதியைப் பாண்டியர்களும், வடபகுதியைப் பல்லவர்களும் கோலோச்சினர். தலைமை அரசுச் சமயமாகச் சமணம் மிளிர்ந்தது. வடமொழி மெல்லமெல்லச் தமிழன்னையின் முடிமணிக்கு வந்த நேரம். மன்னர்களும் வடமொழியை வருந்தி அழைத்து மகிழ்ந்தனர்.

சிவவேள்விகள் தமிழில் செய்யப்படவில்லை. சிறு தெய்வங்களான இந்திரன், வாயு, வருணன், அக்னி போன்றவை மெச்சிப் போற்றப்பட்டன. வழிபாடு வைதிகச் சைவர்களால் போற்றி வணங்கப்பட்டது. தமிழ் வழிபாடு பின்னுக்குத் தள்ளப்பட்ட நேரத்தில் எழுஞாயிராய் முத்தமிழ்த் தலைவராகத் திருநாவுக்கரசர் அவதரித்தார். இது இறைவனின் அருள் விளையாடல்.

முத்தமிழ்த் தரணியை முழுத் தமிழாக்கிடும் விளைநிலமாம் திருமுனைப்பாடி நாட்டிலே, அழகிய சிற்றூராம் திருவாமூரில் புகழனாருக்கும் மாதினியாருக்கும் மகனாக அவதரித்தவர் மருணீக்கியார் என்ற இளமைப்பெயர் கொண்ட திருநாவுக்கரசராவர். இவரது தமக்கையார் திலகவதியாராவர். குலத்துச் சமயமான சைவத்தில் பிள்ளைகள் வளர்ந்தனர்.

திருநாவுக்கரசர் தோற்றத்தைத் தம் பெரியபுராணத்துள் சேக்கிழார் மிக அழகாகப் பதிக்கிறார் அவர்:

*"திலகவதியார் பிறந்து*
*சிலமுறையாண் டகன்ற தற்பின்*
*அலகில் கலைத் துறைதழைப்ப*
*அருந்தவத்தோர் நெறிவாழ*
*உலகில் வரும் இருள் நீங்கி*
*ஒளிவிளங்கு கதிர் போற்பின்*
*மலரும் மருள் நீக்கியார்*
*வந்தவதாரம் செய்தார்"*[1]

என்று தமிழோவியத்தைத் தனித்தமிழில் வரைந்துள்ளார். சைவவுலகு திலகவதியாரை ஆச்சார்ய பீடமாக மதிக்கும் சக்தி மிக்கது. ஏன் குருமூர்த்தியாகவே அவரை வணங்கும், என்றாலும், அப்பரடிகளுக்கு ஒருபடி மேலாக மதிக்கப் பெறுகின்ற திலகவதி யம்மையின் தோற்றத்தைப் பாடும் சேக்கிழார்

*நிகழுமலர்ச் செங்கமல நிறைஇதழின் அகவயினில்*
*திகழவரும் திருவனைய திலகவதியார் பிறந்தார்*

என்று விளக்குகிறார். திலகவதியாரைப் பிறந்தார் என்றும் திருநாவுக்கரசரை அவதரித்தார் என்றும் அருளுகின்ற திறம் நினைத்து நினைத்துப் போற்றும் பேறுடையது எனலாம்.

சேக்கிழார் யார் யாரையெல்லாம் விலைமதிக்கமுடியாத முத்துக்கள், சமயத்தின் வித்துக்கள் என்று எண்ணுகிறாரோ அவர்களையெல்லாம் உலகநியதியாகக் கூறும் சொல்லை இட்டுக் கவிபாடாமல் இறையருளால் பெற்றுக்கவி பாடியுள்ளார். ஆம், திருஞானசம்பந்தரைப் பாடும்போது "சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் செய்தார்" என்றும், சுந்தரமூர்த்தி அவர்களின் தோற்றத்தைப் பாடும்போது "தீதகன்று உலகம் உய்யத் திரு அவதாரம் செய்தார்" என்றும் பாடி இவ்விருவர் தோற்றங்களும் திருநாவுக்கரசர் தோற்றத்தோடு ஒத்துப் பாடவும், சைவவுலகம் அறியவும் வேண்டுமென்பதில் இருவேறுகருத்து இருக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்த தெய்வச்சேக்கிழார் இவ்வாறு தமிழ்ச்சொற்களை உயிர்ச்சொல்லாக்கினார் என்று எண்ணுவது தவறாகாது எனலாம்.

இங்குத் திருநாவுக்கரசர் அவதாரம் செய்தார் என்பதால், மேலிருந்து கீழிறங்கும் பேராற்றல் திருநாவுக்கரசருக்கு உண்டு

என்றும் சிவனருள் கிடைத்த அருளாளர் என்றும் அப்பர் சுவாமிகள் திருக்கயிலாய மலையில் வாகீச முனிவராகத் தொண்டு புரிந்தவர் என்பதையும் உணரலாம். மேலும் இக்கருத்தைச் சரியாக்க, சேக்கிழார் பாடும்,

*திருநாவுக்கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ*
*வருஞானத் தவமுனிவர் வாகீசர்"*[2]

என்ற பகுதி வளம்சேர்ப்பதை அறியலாம். புற இருளைப் போக்கும் கதிரவனாகத் திருநாவுக்கரசர் தோன்றினார். மெய்ஞ்ஞான ஒளியை நல்கும் ஞானாசிரியனாக அவதரித்தார்.

**தமிழ்மொழித் தலைவரானார் திருநாவுக்கரசர்**

திருஞானசமபந்தரும், திருநாவுக்கரசரும் பல தலங்களை வழிபட்டுப் பதிகங்கள் பாடி வழிபட்டுவரும்கால் வேதாரண்யம் என்னும் திருமறைக்காட்டிற்குச் செல்கின்றனர். இதனைச் சேக்கிழார், அழகோவியமாக்குகிறார். தமிழர் தலைவர் திருநாவுக்கரசர் என்று தம் பெரியபுராணத்துள் பதித்துத் தம்மையும் ஓர் தமிழ்த் தொண்டனாக்கி மலர்கிறார். அவர்,

*சண்பை நாடுடைய பிள்ளை*
*தமிழ்மொழித் தலைவரோடு*
*மண்பயில் சீர்த்தி செல்வ*
*மாமறைக் காட்டுவைகிக்"*[3]

என்று பாடித் திருநாவுக்கரசருக்குத் தமிழ்மொழித் தலைவர் என்று பட்டமளித்துப் பாடுவது சிறப்புக்குரியதே ஆகும். தமிழ் மொழித் தலைவர் என்ற தகுதி நம் திருநாவுக்கரசருக்கு மிகவே பொருத்தமாகவுள்ளது.

இளமையில் தமிழ்க்கலைகளை முழுமனதுடன் பயின்றார். நற்றமிழ் பாடிப்பரவினார். இசைப்பாக்களை இரவுபகல் பாராமல் பாடினார். தமிழ்ப்பாடல்களை அரியணையில் அமர்த்தினார்.

*அலகில் கலைத்துறை தழைப்ப*
*அருந்தவத்தோர் நெறிவாழ*[4]

என்று சேக்கிழார் திருநாவுக்கரசர் தோற்றத்திலேயே பல கலைகளைக் கற்றுத்தழைக்கவே அவதரித்தார் என்று முன்குறிப்புத் தந்து பாடியதுபடி தாமும் கலை பயின்றார் தமிழ் வளர்த்தார். தமிழ்

மொழித் தலைவரானார். ஏழாம் நூற்றாண்டிலேயே தன்னேரில்லாத் தமிழை வளர்த்தார்.

**சமணர்களின் இழிவுக்குக்காரணம் தமிழைப் பழித்ததே**

சமணர்கள் அப்பர் காலத்தில் உயர்நிலையில் இருந்தனர். அரசர் சமயம் சமணமாக இருந்துவந்தது. செந்தமிழின் பயனைச் சமணர்கள் அறிய முன்வரவில்லை. இக்கருத்தை அப்பர் காலத்தில் வாழ்ந்த திருஞானசம்பந்தரும் ஏற்கிறார். தம் தேவாரத்தில் இக்கருத்தை அவர் தெளிவுபட உரைக்கிறார்.

*"மந்திபோல் திரிந்து ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயன்*
*தெரிகிலா அந்தகர்"*[5]

என்று அந்நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறார். இக்கருத்தை உள்வாங்கிய அப்பரடிகள் தமிழின் பயனைத்தம் தேவாரத்தில்,

*"வாயிருந்த தமிழே படித்தாளுறா*
*ஆயிரம் சமணு மகிவாக்கினான்*
*பாயிரும் புனலாறை வடதளி*
*மேயவன்னென வல்வினை வீடுமே"*[6]

என்று தம் தமிழ்மொழிப்பற்றை அப்பரடிகள் "வாயிருந்த தமிழ்" என்று வாயார வண்டமிழைப் புகழ்தலை உணரலாம். வாய்மையும் பெருமையும் உடையது தமிழ் என்பது இத்தொடரின் பொருளாகும். மெய்மையும் பெருமையும் உடைய தெய்வத் தமிழையே பயின்று ஆளாக உறாத ஆயிரம் சமணரையும் அழிவின்கட்படுத்தவனும், பாய்கின்ற பெருந்தண்ணீர்வளம் உடைய பழையாறையில் மேவிய பெருமா்ன் என்று கூறுமளவில் நம் வல்வினைகள் கெடும் என்று பாடும் அப்பர், தமிழைச் சிறப்பித்து அதனை உணராத சமணர் என்று கூறுவதால் தமிழ்மாட்டு அவர் கொண்டிருந்த பக்தி விளங்கும். இப்படி தமிழ் மொழிப்பற்றாளராய் விளங்கிய அப்பர் இளமையில் யாவரும் சந்திக்க இயலாத துன்பநிலையைக் குடும்ப வாயிலாக அடைந்துள்ளார்.

**திருவவதாரம்**

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் புகழனாருக்கும் மாதினியாருக்கும் மகனாகப் பிறந்தவர் மருணீக்கியார். இருவருக்கு முன் பிறந்தவரே திலகவதியார் குடும்பம் சைவப்பற்றுடன் நடையிட்டது. மருணீக்கியாரும் திலகவதியாரும் சைவசமயம் சார்ந்தே இருந்தனர்.

**மருணீக்கியார் சமணம் சார்தல்**

திலகவதியாருக்கு மணம் உறுதி செய்யப்பட்டது. கலிப்பகையார் என்பவரை நிச்சயித்தனர். சிலநாளில் கலிப்பகையார் படைநடத்திச் சென்று வடநாட்டில் போர் செய்தார். நீண்ட நாள் போர் நடந்தது. புகழனார் மாதினியார் விண்ணுலகு அடைந்தனர். திலகவதியார் தன் தம்பி மருணீக்கியாருடன் தவித்தார். ஆற்றொணாத் துயரில் அழுந்தினார்.

இந்நிலையில் போர்மேற் சென்ற கலிப்பகையாரும் போரில் வீரமரணம் எய்தினார். வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது போலத் திலகவதியார் நிலை. எந்தையும் தாயும் என்னைக் கலிப்பகையாருக்கு மணம் பேசினர். எனவே நான் அவருக்கு உரிமையாகிவிட்டேன். என் உயிரையும் அவருடன் சேர்ப்பேன் என உயிர்விடத் துணிந்தார். மருணீக்கியார் திலகவதியார் காலில் வீழ்ந்து, தாய் தந்தை போனபின் உம்மை நம்பி இருந்து வந்தேன். நீயும் என்னை விட்டுச் சென்றால் உயிர் தரித்திருக்கமாட்டேன். தங்களுக்கு முன் நான் உயிர் துறப்பேன் என்றார். திலகவதியார் நல்ல தீர்க்கமான முடிவுக்குத் தள்ளப்பட்டார். தம்பிக்காகத் தவநிலை மேற்கொண்டார். அதிகை ஈசனின் அடியாராகித் தொண்டு செய்து ஒழுகலானார். சிறுவயதில் மருணீக்கியார் அறம் பல செய்து வந்தார். தண்ணீர்ப் பந்தல் அமைத்தல், குளம் அமைத்தல், வறியவருக்கு உதவி பல செய்து வந்தார். கொல்லாமை, இரக்கம் பற்றி ஆர்வமாயிருந்தார். அதுவே சமணம் சார்வதற்கு அடிப்படையானது.

மன்னனின் சமயம் சமணமாக இருந்தது. மக்களிடம் சமணக் கருத்துக்கள் நிலவின. மேலும் மருணீக்கியாருக்கு ஏற்பட்ட துன்பம், துயரம் மேலும் மேலும் வருத்தம் மனஉளைச்சல் இவைகளோடு உலகம் நிலையற்றது என்ற உணர்வினை மையப்படுத்திய சமணக் கொள்கை ஈத்தது என்றால் தவறில்லை. தனக்கு ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் திறன் கொண்டதே மனிதமனம் ஆகும். மாறாகச் சவால்களை எதிர்கொள்ளாத மனம் சலிப்படையும். வாழ்வை வெறுக்கும். அதற்கு மாற்றுத்தேடிக் கொண்டால் உலகை வெல்லலாம். இல்லையாயின் முடியாது. இது உளவியல் இயல்பு. அதுபோல மருணீக்கியாரின் இளமைக்காலம் தாய், தந்தை, இழப்பு, தமக்கைக்கு மணம் பேசிய மணமகன் இழப்பு இப்படி துன்பமே

படிப்படியாக வந்ததால் வாழ்வில் வெறுப்பு ஏற்பட்டது. பின்பு அவ் வெறுப்பை மடைமாற்றுவதற்குச் சமணர்களின் சில கொள்கைகள் ஈர்த்துச் சமணம் சார வழி வருத்திருக்கலாம். ஏன் என்றால் இல்லற வாழ்வை வெறுத்து உயிர்காக்கும் ஜீவகாருண்யத்தைப் போற்றி நிலையாமை பேசும் சமணம் மருணீக்கியாருக்குச் சிவப்புக்கம்பளம் விரித்தது என்றால் அவரும் சென்றார் என்று சிந்திக்க இடம் உள்ளது. சமணம் சார்ந்தார் தருமசேனரானார்.

**திலகவதியார் வேண்டுதல்**

திலகவதியார் தம்பி சமணத்தில் இருந்து தொண்டு செய்வதை அறிந்து வருந்தினார். அதிகை வீரட்டானத்து இறைவனிடம் என் தம்பி புறச்சமயத்திலிருந்து சைவசமயம் திரும்பத் தாங்கள் அருள வேண்டுமெனப் பிராத்தித்தார். இறைவன் சூலை நோய்தந்து அவனைச் சைவம் சாரச் செய்வோம் என அருளினார். சூலை நோய் மருணீக்கியாரை வாட்டியது. அதனைச் சமணர்கள் மூலம் நீக்கிட முனைந்து தோற்றார். நிறைவாக, திலகவதியார் திருவடியில் வீழ்ந்தார். முதல்முறை திலகவதியார் திருவடியில் வீழ்ந்து தன்னுயிரையும், திலகவதியார் உயிரையும் காத்தார். தற்பொழுது தன்னுயிர் காக்க வேண்டினார். திருவதிகைப் பெருமான் அருளே என்று நினைத்துத் திலகவதியார் திருநீறிட்டார். சூலை நோய் நீக்கியது. திருவதிகைப் பெருமானை வலம் வந்து பதிகம் பாடத் தொடங்கினார்.

முதற்குருவாக விளங்கும் சிவபெருமான் திலகவதியாரை மானிடக்குருவாக மருணீக்கியாருக்கு அளித்தார். மருணீக்கியாரின் பண்சுமந்த தமிழ்க் கேட்ட பரமன் ‘நாவுக்கரசு’ என்று வானிடை ஒலித்து மகிழ்ந்தார். நாவுக்கரசராகிப் பதிகங்கள் பாடிப் பரமனைத் தொழும் தொண்டரானார்.

மருணீக்கியார் சமணம் நீங்கிச் சைவசமயம் சார்ந்தது அறிந்து சமணர்கள் மன்னரிடம் முறையிட்டனர். மன்னன் நீற்றறையில் அடைத்தான். ஏழுநாட்கள் நீற்றறையில் சிவனருளால் சிறப்பாக இருந்தது கண்டு சமணர் அதிசயித்தனர். பின்பு நஞ்சமுது இட்டனர். அதிலிருந்தும் மீண்டார். மதயானையை விட்டு மிதிக்கவைத்தனர். மத

யானை பணிந்தது. கல்கட்டிக் கடலில்போட்டனர். திருநாவுக்கரசருக்குக் கல்லே தெப்பமானது. இவற்றையெல்லாம் கடந்து வந்த நாவுக்கரசரின் பக்தித்தன்மை சமணர்களைப் பின்னுக்குத் தள்ளியது. நாவுக்கரசரின் வெற்றி சைவசமயத்திற்குக் கிடைத்த பெரும் பேறானது.

**தலப்பயணம்**

திருநாவுக்கரசர் தலங்கள்தோறும் சென்று உழவாரம் செய்து தொண்டர்களுடன் பதிகம்பாடி வழிபட்டு வரலானார். திருப் பெண்ணாகடத்தில் பெருமானைப் பாடிச் சூல இடபக்குறிகளைத் தோளில் பொறிக்க வேண்டிப் பெற்று மகிழ்ந்தார்.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் சீர்காழியில் ஞானப்பால் உண்டது அறிந்து சென்று அவரை வணங்கினார். திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரின் செயற்கரிய செயல்களை அடியார்கள் மூலம் அறிந்து வணங்கி 'அப்பரே' என்று அழைத்தார். அதுமுதல் அப்பர் என்றும் போற்றப்பட்டார்.

**திருவடி தீட்சை**

திருச்சத்தி முற்றம் என்ற தலத்தில் அருள் வழங்கும் சிவக்கொழுந்தீசனிடம் திருவடி சூட்டிடத் திருநாவுக்கரசர் வேண்டினார். சிவக்கொழுந்தீசன் நாவுக்கரசருக்குத் திருநல்லூர் வருக என்றருளி அங்குத் திருவடி சூட்டப்பட்டார். பலநாள் தங்கி அறப்பணியாற்றினார்.

**அப்பூதியார் சந்திப்பு**

திருநாவுக்கரசரின் பொய்மையற்ற மெய் வாழ்வில் மைல்கல் அப்பூதியார் சந்திப்பு எனலாம். திருநாவுக்கரசரையே கடவுளாகப் பாவித்து அறம் செய்து வந்த அப்பூதியாருக்கு அருள் வழங்கி, அவரது மகன் அரவு தீண்டி இறக்க அவனை உயிர்ப்பித்துச் சைவசமயக் கடவுளாம் சிவபெருமானின் பெருங்கருணையை உலகறியச் செய்தார்.

**படிக்காசு பெற்றது**

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தரை இரண்டாவது முறையாக முருகநாயனார் மடத்தில் சந்தித்தார். இருவருவரும் திருவாரூர் சென்று இறைவனை வணங்கிப் பதிகம் பாடினர்.

இப்படியே இருவரும் திருவீழிமிழலைத் தலத்து ஈசனை வழிபட வருங்கால் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் வருந்தினர். இருவரும் மடம் அமைத்து இறைவனை வேண்டிப் படிகாசு பெற்றனர். மக்கள் மகிழ்ந்தனர். பஞ்சம் நீங்கியது. இத்தலத்தில் இறைவன், வாசியான காசைத் திருஞானசம்பந்தருக்கும், வாசியில்லாக் காசைத் திருநாவுக்கரசருக்கும் அளித்து மகிழ்ந்தான். திருஞானசம்பந்தர் பின்னர் இறைவனை வேண்டித் தமக்கும் வாசியில்லாக் காசு வேண்டுமெனப் பெற்றார். இருபெரும் அடியார்களும் மகிழ்ந்தனர். இறைவன் ஏன் இவ்வாறு வாசியுள்ள / வாசியில்லாக் காசு வழங்கினான் என்ற வினா சிந்திக்கத்தக்கதாகும்.

திருநாவுக்கரசர் உழவாரம் என்ற தொண்டாற்றிப் பூசனை புரிந்தார். திருஞானசம்பந்தர் பூசனை மட்டும் புரிந்தார். உழைப்புடன் பூசனை செய்தது, திருநாவுக்கரசர் எனக்கொண்டு அவருக்கு வாசியில்லாக் காசினை இறைவன் வழங்கினான் எனச் சிந்திக்கலாம். மெய்வருத்தக் கூலி முறையாக நாவரசுக்குக் கிடைத்தது. திருஞானசம்பந்தர் பூசனை மட்டுமே செய்தார். உழைப்பாக உழவாரம் செய்யவில்லை. எனவே அவருக்கு வாசியுள்ளகாசு அளித்தார் எனச் சிந்திப்பது தவறாகாது. இருவரின் குறிக்கோளும் பஞ்சம் தீர்ப்பது பசியாற்றுவது; பிறகு இறைவனை நினைத்துப் பாடுவதாக இருந்தது. நிறைவில் கடவுளின் படிக்காசால் திருவீழிமிழலையில் பஞ்சம் நீங்கியது.

அப்பரடிகளும், அருள்ஞானசம்பந்தரும் பல தலங்களை வணங்கிக் கொண்டு திருமறைக்காடு வந்தனர். வடக்கத்திய வேதங்கள் மறைக்காட்டு இறைவனை வழிபட்டுவிட்டுத் திருக் கதவினை மூடி விட்டுச் சென்றதால் அன்பர்கள் பிரிதொரு வழியாக ஆலயம் சென்று வழிபட்டு வரலாயினர். இதனை அறிந்த ஞானசம்பந்தர், திருநாவுக்கரசரை மறைத் கதவு திறக்கப்பாடல் பாட வேண்டினார். பதிகம் பாடினார் திருநாவுக்கரசர். நிறைவான பாடலில் கதவும் திறந்தது. நேர்வழியில் இருபெரும் குரவரும் சென்று மறைக்காட்டீசரை வழிபட்டனர். வரும்போது கதவு அடைத்திடத் திருஞானசம்பந்தரை அப்பர் வேண்டினார். திருஞானசம்பந்தர் பாடல் பாடிட முதல் பாடலிலேயே கதவு அடைக்கப்பெற்றது. அன்றுமுதல் அன்பர்கள் நேர்வழியில் ஆலயம் சென்று வழிபடலாயினர்.

இங்குத் திருநாவுக்கரசர் திறக்கப்பதிகம் பாடும்போது மறைக்காட்டீசர் காலம் தாழ்த்தினான். இதற்கு முறையான காரணம் ஆராய்தல் சிரமமானதாகும். நாவரசின் நற்றமிழ் கேட்கவே இறைவன் காலம் தாழ்த்தினார் எனலாம். இப்படி கூறினால் திருஞானக் குழந்தையின் தமிழை இறைவன் விருப்பில்லாமல் கேட்டாரா ? என்ற வினா எழும். எனவே நாவுக்கரசரைப் பார்த்துத் திருஞானசம்பந்தர் வேதங்களால் அடைக்கப் பெற்ற கதவுகளைத் திறக்கப் பாடுங்கள் என அருளாணையிட்டபோது சுவாமிகள் தாங்கள் பதிகம் பாடித் திறந்திடுங்கள் என்று கூறித் தன் முனைப்பு இன்றி இருந்திருந்தால் இறைவன் அப்பருக்குச் சிறிதும் தன் முனைப்பு இல்லை; பணிவுடன் உள்ளார் எனக் கருதி உடனே கதவினைத் திறந்திருப்பான் என்று சிந்திப்பது தவறாகாது.

**திருவாய்மூரில் திருக்காட்சி**

திருவருள் நலத்துடன் இருபெரும் குரவர்களும் திருமறைக் காட்டில் இரவு தங்கினர். அப்பர் தனக்குமட்டும் கதவு திறக்க இறைவன் காலம் தாழ்த்தியது ஏன் ? என வருத்தத்துடன் அறிதுயில் கொண்டார். அவர்கனவில் இறைவன் தோன்றி “நாம் திருவாய்மூரில் இருப்போம் வருக” எனக் கூறி மறைந்தார். நாவுக்கரசர் வாய்மூரில் திருக்காட்சி கண்டு இன்புற்றார்.

**பொதிசோறு ஏற்றது**

பல தலங்களைப் பணிந்து வழிபட்டு வந்த திருநாவுக்கரசர் பைஞ்ஞீலித் தலத்திற்கு வருகையில் பசி வாட்டியது. இறைவன் வழியில் பொழில், குளம் அமைத்துப் பொதிசோற்றுடன் காத்திருந்து அளித்தார். அப்பர் உண்டு இளைப்பாறினார். பின்னர்ப் பயணம் தொடர்ந்தார். உணவு கொணர்ந்த அன்பர் மறைந்தார். திருநாவுக் கரசரின் பசிப் பொறுக்காத பைஞ்ஞீலி இறைவனே பொதிசோறு அளித்து மகிழ்ந்ததை அப்பர் பெருமான் அகமகிழ்ந்து பதிகம் இசைத்தார்.

**கயிலைக் காட்சி**

நிறைவாக அப்பர் பலதலங்களை வணங்கிக் கயிலை செல்லலானார். உள்ள உறுதியுடன் முயன்றார். உடல் சிதைவுற்றது.

கயிலைநாதனைக் காணாது மீளேன் என்று மேலும் பனி மலையில் நடையிட்டார், உருண்டார், புரண்டார். இவரின் உள்ள உறுதி கண்ட கயிலை ஈசன் அசரீரியாக "நாவுக்கரசரை நோக்கி இத்தடாகத்தில் மூழ்கித் திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் காணுக" என்றருளினார். அவ்வாறே தடாகத்தில் மூழ்கிய நாவுக்கரசர் திருவையாற்றில் எழுந்து ஆனந்தக் கயிலைக்காட்சி கண்டார். ஐயாறு வந்த நாவுக்கரசர் ஊனுடம்புடன் வந்தாலும் வினைகள் நீங்கி ஆணவம், கன்மம், மாயை ஒழிக்கப்பட்டு மலபரிபாகமாகி அருள் வீழ்ச்சி பெற்றவராய்ப் பொன்னொளிமிக்கவராய்த் திகழ்ந்தார்.

திருநாவுக்கரசர் ஐயாறு தலத்தில் கையிலைக் காட்சியை அனுபவித்துக் கண்டவுடன், உலகப்பொருள்கள் அனைத்தும் அம்மையப்பராகக் காட்சியளிப்பதைக் கண்டுணர்ந்தார். 'மாதர்பிறைக் கண்ணியானை' எனத்தொடங்கும் பதிகம் பாடினார். அப்பதிகத்தில் தாம் கண்டதைப் பதிவு செய்துள்ளார். பின்னர், வெள்ளி மலையின்மேல் பவளமலை ஒன்று மரகதக் கொடியுடன் விளங்குவது போன்று சிவபெருமான் உமாதேவியுடன் வீற்றிருந்த காட்சியைப் போற்றும்படி போற்றித்திருத்தாண்டகம் பாடி மகிழ்ந்து போற்றினார்.

## திருப்புகலூரில் திருவடிப் பேறு

திருவையாற்றிலிருந்து புறப்பட்ட நாவுக்கரசர் பல தலங்களைப் போற்றிப் பதிகங்கள் பாடி வழிபட்டுக் கொண்டு நிறைவாகத் திருப்புகலூர் வந்தார். உழவாரத் தொண்டுசெய்து மகிழ்ந்திருந்தார். வாக்கின் மன்னவர் பல திருத்தாண்டகங்களைப் பாடினார். திருப்புகலூர் ஈசன் நாவுக்கரசரைச் சோதித்தார். உழவாரம் செய்த இடங்களில் நவமணிகளையும், பொன்னையும் இட்டான். ஓட்டையும், செம்பொன்னையும் ஒன்றாகக் கருதும் வல்லமைத் திறன் கொண்ட சிவனடியார்களின் அரசரான நாவுக்கரசர், எல்லாம் ஈசன் செயல் என்று நினைத்துக் குப்பைகளோடு சேர்த்துத் தூய்மைப்படுத்தினார். பின்னர்க் காமநாட்டம் மிக்கவரா? என்பதை அறிய அரம்பை, ஊர்வசிப் பெண்களை நாவரசர் முன் ஆடல்காட்டிக் காமத்தால் அடிபணியச் செய்தான். காமனை எரித்த கண்ணுதலான் காட்டிய இந்தச் சோதனையிலும் நாவரசர் வெற்றிபெற்றார். தொண்டின் உறைப்புடன் விளங்கினார். அந்தத் தேவ மாதர்கள் நாவரசரின் திருவடி வணங்கித் தன் நகர் சென்றனர். துறவு என்பது பல்வேறு

இடர்களுக்கு உள்ளாக்கினும், கொண்ட கொள்கையில் தளராது உறுதியாக இருக்க வேண்டும் என்பதை நாவரசருக்கு இறைவன் வைத்த சோதனை நினைவுபடுத்துகிறது. உடல் உபாதைகள் இருப்பினும், உணர்வுகள் முனைப்பினும் ஈசன் புகழ்பாடி வழுவாது வழிகாட்டித் தம்மைத் தம் மனதைத் தடம்மாறாது வாழும் தவநெறியோனாக வைத்திருப்பதில் கவனம் அவசியமாகிறது. இதில் நாவரசர் வெற்றியாளராகிறார். எண்ணற்றோர் மும்மலமானிடராகத் தோல்வியடைகின்றனர்.

திருநாவுக்கரசருக்கு முன்னுணர்ச்சி மேலோங்கத் 'தன்னைச் சரண்[7] என்று கூறும்' பதிகம் இசைத்தார். எண்ணுகேன் எனவரும் தாண்டகம் பாடித் திருவடிப்பேறு வேண்டினார். திருப்புகலூர் ஈசன், சித்திரைச் சதய விண்மீன் உலவும் நன்னாளில் நண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகிய அப்பருக்குச் சேவடிக்கீழ், திருவடிப் பேறு நல்கினார்.

### திருநாவுக்கரசரின் சமய வாழ்வு

திருநாவுக்கரசர் இளமையில் சமணம் சார்ந்தார். தமக்கைத் திலகவதியாரின் திறத்தால் ஈசனின் அருட்கருணையால் சைவ சமயம் சார்ந்து தொண்டு நெறியைத் தமது நெறியாக்கிக் கொண்டு சைவசமயத்தில் வாழலானார்.

சமயம் என்பது எழுத்திலும், சொல்லிலும் நின்று விடுவது ஆகா. இவைகளைக் கடந்து தன் பட்டறிவால் தொண்டாற்றி வழிபடும் நிலையாகும்.

சமயப் பட்டறிவிற்கு மிக முக்கியமானது அறிவும் அன்பும் என்று கூறலாம். அறிவு ஞானத்தைத் தரும். அன்பு கூட்டுறவையும், அறவணைப்பையும், தவத்தையும் தந்து அருளுணர்வுடன் தொண்டில் செலுத்தும். இதனைத் திருவள்ளுவர்,

*அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்*
*நண்பென்னும் நாடாச் சிறப்பு*[8]

*அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்*
*செல்வச் செவிலியால் உண்டு*[8அ]

என்ற குறட்பாக்களில் தெளிவுபடுத்துவது அறியலாம். உயிரது சிவத்தில் கூடி, மாறுபாடின்றி எல்லாஉயிர்களையும் தம்முயிராகக் காணும் உயர்அன்பு நிலையில் திருநாவுக்கரசர் தம்சமய வாழ்வைச் இச்சமூகத்தில் கடைப்பிடித்தார்.

வழிபாடு கடவுளுக்குச் செய்வதன்று, கடவுளை முன்னிட்டு உயிர்களுக்குச் செய்யப்படுவதாகும். இக்கருத்துப்படி திருநாவுக் கரசர் உள்ளம் தெளிவுபெற்று அகப்பூசையில் சிவானுபவம் பெற்று, உலகில் தொண்டாற்றித் தம் சமயவாழ்வை வகுத்துக் கொண்டார். அதில் முழுவெற்றியும் பெற்றார். சைவம் புகட்டும் நால்வகை நெறியில் நோன்பு (கிரியை) நெறியில் வாழ்ந்து குறிக்கோளுடன் சிவசிந்தையுடன் வாழ்ந்தார். சிவத்தொண்டுகளும் சிவனடியார் களுக்குத் தொண்டும் செய்து சமூகமேம்பாட்டுக்கு வழிவகுக்கும் தம் சமயவாழ்வை மேற்கொண்டார்.

**திருநாவுக்கரசரின் சமூதாயச் சிந்தனைகள்**

சமயத்தில் முதிர்ச்சியுடையவர்கள் அன்புவழியில் விளங்கித் தொண்டினை ஆற்றுவர். உயிர்களிடத்தில் இரக்கம் காட்டுவர். பிறர்படும் துன்பத்தைத் தான் படுவதாகக் கருதி அதனைப் போக்கி வாழ்வர். இந்நெறியில் வாழ்ந்த அப்பர் பெருமான் சமுதாயச் சிந்தனையில் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்முகமாகச் சமயப்பணியாற்றியுள்ளார். அந்த வகையில் மக்கள் மேம்பாடு அடைய அவர் வழங்கிய பதிகங்களில் சிறப்பையும் சமூக நோக்கில் அப்பர் பெருமானின் சமூகச்சிந்தனைகளையும் சிந்திப்போம்.

**மனிதநேயம் மிகுந்த மகான் அப்பரடிகள்**

தமிழ்ஞானசம்பந்தரும், தமிழர்தலைவராம் நாவுக்கரசப் பெருமானும் சோழ நன்னாட்டுத் திருவீழிமிழலைத் தலத்திற்கு வழிபாடாற்ற வந்தனர். தலச்சிறப்பைச் சற்றுச் சிந்திக்கலாம். திருவீழிமிழலைத் தலம் கும்பகோணம் – பூந்தோட்டம் சாலையில் உள்ளது. சிவனார் விழியழகீசர், உமையம்மை அழகுமுலையம்மை. அழகு கொட்டிக் கிடக்கும் அற்புத ஆலயம். திருமால் சிவபூசை செய்தபோது, ஆயிரம் தாமரையில் ஒன்று குறைந்தபொழுது, தம் கண்ணைப் பெயர்த்துச் சார்த்தி, பக்தியின் உச்சத்தில் வழிபட்டு,

சக்கரம் பெற்ற தலம். கண்ணப்பருக்கு மகாவிட்ணு வழிகாட்டியாக இருக்க வாய்ப்பு தந்த தலம். சேந்தனார் திருவிசைப்பா அருளிய பேறுபெற்ற தலமாகும். சமயக்குரவர்கள் மூவராலும் பாடப் பெற்றதாகும். இத்தலத்திற்கு இருபெரும் குரவர்களும் வந்தபோது திருவீழிமிழலை, மழையின்றி வறட்சியில் வறுமை மிகுந்திருந்தது. மக்கள் பசிப்பிணியால் வாடினர். இதனைத் திருஞானக்குழந்தையும், வாக்கின் மன்னவரும் வருத்தமேற்படக் கண்டனர்.

தங்கள் நாயகன் எளியவர்களுக்கு இரங்கும் பிரான். எனவே திருவீழிமிழலை ஈசனை வேண்டிப் பஞ்சத்தைப் போக்குவோம் என்று சபதமிட்டு வழிபாட்டை மேற்கொண்டனர்.

மெய்வருத்தக் கூலிதரும் என்பதற்கிணங்க, மெய்யடியாரின் பொய்களற்ற பூசைக்கு ஈசன் இரங்கிப் படிக்காசு அருளினான். திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் மடம் அமைத்து, சாதி, மத, இன வேறுபாடின்றி உணவு வழங்கிப் பஞ்சம் போக்கி மனிதநேயமிக்க மகானானார்கள். இவர்கள் ஆற்றிய மனிதநேய மாண்பைச் சேக்கிழார் தம் பெரிய புராணத்தில்,

*அல்லர் கண்டத்து அண்டர்பிரான் அருளால் பெற்ற படிக்காசு*
*பல்லாறியன்ற வளம் பெருகப் பரமன் அடியார் ஆனார்கள்*
*எல்லாம் எய்தி உண்கவென இரண்டு பொழுதும் பறை நிகழ்த்திச்*
*சொல்லால் சாற்றிடச் சோறிட்டார் துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்*[9]

என்று பதிவு செய்துள்ளார். பசிப்பிணியுடையோர் வருகைதந்து உணவு உண்ணுவீர் என்று பறை அறிவித்து மனிதநேய மாண்பைக் காத்துள்ளனர். இவ்வாறு பசிப்பிணியை நாவுக்கரசர் போக்கும்போது, பெருமான் ஓர் அற்புதம் காட்டினார். படிக்காசு அருளும்போது திருநாவுக்கரசருக்கு வாசியற்ற காசினையும், திருஞானசம்பந்தருக்கு வாசியான காசுகளையும் வழங்கினார். பின்னர்த் திருஞானசம்பந்தர் வாசிதீரவே காசு நல்குவீர் என்று பதிகம்பாடி வாசி இல்லாத காசினைப் பெற்றதாகச் சைவவுலகம் புகழுந்துரைக்கும். இதனைத் திருஞானசம்பந்தர்,

*வாசி தீரவே காசு நல்குவீர்*
*மாசின் மிழலையீர் ஏசல் இல்லையே*[10]

என்று தன்பதிகத்தில் வெளிப்படுத்தியுள்ளார். ஏன் இறைவன் இரண்டு அடியார்களுக்கும் பாரபட்சம் காட்டினான் என்றால்? ஞானப்பாலுண்ட பிரான் திருஞானசம்பந்தர் பூசனையுடன் வழிபட்டு வருவதைத் தன் கடனாகக் கடைப்பிடித்தார். வாக்கின் மன்னவரே பூசனையுடன் பொதுத்தொண்டாம் உழவாரத்தை மேற்கொண்டு வந்தார். எனவே இறைவன் தொண்டிற்கு முதல்படி தந்து வாசி இல்லாக்காசை அளித்தான் எனச் சேக்கிழாரே பதிலைத் தருகிறார். எனவே சமூகத்தொண்டு முக்கியமாகியது. இத்தலத்தில் உள்ள பதிகத்தில் நாவுக்கரசர் இறைவன் ஐம்பூதமாக உள்ளான் என்பதை,

*எண்ணகத் தில்லை அல்லர் உளரல்லர் இமவான் பெற்ற*
*பெண்ணகத் தரையர் காற்றில் பெருவலியிருவராகி*
*மண்ணத்தைவர் நீரில் நால்வர் தீயதனில் மூவர்*
*விண்ணகத் தொருவர் வீழி மிழலையுள் விகிர்தனாரே*

எண்ணும் எண்ணத்திலே இல்லாதவரும், அல்லராகவும் உள்ளவரும் அல்லராகவும், பார்வதி தேவியைப் பாகத்தில் உடையவராய், காற்றில் ஒலி, ஊறு என்ற இருபண்பினராய், தீயிட ஒலி, ஊறு ஒளி என்ற மூன்று பண்பினராய், நீரிடை ஒலி, ஊறு, ஒளி, சுவை என்ற நான்கு பண்பினராய், மண்ணில் ஒலி, ஊறு, ஒளி, சுவை நாற்றம் என்ற ஐந்து பண்பினராய் வீழிமிழலையில் இருந்து அருள்தரும் பெம்மான் விளங்குகிறார் என உலக சைவசித்தாந்த நுட்பத்தைக் காட்டி எல்லாமாய் இறைவன் உள்ளான் என விளங்கி வழிபடுகிறார். எனவே இறைவன் அவரது இரக்கமுடன் கூடிய கழிபெருங் காதலுக்கு இரங்கிக் காசு வழங்கினார். தொண்டை உயர்த்திடத் திருவிளையாடல் புரிந்தான். இவ்வரலாறு திருநாவுக்கரசரின் மனித நேயத்தை வெளிப்படுத்துகிறது. சமூகச் சிந்தனைக்கு இது ஓர் எடுத்துக்காட்டாக ஆகிறது.

**ஏழைகளுக்கு இரங்கும் பண்பு**

ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காணலாம். ஏழை களுக்கு இரங்குபவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் என்ற வரிகள் எளியவர்களுக்கு உதவி செய்வதை வலியுறுத்துகின்றன. அதுபோலத் திருநாவுக்கரசர் ஏழைகளுக்கு நாம் உதவினால் இறைவன் நமக்கு அருளுவான் என்ற சமூகச்சிந்தனையோடு, பாடலைப்புனைகிறார்; தன் வழிபாட்டைத் தொடர்கிறார். சமூகச் சீர்திருத்தவாதியாகிறார். நாவுக்கரசரின் பாடலைக் காண்போம்.

*இரப்பவர்க்கு ஈயவைத்தார்*
*ஈபவர்க்கு அருளும் வைத்தார்*
*கரப்பவர் தங்கட் கெல்லாம்*
*கடு நரகங்கள் வைத்தார்*
*பரப்பு நீர் கங்கை தன்னைப்*
*படர்சடைபாகம் வைத்தார்*
*அரக்கனுக்கு அருளும் வைத்தார்*
*ஐயன் ஐயாறனாரே*[11]

என்று பாடும் பாடல் மூலம், இல்லை என்று வருபவர்களுக்குக் கொடுக்கவைத்தார். அப்படி கொடுப்பவர்களுக்கு அருளை வைத்தார். கொடுக்காமல் மறைத்து வைப்பவர்கட்குக் கடும் நரகங்கள் வைத்தார். ஐயாற்றில் அருள்தரும் ஐயாறப்பர் என்று உரைக்கிறார். பிறருக்குக் கொடுப்பதே நல்லறம் வழிபாட்டின் ஒரு அங்கம் என்று அப்பர் அடிகள் பதிகம் இசைப்பது சமூகச் சிந்தனையின் வெளிப்பாடு எனலாம்.

*'இறக்கும் பொழுது கொடு போவதில்லை இடைநடுவே*
*குறிக்கும் இச்செல்வம் சிவம் தந்தது'*[12]

என்று பட்டினத்தார் கூறுவதை இங்கே ஒப்பு நோக்கலாம். ஏழைகட்கு அளிப்பதைத் தமக்கே கொடுத்தது போல இறைவன் எண்ணுகிறார் என்ற சிந்தனையை அப்பரடிகள் தேவாரம் வலியுறுத்துகிறது.

**அப்பரடிகள் காட்டும் அமைதியானவாழ்வு**

மனிதர்கள் வாழ்ந்து தம் செய்கையினால் உலகம் பாராட்டும்படி வாழ்வதேசிறந்த வாழ்வாகும்.

*ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது*
*ஊதியம் இல்லை உயிர்க்கு*[13]

என்று தெய்வப்புலவர் கூறுகிறார். ஈதலை மேற்கொண்டு, புகழுடன் வாழ்வதே உயிரின் ஊதியம் என்று உலகவாழ்வை ஒரு வேலையாக்கி அதற்கு ஊதியம் இசைபட அவ்வேலையைச் செய்து புகழைப் பெறுவதே யாகும் என்று தெள்ளத்தெளிவாகக் கூறுகிறார். இன்றைய உலகில் இசைபட வாழ்வது மிகமிகக் கடினமானது என்று

பலர் நினைக்கின்றனர். சிலரோ செவ்வித்தலைபட்டுப் புகழுடன் தம்வாழ்வை வாழ்ந்து சிறக்கிறார்கள்.

அப்பரடிகள் அமைதியாக இவ்வுலகில் வாழ்வதற்கு வழிகளை நமக்குச் சொல்கிறார். நாம் செய்யும் வினையின் பயன் நம் உயிரைப் பாதிக்கவில்லை எனின் பிறப்பு, இறப்பு என்ற சூழலில் இருந்து தப்பிவிடலாம்.

கடற்காற்று கருங்கல்லையும் இரும்பையும் அரித்து விடுகின்றது. ஆனால் எண்ணற்ற உயிரினங்கள், மீனினங்கள் சுகமாய் வாழ்கின்றனவே ? காரணம் அவ்வுயிரினங்களின் மீது ஒருவித எண்ணெய்ப் பசையை இறைவன் அளித்துள்ளான். அவ்வுயிர்கள் நிம்மதியாய் வாழ்கின்றன.

அன்பர்களே வாழ்க்கை என்ற கடலில் வாழும் உயிர்களாகிய நமக்குப் பாதிப்பு வராமலிருக்க வேண்டும். நம் வினையின் பயனும் நம்மைப் பாதிக்காமலிருக்க வேண்டும். இதற்கு ஒரே வழி பக்திதான். கடல் உயிரினங்களுக்கு இறைவன் எண்ணெய்ப் பசை தந்தது போல நம் வினைகளால் ஏற்படும் துயரம் போக அவனருள் அவசியமாகிறது.

*பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவனடி சேரா தார்*[14]

என்று தெய்வப் புலவர் இக்கருத்தை விவரிக்கிறார். கடலில் மீனைக் காப்பது போல நமக்கு இறைவுணர்வு என்னும் பசை, வினைப்பயன் நம் உயிரைப் பற்றாமல் பாதுகாக்கிறது.

நம் அன்றாடச் செயல்களுக்கு எல்லாம் கர்த்தராக இறைவன் விளங்குகிறான். நாம் இல்லை. நம் மனத்திற்குள் இறைவன் இருந்து நம்மை இயக்குகிறான் என்று எண்ணும் போது வினைகள் நம்மைச் சாரவே சாரா. அவ்வாறு இருக்கும் நிலை எப்படி ? அப்படி இருந்தால் அமைதியாக வாழலாமே! இதைத்தான் அப்பரடிகள் தன் அனுபவ மந்திரமாக,

*ஆட்டு வித்தால் ஆர்ஒருவர் ஆடாதாரே*
*அடக்குவித்தால் ஆர்ஒருவர் அடங்காதாரே*

*ஓட்டுவித்தால் ஆர்ஒருவர் ஓடாதாரே*
*உருகுவித்தால் ஆர்ஒருவர் உருகாதாரே*
*பாட்டுவித்தால் ஆர்ஒருவர் பாடாதாரே*
*பணிவித்தால் ஆர்ஒருவர் பணியாதாரே*
*காட்டுவித்தால் ஆர்ஒருவர் காணாதாரே*
*காண்பார் ஆர் கண்ணுதலாய்க் காட்டாக்காவே*[15]

என்று அழகுதமிழில் பழகுமொழியில் பாடுகிறார்.

இறைவன் காட்ட நாம் காணுகிறோம். இறைவன் உண்பிக்க நாம் உண்ணுகிறோம் என்ற நிலையில் நம் வாழ்வை அமைத்துக் கொண்டால் நம்வாழ்வு வளமானதாகவும் அமைதிமிக்கதாகவும் புகழ் நிலவுவதாகவும் அமையும்.

இப்பாடலின் நுட்பம் இறைவா நீ அனுபவிக்க வைத்தால் நான் அனுபவிப்பேன். நீ இயக்கினால் நான் இயங்குகிறேன். நம்மால் ஆவது ஒன்றுமில்லை என்று உணர்ந்து சிவபோதத்தை அழுத்திச் சிவபோதத்தை மேலோங்கச் செய்தால் வினைப்பயன் நம்மை அணுகாது என்பதைச் சமூக நோக்கில் பதிகத்தில் பதிவு செய்து மக்களிடம் அமைதியை நிலைநாட்டுகிறார். இக்கருத்தைத்தான் அபிராமிபட்டர்,

*"நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவது*
*ஒன்றே யுமில்லை உனக்கே பரமெனக் குள்ளவெல்லாம்*
*அன்றே உனதென் றளித்து விட்டேன்"*[16]

என்று அப்பர் கருத்தை வழிமொழிவது போல அந்தாதிப்பாடி இருப்பதை ஒப்பிட்டு மகிழலாம்.

**திருநாவுக்கரசரின் சமய உண்மைகள்**

திருநாவுக்கரசர் இறைவனை ஆண்டானாகவும் தம்மை அடிமையாகவும் இருந்து கிரியை நெறியில் தம் வழிபாட்டை மேற்கொண்டார். சூலை கொடுத்து ஆட்கொண்டபோதே அடிமையாகிக் கண்ணீர் சிந்தி உழவாரம் செய்து சைவசமயத்திற்கு ஞானபானுவாகத் தமிழகத்தில் வலம் வந்தார். எளிமை, அடக்கம், குறிக்கோள் கொண்ட மனம், தொண்டாற்றுவதையே மேற்கொண்டு ஒழுகினார்.

இவர் தரும் சில சைவசமய உண்மைகள் சமூகத்தில் ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தின எனலாம்.

*கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்*
*முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வன்*
*அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி*
*எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே*[17]

என்று தன்நிலையாக விளக்கமளிக்கிறார். நமது கைகளால் சிவபெருமான் மீது புதியமலர்களைத் தூவவேண்டும். சிவவழிபாடு செய்யும் நமக்குப் புலனடக்கம் மிகமிக அவசியமாகிறது. புலனடக்கம் இல்லாப் பூசையால் பூரணஞானம் கிட்டுவதில்லை. இனிய மனமுடையார் இல்லத்தில் இறைவன் வசிப்பான். பூசனையில் பாடல் இசைக்க வேண்டும்.

*வண்ண நன் மலர்கள் தூவி*
*வாழ்த்துவார் வாழ்த்தியேத்தப்*
*பண்ணுலாம் பாடல் கேட்டார்*
*பழனத்தெம் பரமனாரே*[18]

என்று பூக்களையிட்டு வழிபாடாற்றி, நற்றமிழால் பாடல்களைப் பாடினால் இறைவன் கேட்டு மகிழ்ந்து அருள் தருவான் என்கிறார்.

சிவனார் விரும்பும் அணிகலன் யாது எனில் நல்ல தமிழ்ப் பாமாலைகளைத்தான் என்று சமய உண்மையினைப் பதிவு செய்கிறார்.

*"தாம்படி மங்கலம் வேண்டவ ரேல்தமிழ் மாலைகளால்*
*நாம்படி மக்கலஞ் செய்து தொழுதுய் மடநெஞ்சமே"*[19]

என்று பாடுவதால் இறைவனைப் பாட்டிசைத்து வழிபட்டால் அவன் இரங்கி அருள் செய்வான் என்று கூறுகிறார். மேலும் அப்பரடிகள்,

*திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்*
*தீவண்ணர் திறம் ஒருகால் பேசாராகில்*
*ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில்*
*உண்பதன்முன் மலர் பறித்திட்டுண்ணாராகில்*
*அருநோய்கள் கெடவெண்ணீறு அணியாராகில்*
*அளியற்றார் பிறந்தவாறு ஏதோ வென்னில்*

*பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்*
*பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே*[20]

என்று மொழிகிறார். இறைவன் திருநாமமாகிய ஐந்தெழுத்தை ஓதிட வேண்டும். இறைவன் பெருமைகளைத் தினம் பேச வேண்டும். ஒரு முறையாவது ஒரு நாளைக்குச் சிவாலயத்தை வலம் வர வேண்டும். சாப்பிடும் முன் இறைவனுக்குப் பூச்சாத்திட வேண்டும். திருநீற்றை நெற்றியில் பூச வேண்டும். இப்படி ஒழுகிவருபவர்களுக்கு நோய் வரா. பிறப்பு, இறப்பு ஒழியும். வளமாக வாழலாம். இச்செயல்களைச் செய்யாதவர்கள் பிறப்பதற்கே தொழிலாகி இறப்பார்கள் என்று தெளிவாகச் சைவ சமயவுண்மைகளைச் சமூக நோக்கோடு வழங்கியுள்ளது பாராட்டத்தக்கதாகும். சிற்றூரோ பேரூரோ, எவ்வாறு அமைய வேண்டும் என்பதை,

*திருக்கோயில் இல்லாத திருவிலூரும்*
*திருவெண்ணீறணியாத திருவிலூரும்*
*பருக்கோடிப் பத்திமையால் பாடாவூரும்*
*பாங்கினோடு பல தளிகள் இல்லாவூரும்*
*விருப்பொடு வெண்சங்கம் ஊதா வூரும்*
*விதானமும் வெண்கொடியும் இல்லாவூரும்*
*அருப்பொடு மலர் பறித்திட்டு உண்ணாவூரும்*
*அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே*[21]

என்ற பாடலில் ஊரின் சிறப்பைக் கூறி; அவர் கூறியபடி இல்லாத ஊர் பெரியகாடு என்று அருளுகிறார். பாடலின் பொருள் எளிமையாய் விளங்குவதை உணரலாம்.

இறைவனே இவ்வுலகைப் படைத்தார். காலத்தையும் நேரத்தையும் அவரே மனிதர்களுக்காகப் படைத்தார். அதில் எல்லா நேரமும், காலமும் இனியதே ஆகும் என்று பஞ்சாங்கம் பார்ப்பவர் களுக்குப் பதில் சொல்லுகிறார்.

*“அல்லும் பகலுமாய் நின்றார் தாமே*
*அந்தியும் சந்தியும் ஆனார் தாமே”*[22]

என்று சொல்லி, எல்லாக்காலமும் நலமானது என்று சமூகத்தினருக்குக் கூறுகிறார்.

**வெற்றுச் சடங்குகள் வேண்டாம்**

நதிகளில் நீராடுதல், வழிபாடாற்றல், வேதம் ஓதுதல் உபதேசித்தல் முதலிய செயல்களை இறையுணர்வு இல்லாமல், அன்பில்லாமல், வெளிவேடங்களாகச் செய்வது சாதாரணச் சடங்காகுமே ஒழியப் பயன்தராது என்பதைத் திருநாவுக்கரசர் மிகத் தெளிவாக,

*கங்கை யாடில் என் காவிரியாடில் என்*
*கொங்கு தண்குமரித் துறையாடில் என்*
*ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடில் என்*
*எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே*

என்றும்,

*கோடி தீர்த்தங் கலந்து குறித்தவை*
*ஆடினாலும், அரனுக்கு அன்பில்லையேல்*
*ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி*
*முடிவைத்திட்ட மூர்க்கனோ டொக்கும்*[23]

என்றும்,

*வேதம் ஓதில் என் வேள்விகள் செய்யிலென்*
*நீதி நூல் பல நித்தம் பயிற்றிலென்*
*ஓதியங்கம் ஓராறும் உணரிலென்*
*ஈசனை யுள்கு வார்க்கன்றி யில்லையே*[24]

என்றும் நாம் செய்யக் கூடிய செயல்களினால் இறையுணர்வு மேலிட வேண்டும். சிவனை இமைப்பொழுதும் விட்டுவிலகாது நெஞ்சத்தில் இருத்தி வழிபடுவதே சாலச் சிறந்ததாகும் என்று வெளிப்படையாகக் கூறுகிறார்.

*பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்*
*பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்*
*சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க வேண்டில்*
*சொல்லுகேன் கேள் நெஞ்சே துஞ்சாவண்ணம்*
*உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்*
*உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கேன் என்றும்*
*பற்றரவக் கச்சார்ந்த புனிதா என்றும்*
*பொழில் ஆரூரா என்றே போற்றாநில்லே*[25]

என்று முக்திப்பேறுக்கு இடையூரான ஆசை, பொறாமை, கோபம், வெறுப்பு நீங்கி, உண்மை அறிவான சிவனை நாடி நலம் பெறலாம் என்று திருநாவுக்கரசர் உருக்கமான அறவுரைகளைச் சமூகத்திற்கு விதைத்துச் சமூகச் சேவகராகிறார். விரிவு கருதியே நாவுக்கரசர் உபதேசங்களை முடிக்கிறோம்.

## தாண்டகத்தால் தரணிக்குச் சேவை செய்தவர்

தாண்டகம் என்பது ஒருவகைச் செய்யுள் ஆகும். ஓரடியில் 24 எழுத்துக்கள் முதல் 26 எழுத்துக்கள் வரையில் அமைந்தது சந்தம் என்றும், 27 எழுத்து முதலாக மேற்கொண்ட எழுத்துக்களாகிய அடிகளைக் கொண்ட செய்யுள் தாண்டகம் என்று யாப்பருங்கல விருத்தியுரை (95.44) கூறும். திருநாவுக்கரசர் பாடியருளிய ஆறாம் திருமுறைப் பாடல்கள் அனைத்தும் தாண்டகம் ஆகும். இவ்வாறு தாண்டகம் பாடிய அப்பர், மக்கள் நன்முறையில் உணர்ந்து வாழ்வதற்கு, "நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா"[26] என்று எளிய சொற்களைக் கொண்டு அறவுரை நல்குகிறார்.

*சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்*
*கோத்திரமும் குலமும் கொண் டென்செய்வீர்*[27]

என்று வினா தொடுத்து விடைகூறிச்சமுதாயத்தை மேம்பாடடையப் பதிகம் இசைக்கிறார். நாவுக்கரசரின் சமூகப்பார்வை சமுதாய மேம்பாட்டிலும், பொய்புரட்டு வழிபாடுகளைச் சாடியும், ஆன்மிக விழிப்புணர்வையும் ஏற்படுத்தியும் அமைந்தது.

## அப்பர் புகட்டும் அற்புதக் கருத்து

அப்பர் பெருமான் புறச்சமயத்தில் இருந்து சைவசமயம் புகுந்தவர். சமணசமயத்தில் வாழ்ந்தபோது அச்சமயம் சார்ந்த நியதிகளைக் கற்றுத் தேர்ந்து தருமசேனர் எனப் பாராட்டப் பெற்றவர். மேலும், வயது மூப்பினால் பட்டறிவு நிரம்பப் பெற்று, சமயத்தில் புகுந்திடும் தீய வழக்கங்களைச் சாடியவர். மக்களைச் சமுதாயத்தில் செம்மாந்து வாழச் சைவசமயமே சாலச்சிறந்தது என உணர்த்தியவர். வடக்கத்திய கலாச்சாரம் சமயவுலகில் புகுந்து, தமிழர் பழக்கவழக்கங்களைக் கெடுத்ததை உள்ளப்பூர்வமாக அறிந்து வருந்தியவர். எனவே, அவர் தமிழர்களை நோக்கி அழைத்து, சமய வழிபாட்டில் தேவையற்ற சடங்குகளை நீக்கி, நல்வழிகளைக் கடைப் பிடிக்க அறைகூவல் விடுத்தார்.

சாதி ஏற்றத்தாழ்வைச் சமயவுலகில் நிராகரித்தார். பக்தி ஒன்றே வழி, பிரிவினை கூடாது என்றும், வடக்கத்திய அனல் ஓம்பல், வேள்வித்தீ வழிபாடு போன்றவை தேவையற்றவை என்று, தெள்ளத் தெளிவாகப் பதிகம் வழி விளக்கினார். சமூக நோக்கில் வழிபாடாற்றிட மக்களுக்கு அறிவுரை வழங்கிச் சமூகச் சேவகராகவே அப்பர் விளங்குகிறார். அவர், தம் திருமுறையில்

*'எரிபெருக்குவர் அவ்வெரி ஈசனது*
*உருவருக்கமதாவது உணர்கிலார்*
*அரிய யற்கரியானை அயர்த்துப் போய்*
*நரிவிருத்தமதாகுவர் நாடரே'*[28]

என்று தெளிவாகப் பதிகம்பாடி, தீயானது சிவபெருமானின் உருவம். அதை அறியாமல் வாழ்கின்றனர். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிர்கள் ஆகிய எட்டும் இறைவனுடைய உடலாகும். இதையே அட்டமூர்த்தங்கள் என வழங்குவர் என விளக்குகிறார். இக்கருத்தை,

*"எரியலால் உருவம் இல்லை . . . . . . . . . .*
*. . . . . . . . . ஐயன் ஐயாறனார்க்கே"*[29]

*"நெருப்புருவத் திருமேனி வெண்ணீற்றானை"*

என்று அவர் விரும்பி அழைத்துப்பாடுவதால் நாம் அறியலாம். எனவே, சிவனடியார்கள் வேள்வித்தீயைச் சிவன் திருவுருவமாக எண்ணி வழிபட வேண்டும். இதனை விடுத்து மற்ற தேவர்களுக்கு உரிய அவியுணவைச் எடுத்துச்செல்லும் ஒரு சாதாரண உருவாக எண்ணிடக்கூடாது. அவ்வாறு நினைப்பது நரியின் கதைபோலாகி விடும் என்று ஏளனமாகவும் அதே சமயத்தில் மக்கள் மனம் புகும்படி முறையாகவும் சமூகத்திற்குக் கூறுகிறார். அப்பர் கூறும் நரியின் கதையை அறியலாம்.

**நரியின் கதை**

வேடன் ஒருவன் வேட்டைக்குச் சென்றான். ஒரு அம்பினால் யானையை வீழ்த்தினான். பேராசை இடம் கொடுத்தது. மேலும் வேட்டையாட எண்ணினான்.

வில்லில் பூட்டப்பட்ட நாணில் கொழுப்பினை நிறையத் தடவினான். அப்போது வேடனைப் பாம்பு கடித்தது. இறந்தான் வேடன்.

அவ்வழியே வந்த நரி இதனைக் கண்டு ஆனந்தமடைந்தது. இறந்த யானை ஒருமாதத்திற்கும், வேடன் ஒருவாரத்திற்கும் உணவு கிடைத்து என உழைக்காமல் கிடைத்த உணவு கண்டு மகிழ்ந்தது.

நரி, முதலில் புலால் வாடை வந்த வில்லின் நாணில் உள்ள கொழுப்பை உண்ண வாய்வைத்தது. கடித்தது. நாண் அறுந்து விசிறி அடித்து நரியின் வாய்கிழிந்து இறந்தது.

இதைப்போல், வேள்வித்தீயைச் சிவபெருமானின் உருவமாக எண்ணி வழிபடாமல், அவிபாகம்தந்து ஏமாந்து போகின்றனர். வேள்வித்தீ சிவந்த நிறம் உடைய ஒளியாகும். சிவபெருமானின் உடலாகும். சிவமெனும் செம்மேனி எம்மான் ஆவன். எனவே, வேள்வித்தீயில் அவிதருவது சிறப்பன்று.

சூரியவழிபாடு என்பதும் சிவனின் வலக்கண் வழிபாடாகுமே ஒழியத் தனியாகச் சூரியன் என்பவனுக்கு அன்று என உணர வேண்டும். வெற்றுச்சூரியன் நினைவு வரக்கூடாது. சூரியன் சிவபெருமானின் கட்டளைக்கு உட்பட்டவனே ஆவான்.

ரிக், யசூர், சாமம், அதர்வணம் முதலிய நால் வேதங்களும் சிவபெருமானை வணங்குகின்றன. சிவபெருமானிடம் தன் குறைகளைக் களைய வேண்டுகின்றன. அருள்தரும் வைத்திய நாதனான சிவனை, வைதீஸ்சுவரன் கோவிலில் ரிக்வேதம் வணங்கியது என அத்தல வரலாறு விளக்குகிறது. எனவே கல்மனம் கொண்டவர்கள் இக்கருத்தை ஏற்காமல், கோள்களை வணங்குவர். வேள்வித்தீயினைச் சிவனது மேனியாகக் கருதாமல் இருப்பர் என்று திருநாவுக்கரசர் சமூகநோக்கில், தமிழ்வழக்கில் வேள்விகள் கிடையாது என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

*"அங்கதிரோன் அவனை அண்ணலாக் கருதவேண்டாம்"*[30]

என்றும்,

*அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்*
*அருக்கன் ஆவான் அரன்உரு அல்லனோ*
*இருக்கு நான்மறை ஈசனையே தொழும்*
*கருத்தினை நினையார் கல் மனவரே*[31]

என்றும் மிகத்தெளிவாகச் சமூகத்திற்கு வேள்வி வேண்டாம். சிவனது மேனியாகத் தீயை வணங்குங்கள். சூரியன், சந்திரன் மற்றும் இருக்கு முதலிய வேதங்கள் யாவும் அருள்தரும் வல்லமை உடையவை அல்ல. சிவபெருமானே முழு முதல்வன்.

அவனிடத்தில் அன்பு வழிபாடு நடத்துங்கள். பூமாலை புனைந்து ஏத்துங்கள்; புகழ்ப்பாடல் பாடி மன ஒருமையுடன் வணங்குங்கள். நமது பழக்கமற்ற வேள்வி செய்து அழியாதீர்கள் என்பன போன்றவற்றைச் சிந்தித்து, உணர்ந்து, தெளியும் அரிய கருத்துக்களைத் தன் பதிகம் வழியாகச் சமூகத்திற்கு அறிவுரை வழங்குகிறார். இக்கருத்தை ஏற்காதவர்களைக் கல்மனம் கொண்டோர் எனச் சாடுகிறார்.

ஆன்மிகம் என்பது மனதை நெறிப்படுத்தும் கருவியாக அமைய வேண்டும். பூசை, வேள்வியில் மனம் செல்லக்கூடாது என்பதையே இப்பாடல் உணர்த்துகிறது.

*உருகாதார் உள்ளத்து நில்லார் போலும்*
*உகப்பார் மனத்தென்றும் நீங்கார் போலும்*[32]

என்பதற்கிணங்க உகந்து மனம் ஒன்றி நினைத்து எளிய வழிபாட்டினையே அப்பர் வலியுறுத்துகிறார். இறையுணர்வு இல்லாத வெற்றுச் சடங்குகள் மூலம் இறைவனை அடைய முடியாது. அன்புடன் உருகும் மனம் பெற்றால் சிவபெருமானைப் பெற்று எல்லா வளமும் பெறலாம்.

### அப்பர் கூறும் முத்தி

மனிதன் சமூகத்தோடு இணைந்து வாழ்கின்றான். அவனது வாழ்வு சிறக்க வேண்டுமென்றால், தனக்கென முயலாது பிறர்க்கென முயன்று வாழ வேண்டும்.

ஈதல் இசைபட வாழ்தல் தான் உயிருக்கு ஊதியம் என்று வள்ளுவர் வரையறை கூறுகிறார். பிறருக்கு உதவுவதே சிறந்த பயனாகும். இல்லறத்தில் பயன் கழித்து முத்திக்குச் செல்லப் பலரும் பலவழிகாட்டுகின்றனர். அப்பர் பெருமான் சமூக நோக்கில் நமக்குக் கூறும் கருத்தினை ஆராய்வோம்.

*மனைவிதாய் தந்தை மக்கள் மற்றுள சுற்றமென்னும்*
*வினையுளே விழுந்தழுந்தி வேதனைக் கிடமாகாதே*
*கனையுமா கடல்சூழ் நாகைமன்னு காரோணத்தானை*
*நினையுமா வல்லீராகில் உய்யலாம் நெஞ்சினீரே*[33]

அப்பரடிகள், மனைவி, பிள்ளை, சுற்றத்தில் திளைத்தால் வினை பெருகும். அதனால் துனம்பம் மிகும். இவற்றைவிடுத்து, கடற்சூழ் நாகையில் அருள்தரும் சிவனை நினைத்துப் போற்றி உய்வு பெறுங்கள் என்கிறார்.

உற்றார் உறவினர்களுக்காக இவ்வுலகில் உழல்வதை விட்டுவிட்டு இறைவன் திருத்தாளின் புகழ்பாடி மகிழ்ந்து இன்புறலாம் என்னும் கருத்தை மக்களுக்குச் சமூகநோக்கில் அப்பரடிகள் அழகாக விளக்குகிறார்.

சிவபெருமானை உறுதுணையாக எண்ணிப் போற்றினால் நம்மைச் சூழ்ந்துள்ள பாவங்கள் அழியும். மனம் அறச் சிந்தனையுடன் நற்குணத்தை நாடவேண்டும். அப்போது இறைவன் பரகதி அருள்வான் என்று தன் நெஞ்சிற்கு அறவுரைகூறுவதுபோல அப்பரடிகள் சமூகத்திற்கு அழகுமிகு அறக்கருத்தைக் கூறுவது ஏற்றுமகிழத்தக்கதாகும்.[34]

உண்மையுடன், ஆசை, கோபம், வெறுப்பு, நீக்கி வாழ்பவருக்கு இறைவன் தானே வந்து அருள் செய்வான். தீக்குணங்களைப் பலியிட்டவரே சிவனாரின் அடிபோற்றும் தொண்டராவார் என்பதை அப்பரடிகள்,

*"அறத்தையே புரிந்த மனத்தனாய்*
*ஆர்வச் செற்றக் குரோதம் நீக்கியுள்*
*திறத்தனாய் ஒழிந்தேன் திருவாரூர் அம்மானே"*[35]

என்று பதிவு செய்கிறார். இறைவனிடம் நாம் வேண்டுவதை அவர்,

*"பொய்யினைத் தவிர விட்டுப் புறமலா அடிமை செய்ய*
*ஐயநீயருளிச் செய்யாய் ஆதியே ஆதிமூர்த்தி"*[36]

என்று பொய்மைகள் எல்லாம் நீக்கி, மெய்த்தொண்டு செய்ய அருள் செய்ய வேண்டும் என்று தெளிவாக வேண்டுகிறார். அவ்வாறு

பொய்யைவிட்டுத் தொண்டை மெய்யாகச் செய்தால் பரமன் நிச்சயம் பரகதி அருள்வான் என்ற கருத்தை விளக்குகிறார். மேலும், இப்பிறவியில் பெருமானே! உன் திருவடிகளை என் நெஞ்சில் பதித்துவிடு அடுத்த பிறவியிலாவது நீங்கள் அருளப்போவதை யாரால் அறியமுடியும் என்ற வினாவினை எழுப்பி அப்பரடிகள் அருளிய பதிகம் பக்தி மாலையில் மணப்பதாக உள்ளதை அறியலாம்.

*"வெம்மை நமர்தமர் மிக்குவிரவி விழுப்பதன் முன்*
*இம்மையுன் தாள் என்றன் நெஞ்சத்தெழுதிவை யீங்கு இகழில்*
*அம்மை அடியேற்கு அருளுதி என்பதிங்கு ஆர் அறிவார்*
*செம்மை தருசக்திமுற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே"*[37]

என்று திருச்சத்திமுற்றத்துச் சிவக்கொழுந்தான பெருமானை அப்பரடிகள் ஆழ்ந்து வேண்டுவது இன்புறும்படி உள்ளது. முத்தி இப்போது கிடைக்க வில்லையாகிலும் அடுத்த பிறவியில் கிடைக்கும் என்ற குறிக்கோளுடன் அப்பர் பெருமான் வாழ்வதும், நம்மை வாழ அறிவுறுத்துவதும் சமூகத்திற்குக் கிடைக்கும் அரிய அறிவுரை எனலாம்.

சமூக மக்கள் சிவகதிபெற அவர் தம்மை அர்ப்பணித்து அறவுறைகளை விதைத்து, மக்கள் மனமாகிய நிலத்தை இதமாக்குகிறார். தேவாரப் பாமாலை எனும் நீர்ப் பாய்ச்சுகிறார். நல்ல விளைவை மக்களேதான் முடிவு செய்து அறுவடை பெறவேண்டும். இது அப்பரின் அரிதான அறிவுரையாகும்.

**நிறைவுரை**

தாண்டக வேந்தரான அப்பரடிகள் பக்தியுணர்வுடன் பாடிய பதிகங்களில் மக்கள்மாட்டு விளித்துச் சமயவுண்மைகளைப் பலவிடங்களில் பாடுகிறார். சமூகத்திற்கு அறவுரையாகப் பல பதிகங்களைப்பாடி ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார். தனக்கு வந்த துயரத்தை எண்ணி இனிச் சமூகம் துன்பப் படக்கூடாது என்று, மனத்துள் நினைத்து, சமூகத்திற்காக, சமூகச் சிந்தனையோடு பதிகம்பாடி, தம்வாழ்வைத் தொண்டிற்கு அளித்து "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்று வாழ்ந்து காட்டியுள்ளார். அப்பரின் வாழ்வில் சமூக நோக்கம் மிகுந்து உள்ளதை உணரலாம்.

## குறிப்புகள்

1 பெரியபுராணம் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் பா.18

2 பெரியபுராணம் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் பா.18

3 பெரியபுராணம் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் பா.598

4 பெரியபுராணம் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் பா.18

5 ( 3:39:4 )

6 ( 5:17:9 )

7 ( 4:திருவிருத்தம்:1 )

8 குறள் 74

9 குறள் 757

10 பெரியபுராணம் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் பா.259

11 ( 1:50:1 )

12 பட்டினத்தார் பாடல்

13 திருக்குறள் 231

14 திருக்குறள் 10

15 தனித்திருத்தாண்டகம் 3

16 அபிராமி அந்தாதி

17 ( 4:1:3 )

18 ( 4:திருநேரிசை:9 )

19 ( 4:102:3 )

20 ( 9:95:6 )

21 ( 6:95:5 )

22 ( 6:78:5 )

23 பாவநாசத்திருக்குறுந்தொகை பா.9

24 ( 5:99:4 )

25 ( 6:31:7 )

26 திருத்தாண்டகம் பா.1

27 திருக்குறுந்தொகை பா.3

28 ஆதிபுராணத் திருக்குறுந்தொகை பா.7

29 நேரிசை பா.5

30 ( 4:41:8 )

31 ( 5:100:8 )

32 ( 7: :10 )

33 ( 4:49:1 )

34 திருத்தாண்டகம் பா.7

35 ( 4:52:8 )

36 ( 1:1:7 )

37 ( 4:16:6 )

# இலக்கிய நோக்கில் சுந்தரர் தமிழ்

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவவதாரம்

நம்பியாரூரர், வன்தொண்டர், நாவலர்கோன், திருநாவலூரர், ஆரூரர், நாவலர்தனிநாதன், தமிழ்நாதன், தம்பிரான் தோழர், சடையன், இசைஞானி காதலன் என்றெல்லாம் தம்மைத் தம்முடைய பாடல்களிற் குறித்துக் கொள்கிறார். ஏழாம் திருமுறையில் தன்னை எங்கும் சுந்தரர் என்று குறித்துக் கொள்ளவில்லை.

சுந்தரர் திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருநாவலூரில் சடையனார், இசைஞானியார் என்பார்க்குத் திருமகனாய் அவதரித்தார். இளமையில் நம்பியாரூரர் என்ற திருப்பெயரிட்டு அழைத்தனர்.

நம்பியாரூரர் தெருவிலே சிறுதேர் உருட்டி விளையாடும் காலத்து அந்நாட்டு அரசன் நரசிங்கமுனையர் குழந்தையின் திருமுகப்பொலிவு கண்டு மகிழ்ந்து சடையனார் இசைவு பெற்று, அரச குமாரனாய் அன்பினால் வளர்த்து வந்தார்.

## கயிலை வாழ்வு

ஆலால சுந்தரர் என்ற பெயரில் கயிலையில் சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டராய்ப் பணி செய்தவர் சுந்தரர் ஆவார்.

திருநாவலூராரைக் காப்பியத் தலைவராக அமைத்து அவர்தம் வரலாற்றைத் தெய்வப்புலமைச் சேக்கிழார் இரண்டு பகுதிகளாக அமைத்துக் கொள்கிறார். திருக்கயிலையில் வாழ்ந்த வாழ்வு, நிலவுலகில் வாழ்ந்த வாழ்வு என முறைப்படுத்திக் கொள்கிறார்.

திருநாவலூரிற் பிறந்து, திருவஞ்சைக் களத்திலிருந்து வெள்ளானை மீதேறித் திருக்கயிலை ஏகும் வரையில் உள்ள வாழ்வை நிலவுலக வாழ்வாக அமைத்து, தடுத்தாட் கொண்ட புராணம், ஏயர்கோன்கலிக்காம நாயனார் புராணம், கழறிற்றறிவார் புராணம், வெள்ளானைச் சருக்கம் என்ற நான்கு பிரிவுகளில் 776 பாட்டுகளால் திறம் வியந்து கூறுகிறார். இவைதவிர விறன் மிண்ட நாயனார் புராணத்திலும் இவர்தம் வரலாறு பேசப்படுகிறது.

திருக்கயிலையில் ஒரு சோதியை உபமன்யுமுனிவர் கைகள் கூப்பி வணங்கி, அச்சோதி செல்லும் திசையை நோக்கி எழுந்து நின்று வணங்குகிறார். சிவபெருமானின் சேவடியைத் தவிரப் பிற எவற்றையும் வணங்காத உபமன்யூ முனிவர் வணங்கிய விபரத்தை உடன் இருந்த முனிபுங்கர் வினவ, அவர்,

*தம்பிரானைத்தன் உள்ளம் தழீஇயவன்*
*நம்பி ஆருரன் நாம் தொழும் தன்மையான்*[1]

என்று கூறி வரலாற்றை முனிவர்களுக்கு உரைக்கிறார். அப்போதுதான் ஆலாலசுந்தரர் கயிலையில் இருந்து தென்னாடு போந்ததன் வரலாற்றைக் கூறுகிறார். இங்கேதான் சுந்தரர் என்ற சொல் உபமன்யூ முனியின் வாக்கில் வெளிப்படுகிறது. சேக்கிழார் தம் கூற்றாகச் சுந்தரர் என்ற சொல்லை எடுத்தாளவில்லை.

கயிலையில் ஒரு நாள் சுந்தரர், நந்தவனத்தில், உமையம்மையின் சேடியர்களாகிய கமலினி, அனிந்திதை என்ற இரு பெண்களைக் கண்டு மனம் போக்கினார். இதனால் இறைவன் இவரை மண்ணில் பிறந்து அவ்வாசையைத் தீர்த்துப் பின் மீண்டும் கயிலையை ஏகுவாய் என ஆணையிட்டார். மானிட வாழ்வு மையலில் மயக்கம் தரும் எனவே ஐயன் தக்க தருணத்தில் தடுத்தாட் கொள்ள வேண்டும் என விண்ணபித்தார். இறைவனும் அருள் செய்தார்.

**தென்திசை வாழ்வு**

மாதவம் செய்திட்ட தென்திசை வாழ்ந்திட, தீதிலாத் திருத்தொண்டத்தொகை தர, திருநாவலூரில் அவதரித்தார்.

**தடுத்தாட்கொள்ளல்**

நாவலூரார் வளர்ந்து மணம் செய்யும் வயதை அடைந்தார். தந்தையார் புத்தூரில் வாழும் சடங்கவிச் சிவாச்சாரியாரின் திருமகளைத் தம் புதல்வருக்கு மணம் பேசி முடித்தனர். இளவரசராகிய நம்பியாரூரர் மணமகன் கோலத்தில் மணமேடைக்கு வந்தார். இவரைத் தடுத்தாட் கொள்ளும் பொருட்டு மறைமொழி திருவாயனாகிய சிவபிரான் திருமணப் பந்தரிடை நின்று எல்லோரும் நான் கூறுவதைக் கேளுங்கள் என மொழிந்தார். கிழவேதியரின் பெருங்குரலைக் கேட்டு அனைவரும் வியந்தனர்.

நம்பியை நோக்கி "உனக்கும் எனக்கும் ஓர் வழக்குள்ளது. அதைத் தீர்த்த பின்னரே நீ திருமணம் செய்து கொள்ளுதல் வேண்டும்" என்றார். அதுகேட்ட நாவலூரார், என்ன வழக்கு உடனே கூறும். அதனைத் தீர்த்தபின் மணமுடிக்கிறேன் என்றார்.

கிழவேதியர் இந்த நாவலூரன் எனக்கடிமை என முறை யிட்டார். நாவலூரர் வியந்து நகைத்து, ஆதி சைவ அந்தணர்கள், வேறோர் அந்தணர்களுக்கு அடிமை யாவதுண்டோ? நீர் பித்தனோ, என்றார். கிழவேதியர் வித்தகம் பேச வேண்டாம். அதற்கு என்னிடம் ஆவணம் உள்ளது என்று கூறி ஒரு ஓலையைக் காட்டினார். நம்பியாரூரர் விரைந்து சென்று ஓலையைப் பிடுங்கிக் கிழித்தெறிந்தார். வேதியர் புலம்பினார். வழக்கு வலுத்தது. கிழவேதியர் இவன் செயலைப் பார்த்தீரா? இதுமுறையா. என்னிடம் மூலவோலை உள்ளது அதனைக் கொண்டு நிரூபிப்பேன். ஆனால் இங்கு இல்லை என்றார்.

நம்பியாரூரர் கிழவேதியரைப் பார்த்து இவன் பழைய மன்றாடி போலும், எனக் கூறி, உன் ஊர் எது என்றார். திருவெண்ணெய்நல்லூர் என்று கிழவேதியர் கூற, அங்கேயே உன் வழக்கைத் தீர்ப்பேன் என்று கூறி நம்பியாரூரர் பின் செல்லக் கிழவேதியர் முன் சென்றார்.

**வழக்கு வெல்லுதல்**

கிழவேதியர் நாவலூரார் மீது தொடுத்த வழக்கை வெண்ணெய் நல்லூர் மறையவர்கள் ஆராய்ந்து ஓலையில் உள்ள பொருளும், கையெழுத்தும் உண்மையானவை என அறிந்து நம்பியாரூரர் கிழவேதியருக்கு அடிமை எனத் தீர்ப்பு வழங்கினர்.

மறையோர்கள் கிழவேதியரை உமது வீடு எங்குள்ளது என்றனர். என் வீட்டைக் காட்டுகிறேன் வருக என அழைத்துச் சென்று திருவெண்ணெய்நல்லூர் அருட்டுறை ஆலயத்துள் மறைந்தார் இறைவன். ஆரூரருக்குக்காட்சி தந்தார். யாம் தடுத்தாட் கொண்டோம் ஆரூரனே! நீஎம்முடன் வன்மை பேசியதால் வன்தொண்டன் எனப்படுவாய் என்று கூறிச் செந்தமிழால் எம்மைப் பாடுக என்றார். வன்தொண்டர் இறைவனின் திருவடிகளை வணங்கி உலகைக்காக்கும் அருட் கடலே! எளியேன் தங்களை என் சொல்லிப் பாடுவேன் என

இறைஞ்சினார். இறைவன், நீ என்னைப் பித்தன் என்று இகழ்ந்தாயே அதனையே பாடுக என்றார். நம்பியாரூரர் 'பித்தா பிறைசூடி' எனத் திருநெறிய செந்தமிழ்ப்பதிகம் பாடினார். அன்றுமுதல் பதிகம் பாடித் தலப்பயணம் மேற்கொண்டு வழிபட்டுவரலானார்.

**தவநெறி வேண்டிப் பெறல்**

நம்பியாரூரர் திருத்துறையூர் சென்று அங்குள்ள இறைவனிடம் தவநெறியை வேண்டிப் பெற்றார். இறைவன் முதலில் நம்மியாரூரரை அருட்திரு நோக்கம் செய்தார். அது நயன தீட்சை எனலாம். பித்தா என அடியெடுத்துக் கொடுத்தது மெய்ஞான உபதேசம் எனலாம். இவ்வாறு படிப்படியாக இறையருள் பெற்ற நம்பியாரூரர் சித்த வட மடத்திலே திருவடி தீட்சைப் பெற்றார்.

தில்லை சென்று திருச்சிற்றம்பலவானனை வழிபட்டார். நம்பியாரூரரின் வழிபாட்டில் மனம் போக்கிய சேக்கிழார் அவர் தில்லையில் நடராசப் பெருமானை வழிபட்டதை,

*ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள அளப்பரும்*
*கரணங்கள் நான்கும்*
*சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும் திருந்து சாத்துவிகமே ஆக*
*இந்துவாழ் சடையன் ஆடும் ஆனந்த எல்லையில்*
*தனிப்பெருங்கூத்தின்*
*வந்தபேர் இன்பவெள்ளத்துள் திளைத்து மாறிலா*
*மகிழ்ச்சியின் மலர்ந்தார்*[2]

என்று நம்பியாரூரரின் பரவச நிலையைப் பைந்தமிழில் நமக்குக் காட்டுகிறார்.

**தம்பிரான் தோழர் ஆதல்**

நம்பியாரூரர் பல தலங்களை வணங்கி இறைவன் புகழ்பாடித் திருவாரூர் அடைந்தார். திருவாரூர் அடியார்களிடத்தில் 'ஆரூரன் வருகிறான் எதிர் கொண்டழையுங்கள்' என இறைவன் அருளினார். அடியார்கள் வரவேற்பை ஏற்றுக்கொண்ட ஆரூரர் திருமூலட்டானத்து இறைவனைத் தொழுது தூமலர் சூட்டிப் பாமாலை அணிவித்தனர். அப்போது யாவரும் அறியும் வண்ணம், நம்பியாரூரனே உனக்கு நம்மைத் தோழமையாகத் தந்தோம். நீ எம்மால் தடுத்தாட்கொள்ளப்

பெற்ற நாளில் திருமணக் கோலத்தில் இருந்தாய். அக்கோலத்தையே எப்போதும் மேற்கொண்டு இந்நிலவுலகில் வாழ்வாயாக" என்று அருள்வாக்கு விண்ணிடை தோன்றியது. அன்று முதல் தம்பிரான் தோழர் என ஆரூரர் அழைக்கப்பெற்றார்.

**பரவையார் திருமணம்**

கயிலையில் பார்வதி தேவியின் சேடியரான கமலினி பரவையார் என்ற பெயரில் உருத்திரகணிகையர் குலத்தில் பிறந்து திருவாரூர் ஈசனுக்குத் தொண்டு செய்து வரலானார். தம்பிரான் தோழர் பரவையார் மீது காதல் கொண்டார். தன் தோழனின் காதலுக்கு வழிவிட்ட திருவாரூர் ஈசன் அடியார்கள் கனவில் தோன்றிப் பரவையாரைச் சுந்தரனுக்குத் திருமணம் செய்து வையுங்கள் என்றார். திருமணம் இனிதே நிகழ்ந்தது. சுந்தரர் ஆரூர் இறைவனைச் செந்தமிழால் பாமாலைகள் பாடிப் போற்றினார்.

**திருத் தொண்டத் தொகை அருளல்**

நம்பியாரூரர் திருவாரூரில் பலகாலம் தங்கிப் புற்றிடங் கொண்டாரை வழிபட்டு வரலானார். ஓர் நாள் ஆலயம் புகும்போது தேவாசிரியன் மண்டபத்தில் ஒருங்கு குழுமியிருக்கும் சிவனடியார்களை உள்ளத்தில் நினைத்து, இவ்வடியார்களுக்கு அடியவனாகும் நாள் எந்நாளோ என்று நினைத்தவாறே திருக்கோயிலுக்குள் சென்றார். அந்நிலையில் தேவாசிரியன் மண்டபத்தில் இருந்த விறன்மிண்டர் என்பவர் வன்தொண்டன் அடியார்களை மதிக்காமல் கோயிலுக்குள் செல்கிறார் பாருங்கள் என்று கூறிச் சிவனடியார்களை மதிக்காத நம்பியாரூரனுக்குப் புறம்பு; அவனுக்குப் பிரானாகிய சிவபெருமானும் புறம்பு என வெகுண்டுரைத்தார்.

அடியார்க்கு அடியவராக ஆரூரரை அறிமுகப்படுத்த கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தைப் புற்றிடங்கொண்ட ஈசன் நன்கு பயன்படுத்திக் கொண்டார். சுந்தரனே! உன் மனப்பாங்கை அடியார்கள் அறிந்திட நீவீர் தொண்டர்களின் சிறப்பை விரித்துரைக்கும் சொன்மாலை பாடுக எனப் பணித்தார்.

ஆரூரர் இறைவனின் கருணைத் திறத்தைப் போற்றி, வணங்கி அடியார்கள் பெருந்திறம் அறியாத எளியேன் எவ்வாறு அவர்களின் பொருள்சேர் புகழை விரித்துரைப்பேன் என்று கண்ணீர் மல்க

வேண்டினார். சிவபெருமான் 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'[3] என்று அடி எடுத்துக் கொடுத்தார். உடனே ஆரூரர் அடியார்களின் பெயரினைக்கூறி அடியேன் என்றும், சில அடியார்களின் அடியார்களுக்கு அடியேன் என்றும் பதினொரு பாடல்களைத் திருத்தொண்டத் தொகையாகப் பாடினார். தேவாசிரியன் மண்டபத்தில் இருந்த அடியார்கள் மகிழ்ந்தனர். சுந்தரர் மண்டபத்துள் அடியார் குழாமுடன் அமர்ந்து மகிழ்ந்தார். திருத்தொண்டத் தொகையைச் சுந்தரர் அருளக் காரணமானவர் விறன்மிண்டர் ஆவார். இதனைச் சேக்கிழார், பெரியபுராணத்தில்,

*வேறு பிறிது ஏன்? திருத்தொண்டத்*
*தொகையால் உலகு விளங்க வரும்*
*பேறு தனக்குக் காரணர் ஆம்*
*பிரானார் விறண்மிண்டரின் பெருமை*[4]

என்று பதிவு செய்துள்ளார்.

**நெல் பெறுதல்**

நம்பியாரூரர் பரவையாருடன் இனிதே இல்லறம் நடத்திப் புற்றிடம் கொண்ட ஈசனைப்போற்றி வந்தார். குடும்பத்திற்கு வேண்டிய உணவுப் பொருட்களைக் குண்டையூர்கிழார் என்பவர் அன்புடன் அளித்து வந்தார். ஒருமுறை மழை பொய்த்ததால் வேளாண்மை செய்யாது, சுந்தரருக்கு நெல் அனுப்ப முடிய வில்லையே எனக் குண்டையூர்கிழார் வருந்தி உணவருந்தாமல் துயில் கொண்டார். இறைவன் கனவில் தோன்றி, நம்பியாரூரன் பொருட்டு உன்பால் நெல் தந்தோம்" என்று கூறினார். கண் விழித்துப் பார்த்தார். குண்டையூர் முழுதும் நெல்மலை. இறைவனைப் போற்றியவர் உடனே திருவாரூர் சென்று சுந்தரரிடம் கூறினார்.

சுந்தரர் வருகைதந்து, இறைவன் திருவருளை வியந்து, இவ்வளவு நெல்லையும் எடுத்துச் செல்ல ஆட்கள் என்னிடம் இல்லை. நீரே ஏற்பாடு செய்க எனத் தோழமையில் இறைஞ்சினார். அப்போது இறைவன் "நம் பூதகணங்கள் நெல்லை எடுத்து வந்து, திருவாரூர் முழுவதும் குவிக்கும்" என்றார். இந்த அசரீரியைக் கேட்ட சுந்தரர் மகிழ்ந்தார். இச்செய்தியைப் பரவையாரிடம் பகிர்ந்து கொண்டார். பரவையார் அவரவர் வீட்டுமுன் உள்ள நெற்களை அவரே எடுத்துக் கொள்ளலாம் எனப் பறையறிவித்தார். அடியார்கள் மகிழ்ந்தனர்.

பிறகு சுந்தரர் கோட்புலியார் நட்பில் அவரது மகளைத் தம்மகளாக்கிக் கொண்டு, திருப்புகலூர் சென்றார். அந்தக் காலமானது பங்குனி உத்திரக் காலமாகும். பரவையாருக்கும் பொன் வேண்டுமே என்ற எண்ணத்தில், வழிபாடாற்றிவிட்டு, திருப்புகலூர் கோவிலுக்குக் கட்டுமானத்திற்கான செங்கல்லைத் தலைக்கு வைத்துச் சிறிது நேரம் இளைப்பாறினார். விழித்துப் பார்த்தபோது செங்கல் பொன் கட்டியானது. உடனே திருப்புகலூர் ஈசனின் செயலை வியந்து பாமாலை பாடினார். இவ்வாறு பலதலங்களை வணங்கி, கூடலையாற்றூருக்கு இறைவன் மறையவராய் வந்து வழிகாட்ட அவ்வாலயத்தை வணங்கிப் பதிகம்சாற்றி, திருமுதுகுன்றம் வந்தடைந்தார்.

**ஆற்றிலிட்டுக்குளத்தில் எடுத்தல்**

திருமுதுகுன்றத்து இறைவனிடம் பொன் வேண்டினார். இறைவன் மகிழ்ந்து பன்னீராயிரம் பொன்தந்தான். பெற்ற நம்பியாரூரர், இப்பொன் திருவாரூரில் உள்ளோர் வியக்க அங்கு வர வேண்டும் என்றார். இறைவன் அசரீரியாக, இப்பொன்னை மணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூர் கமலாலயத்தில் எடுத்துக் கொள்க என்று அருளினார். மகிழ்ந்த சுந்தரர், மாற்று அறிய மச்சம் வெட்டி எடுத்துக்கொண்டு மணிமுத்தாற்றில் இட்டார். பின்பு பல தலங்களை வணங்கித் திருவாரூர் வந்து பரவையாரிடம் விபரம் கூறினார். பரவையார் வியந்து சுந்தரருடன் கமலாலயம் சென்று பொன்னைத் தேடினார். பொன் வரவில்லை. பரவையார் நகைத்தார். சுந்தரர் மனம் கலங்கி,

*'பொன் செய்த மேனியீர்'*[5]

எனவரும் பதிகம் பாடிடப் பொன் கிடைத்தது. உடனே மச்சம் வெட்டி வைத்ததுடன் ஒப்பிட்டார். மாற்று குறைந்திருந்தது. மீண்டும் சுந்தரர் பாமாலை பாடினார். பொன்மாற்று உயர்ந்தது. திருவாரூர் அடியார்கள் இறைவனின் அருட்திறத்தையும் சுந்தரரின் பக்திமேம்பாட்டையும் மெச்சிப் போற்றினர்.

சுந்தரர் பலதலங்களைப் பணிந்து குருகாவூர் வந்தார். அவ்வூர் இறைவன் பொதிசோறு அளித்தான். பின்னர்க் கச்சூர் வந்து வழிபாடாற்றி அடியார்களுடன் தங்கினார். மறையவர் வடிவமுடன் சிவனார் வந்து, வீடுகள்தோறும் இரந்து வந்து உணவிட்ட அருள்

செய்தார். பின்னர்ப் பல தலங்களை வணங்கித் திருவொற்றியூர் வந்தார்.

**சங்கிலியார் திருமணம்**

கயிலை மலையில் பார்வதி தேவியின் சேடியரில் ஒருவரான அனிந்திதை ஞாயிறு கிழாரின் மகளாக இருந்து அடியார் ஒருவரையே மணப்பேன் என வளர்ந்து வந்தார். பெற்றோர் சம்மதத்துடன் திருவொற்றியூர் கன்னிமாடத்தில் இருந்து இறைவனை வழிபட்டு வரலானார்.

நம்பியாரூரர் ஓர்நாள் சங்கிலியாரின் அழகில் மனம் போக்கி இறைவனைத் திருமணம் செய்விக்க வேண்டினார். இறைவன் சங்கிலியார் கனவில் தோன்றி நீ சுந்தரனை மணந்து கொள் என்றார். பரவையார் இறைவனிடம் சுந்தரர், திருவாரூரில் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருப்பதை அறிதல் வேண்டும் என்றார். சங்கிலியே வன்தொண்டன் உன்னைப் பிரியேன் என நீ சத்தியம் வாங்கிக் கொள் என்று உபாயம் தந்தார்.

இறைவன் சுந்தரரை அடைந்து, நீ சங்கிலியிடம் சென்று உன்னைவிட்டுப் பிரியேன் எனச் சபதம் செய்துகொடு என்றார்.

சுந்தரர் உடனே இறைவனிடம், ஐயனே நான் பல தலங் களுக்குச் செல்பவன். எனவே இச்சபதம் எனக்குப் பெருந்தடையாகும்.

நான் சபதம் செய்யும்போது நீவீர் ஆலயத்துள் இருக்காது அருகில் உள்ள மகிழ மரத்தின்கீழ் இருக்கவேண்டும் என வேண்டினார். இறைவன் இசைவு தந்தார். ஆனால் இறைவன் சங்கிலியாரிடம் இதனை அறிவித்தார்.

இறைவன் சங்கிலியாரிடம் சுந்தரர் செயலைக் கூறினார். "நீ மகிழமரத்தடியில் சபதம் செய்து தரும்படி கேட்பாயாக" என்று கூறி மறைந்தார். சங்கிலியாரும் விபரம் உணர்ந்து இறைவன் கூறியபடி நடந்தார். விடிந்ததும் சுந்தரர் மணக்கோலத்தில் சங்கிலியாரை எதிர்பார்த்திருந்தார். சபதம் செய்யத் தோழியர் அழைத்தனர். சுந்தரர் ஆலயத்தின் முன் சென்றார். சங்கிலியார் தேவரீர் இதற்காக இறைவன் முன்பு வேண்டாம்; மகிழ மரத்தடியில் சபதம் செய்க என்றார். வேறு வழியில்லாமல் மருட்சியுடன் மகிழ மரத்தடியில் சபதம் செய்து மணம் முடித்தார். இந்நிகழ்விற்கு சுந்தரர் பதிகங்கள் அகச்சான்றாகின்றன.

### கண்ணிழத்தல்

சுந்தரர் சங்கிலியாருடன் மகிழ்ந்திருக்கும் வேளையில் திருவாரூர் நினைவு வரத் திருவொற்றியூர் எல்லையைத் தாண்டினார். சபதத்தை மீறியதால் கண்கள் ஒளி இழந்தன. சுந்தரர் கலங்கினார் அடியார்கள் வழிகாட்டிடத் திருவாரூர் செல்ல முயன்றார்.

சுந்தரர் இறைவனைப் புகழ்ந்தும், இகழ்ந்தும் பதிகம் பாடினார். என்பிழையைப் பொறுக்காது கண்ணைப் பறித்தீரே. நீரே பழிபட்டீர் என்றெல்லாம் பாடித் திருவெண்பாக்கம் சென்றார். இறைவன் ஊன்றுகோல் தந்தார். அம்மையார் அருள் செய்தார். பலதலங்களை வணங்கித் தன் அவலத்தைப் பதிகமாக்கிப் பாடி, காஞ்சி ஏகாம்பம் அடைந்தார். இடக்கண் ஒளியை இறைவன் தந்தார். பின்பு திருவாவடுதுறை முதலிய தலங்களை வணங்கித் திருவாரூர் சென்று வலக்கண் ஒளியையும் பெற்று மகிழ்ந்தார்.

### இறைவன் தூது

சுந்தரர் சங்கிலியாரை மணந்ததை அறிந்த பரவையார் கோபத்திலிருக்க, சுந்தரர் அறிந்து தன் தோழரான திருவாரூர் இறைவனைத் தூது அனுப்பினார். இறைவன் முதலில் மறையவர் வடிவில் சென்று தோற்றார். பின்னர்த் தன்தோழனுக்காகச் சுயவுருவில் பரவையார் மாளிகை அடைந்தார். நள்ளிரவில் தூது சென்று வெற்றி கண்டார். சுந்தரரும், அடியார்களும் மகிழ்ந்தனர்.

### சேரமான் நட்பு

சேர மன்னர் சேரமான் பெருமாள் நாயனாருடன் நட்புக் கொண்டு இருந்த சுந்தரரை, சேரமான் தோழர் என அடியார்கள் போற்றினர். பலதலங்களைப் பாமாலையால் போற்றி அவினாசியில் வழிபடச் சென்றார்.

### முதலையுண்ட பாலகனை மீட்டுத்தருதல்

சுந்தரர், அவினாசி ஆலயத்தை வலம் வரும்போது ஒரு தெருவில் எதிர்எதிர் வீட்டில் மங்கல ஒலியும், அழுகுரலும் கேட்டன. விபரம் கேட்டறிந்தார். சிறுவயதில் ஒத்த வயதுடைய இருவர் மடுவில் நீராட, ஒருவனை முதலை பிடித்து உண்டது. அந்த வீட்டில் கேட்பது அமங்கல ஒலி. அதே வயதுடைய மற்றோருவனுக்கு உபநயனம்

நடக்கிறது அது மங்கலஒலி என்றனர். சுந்தரர் வருந்தினார். பிள்ளையைப் பறிகொடுத்த வீட்டிற்குச் சென்றார். அவினாசி அப்பனை வேண்டிப் பிள்ளையைத் தரச்சொல்லு காலனையே என்று பாமாலை பாடினார். வளர்ச்சியடைந்த நிலையில் சிறுவனை முதலை உமிழ்ந்தது. அனைவரும் மகிழ்ந்தனர். சுந்தரர் அடியார்களுடன் ஆலயம் சென்றுதொழுதார்.

**கயிலை சேர்தல்**

சேரமானுடன் தங்கியிருக்கையில் உலகில் தாம் வாழ்ந்தது போதும் என உணர்ந்து திருவஞ்சைக்கள இறைவனை வேண்டினார்.

"*தலைக்குத் தலை மாலை*"[6]

என்ற பதிகம் பாடினார். இது மண வாழ்க்கையை விட்டொழித்ததை விவரிக்கும் பதிகமாகும். சிவன் சுந்தரர் பாசத்தை அகற்றினார். ஊன் உடல் வேறு செய்தார் நொடித்தான் மலை ஈசனார். சிவபெருமான் வெள்ளானையையும், தேவர்களையும் அனுப்பிச் சுந்தரரைக் கயிலைக்கு அழைத்து வரப் பணித்தார். சுந்தரர் வெள்ளானையின் மீதமர்ந்து கயிலை சேர்ந்தார். சுந்தரர் விண்ணிடைச் செல்வதறிந்த சேரமான், குதிரையின் செவியில் ஐந்தெழுத்தோதிக் கயிலை சென்றார். சிவபெருமான் சேரமானைச் சிவகணத் தலைவராகப் பணிபுரிய அருள் செய்தார். உமாதேவியின் சேடியராக மீண்டும் கமலினி அனிந்திதை விண்ணுகு வந்தனர். சுந்தரர் வரலாறு இறைவனின் பெருங்கருணையையும், அடியார்களின் அரும் திறத்தையும் வெளிக்காட்டும்.

**சுந்தரர் காட்டிய சைவநெறி**

சுந்தரர் திருக்கயிலையிலிருந்து மண்ணுலகு வந்தார். பதினெட்டு ஆண்டுகள் வாழ்ந்தார். ஈசன் கண்களை மறைப்பித்தாலும் ஈசனே தனது முழுமுதற் கடவுள் என்று ஒழுகினார். அடியார்கள் வாய்மை தவறக்கூடாது என்பதற்குச் சுந்தரர் எடுத்துக்காட்டாக வாழ்ந்தார். இவரது பதிகங்கள் உலகவாழ்வின் சிக்கல்களை விவரிக்கின்றன. பின்னர் அதன்தீர்வாகச் சிவ வழிபாட்டினையும், ஒருமித்தவுணர்வுடன் ஆலயம் தொழுதலையும் வலியுறுத்துகின்றன.

தோழமை நெறியில், யோக மார்க்கத்தில் தன் அருட் பயணத்தைச் சுந்தரர் நிகழ்த்திக் காட்டியுள்ளார். அற்புதங்களை ஆண்டவனின் பேரருள் துணையுடன் நிகழ்த்தியுள்ளார். சிவபூசை, ஐந்தெழுத்தோதல், உலகவர்களுக்கு அறவுரை கூறுதல் ஆகியன இவர் இவ்வுலகிற்கு அளித்த கொடை எனலாம்.

**சுந்தரர் பதிகங்களும் தமிழ் இலக்கிய நோக்கும்**

சுந்தரரின் செந்தமிழ் இலக்கிய நலம் மிக்கதாக உள்ளது. கவிஞன் இயற்கையைக் கண்டு கவிதை வடிக்கிறான். தற்குறிப் பேற்றத்திலும் இயல்பு நவிற்சியிலும் உவகைகண்டு அனுபவித்துத் தன் உள்ளத்தில் உள்ளதைக் கவிதை யாக்குகிறான். தென்னையும் புன்னையும் அவனிடத்தில் பேசுகின்றன. அசையா மலைகளும், ஓடும் அருவிகளும், மேகங்களும் விண்மீன்களும், நிலவும் அவனுடன் விளையாடுகின்றன. கவிஞன் உலகினைத் தன் சொற்களால் தேன் கூடாக்குகிறான். அவனது உழைப்பு எல்லாம் கலைநோக்கமும், கவிதைக்கண்ணாலும் சொற்களைச் சேர்ப்பதுதான், மனிதர்கள் பார்வை மேலோட்டமாக நின்றுவிடும். கவிஞனுடைய நோக்கு, ஆழமாக உள்ளும் புறமும் சென்று உணர்ச்சிகளின் சங்கமத்தால், வெளிப்படுவதால் காலமெல்லாம் வாழ்கிறது. கவிதைகள் உயிர்வாழக் கவிஞன் தன் எண்ணங்களை உரமிடுகிறான். பிறர் கவிதைகளை இரசிப்பர். நுகருவர். புனையும் ஆற்றல் பலருக்கு இருக்காது. காரணம் கவிஞன் உருவாக்கப்படுபவன் அல்ல. அவனே உருவாகவேண்டும் என்பதாகும். எனவேதான், இன்றும் வள்ளுவமும், சிலம்பும், வில்லும், சிந்தாமணியும், மேகலையும், பாராட்டும், தொகையும், கீழ்க்கணக்கும், பரணியும் கோவையும், தேவாரமும் சிலிர்த்து வாழ்ந்துகொண்டிருக்கின்றன. இன்பம் தந்து கொண்டிருக்கின்றன.

கவிஞனுடைய கண் விண்ணுக்கும், மண்ணுக்கும், மண்ணுக்கும் விண்ணுக்குமாகச் சுழல்கின்றது. சுழன்று நோக்கிக் கற்பனை வடிவங்களைப் படைக்கின்றது. அவ்விழியோனுடைய எழுதுகோலால், அறிவிக்கப்படாத பொருள்வடிவம் பெறுவதுடன், உயிர்த்தன்மையும் எய்துகின்றன" என்று நாடக இமயக்கவி சேக்ஸ்பியர் கூறும் பகுதியை இங்குச் சிந்தித்து ஒப்பிடலாம். இவ்வாறு வாழும் இலக்கியமாகச் சுந்தரரின் செந்தமிழைக் காண்போம்.

**சுந்தராின் அருட்திறம்**

சைவசிந்தாந்த நெறிகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கில் யோக நெறியில் சுந்தரர் தம் வாழ்வை அமைத்துக் கொண்டார். அது ஈசனின் அருளாகும்.

யோக நிலையில், இறைவனும் ஆன்மாவும் தோழமை நெறியில் நிற்பார்கள் என்று திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் விளக்குகிறார். அங்கே நால்வரின் சுந்தரர் செயல்களைச் சிறப்பிக்கிறார்.

*மோகம் அறுத்திடின் நாம் முத்தி கொடுப்பதென்*
*ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் - தோகையர்பால்*
*தூதாகப் போகவிடும் வன்தொண்டன் தொண்டுதனை*
*ஏதாகச் சொல்வேன் யான்*[6அ]

என்று சுந்தரர் வாழ்வைச் சிவயோக வாழ்வு; சிவஞான வழி என்று சிறப்பிக்கிறார்.

நம்பியாண்டார் நம்பி தம் திருத்தொண்டர் திருவந்தாதியில்,

*ஞானவா ரூரரைச் சேரரை*
*அல்லது நாம் அறியோம்*
*மானவ ஆக்கை யொடும்புக்*
*கவரை வளரொளிப் பூண்*
*வானவ ராலும் மருவற்*
*கரிய வடகயிலைக்*
*கோனவன் கோயிற் பெருந்தவத்*
*தோர் தங்கள் கூட்டத்தில்*[7]

என்றும் சுந்தரர் அருட்திறத்தைப் பதிவு செய்துள்ளார்.

சிவபெருமான் தன் அழகுமேனியை ஆடியில் பார்த்து மயங்கிச் சுந்தரனே வருக என்றபோது;

*"வெயில் செய் வெங்கதிர் கோடிவிராய் எனச்*
*செயிரி லாத மெய்த் தேசொடும் தோன்றினார்"*[8]

என்று பேரூர் புராணம் புகட்டும். மேலும் இறைவனே தன்னைப்பாடக் கேட்டுக் கொண்டவர்,

*"முன்பு எனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலாலே*
*என்பெயர் பித்தன் என்றே பாடுக"*[9]

என்று சேக்கிழார் சுந்தரரின் புகழைக் குறிக்கிறார். இவ்வாறு அருட்திறம் மிக்க சுந்தரர் ஏழாம் திருமுறையில் 1026 பாடல்கள் இலக்கிய நயமுடன் அருளொளி பரப்புகின்றார்.

இலக்கியம் என்பது குறிக்கோளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். மேலும் சொல், பொருள் ஆகியவற்றில் நயமிகுந்து விளங்கவேண்டும். கற்பனைக்கு ஈடில்லாமல் விளங்க ஆசிரியனின் அனுபவமாகக் கவிதை தெரியவேண்டும். சுந்தரர் பெருங்கவிஞர். அவர் ஏழாம் திருமுறையில் தன் அனுபவத்தை முக்கனிச்சாறாத திருமுறைக் கற்கண்டு கலந்து அருளுகிறார். உறுதியான சொற்கள், பொருட் சிறப்பு, மெய்பாட்டுணர்வுகள், மேலும் கற்போர் உள்ளத்தை நன்மையாக்கும் ஞானக்கதிராக ஏழாம் திருமுறை உள்ளது. கல் மனத்தவரையும் நெகிழச்செய்யும் திறன் உடையது. நிந்தாத்துதி கூட பெருமித உணர்வைப் பிரதிபலிக்கிறது. கொள்கை உறுதியையும், தோழமைப் பண்பையும் சுந்தரர் கவிதைகள் சுமந்து மணம் வீசுகின்றன.

**இலக்கியப் பேரரசர் சுந்தரர்**

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் கல்விப் புலமையில் பெரிதும் ஈடுபட்ட சிவப்பிரகாச சுவாமிகள் சுந்தரரின் கல்வி மேன்மையைச் சிறப்பாகப் பாடுகிறார். உலகைக்காக்கும் பரமனே கல்வியில் பெரியவரான சுந்தரரைத் தன் கல்விக்குத் தோழனாக்கிக் கொண்டாராம்.

*"உறழ்ந்தகல்வி உடையானாம்*
*ஒருவன் வேண்டும் என இருந்து*
*துறந்த முனிவர் தொழும் பரவை*
*துணைவா நினைத்தோழமை கொண்டான்*
*சிறந்த அறிவு வடிவமாய்த்*
*திகழும் நுதற்கப் பெருமானே"*[10]

என்று சுந்தரரின் கல்வி மேன்மையை விவரிக்கிறார். சொற்றமிழ்க் கவி பாடுவதில் பரமனையே மயக்கியவர் சுந்தரர் ஆவார். கவியுலகில் பேரரசராய்க் கோலோச்சியவர் சுந்தரர் எனலாம்.

சமய இலக்கிய நோக்கில் ஏழாம் திருமுறையைச் சிந்திப்பது சாலச்சிறந்ததுதான். மேலும் அவ்விலக்கியத்தைப் பிற தமிழிலக்கியங் களோடு ஒப்பநோக்கி அறியும் போது ஏழாம் திருமுறை ஒரு சிறந்த இலக்கியமாகத் திகழ்வதை அறிந்து மகிழலாம். சுந்தரரின் ஏழாம் திருமுறையில் ஒருபகுதியான திருத்தொண்டத் தொகை தான் சைவ இலக்கியத்தின் முடி மணியான பேரிலக்கியமான பெரியபுராணம் எழுவதற்கு மூலமாக விளங்கியது என்றால் சுந்தரரின் கவிதா மேன்மையை நன்கு உணரலாம்.

**சுந்தரர் தேவாரப் பெயரமைப்பு**

பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளைத் தேவராம் என்று சைவவுலகம் போற்றி மகிழும். இதனைப் பண்முறை, தலமுறை எனவகுப்பர்.

பண்முறை என்பது பாடல்களை அருளிய அருளாளர்கள் ஒவ்வொருவரும் தாம் தாம் வகுத்த பண்களை வகைபடுத்தி அப்பண்ணுக்குரிய திருப்பதிகங்களைக் கட்டளை விகற்பத்திற் கேற்ப நிரல்படத் தொகுப்பதாகும்.

தலமுறை என்பது தில்லைச் சிற்றம்பலக் கோயிலை முதன்மையாக வைத்து வரிசைப்படுத்தி அந்த அந்தத் திருப்பதி களுக்குரிய தேவாரத் திருப்பதிகங்களை முறைப்படத் தொகுப்பதாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக வழிபடவும், அன்பர்கள் அப்பதிகளில் அப்பதிகங்களை விரும்பி ஓதவும் வகைப்படுத்தப் பட்டதாகும்.

பண்முறை பழைய ஏட்டுச்சுவடி அமைப்பாகும். ஏழாம் திருமுறை பண்முறையில் இந்தளம் முதல் பஞ்சமம் ஈறாக 17 பண்களை உடையது. சுந்தரர் பாடல்கள் 38,000 என்பர். ஆனால் கிடைத்தவை 1026 ஆகும். 100 திருப்பதிகங்களைக் கொண்டு ஏழாம் திருமுறை விளங்குகிறது. 65 திருப்பதிகளைச் சுந்தரர் பாடியுள்ளார். திரு அஞ்சைக்களம் இருபதிகங்களையும், திருவாரூர் ஏழு பதிகங்களையும், திருவாவடுதுறை, திருவொற்றியூர், திருநின்றியூர், திருமுதுகுன்றம் முதலியன முறையே இரு பதிகங்களையும் கொண்டு விளங்குகின்றன.

திருநாட்டுத்தொகை, இடையாற்றுத் தொகை, ஊர்த் தொகை என்பன எப்பதியில் பாடியவை என அறியமுடியவில்லை. சில ஆய்வாளர்கள் திருவாரூர், திருநாவலூரில் பாடியிருக்கலாம் எனக்கருதுவர்.

## பொருள் நோக்கு

சுந்தரர் பாடிய ஏழாம் திருமுறையில் தம் வாழ்வியலுடன் பாடியன; சில பதிகளை அண்மையிலோ, சேய்மையிலோ பாடுவது; வினவும் முறையில் உரையாடல் போலப் பாடுவது; வினா எழுப்பி விடை கேட்பது போலப் பாடுவது.

இறைவனின் அளப்பரிய கருணையை வியத்தல், போற்றுதல், நகைத்தல், நித்தாதுதி பாடுதல், பொறுத்துக் கொள்ளக் கோருதல், வேண்டல் முறையில் பாடுவது, திருவைந்தெழுத்து, திருநீறு, உருத்திராட்சம், போற்றிப் பாடுதல், தம் நெஞ்சிற்குப் பாடுதல், இறைவனைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாகவும் கொண்டு அகப்பொருளில் பாடுவது, மெய்யுணர்வுத் துறையில் எடுத்துரைப்பது, மக்களைப் புலவர்களை நோக்கிப் பாடுவது, ஆற்றுப்படுத்துவது, மகிழ்ந்து பாடுவது, இறைவனைப் பழித்துப் பாடுதல், நிலையாமையைப் பாடுவது எனச் சுந்தரர் தன் புலமைத் திறத்தை ஏழாம் திருமுறையில் மணக்க விட்டுருக்கிறார். நாவலரும், பாவலரும் ஏன் பரமனே போற்றிடும்படி நற்றமிழ் பாடியுள்ளார் எனலாம்.

## இசைச் சிறப்பு

இசைக்கு மயங்கா உயிர்கள் இல்லை. முத்தமிழில் இசைத்தமிழ் இன்பமானது. உயிரை உணர்வை ஒன்றுபடுத்துவது இசையாகும்.

*“பண்ணிடைத் தமிழொப்பாய்; பழத்தினிற் சுவை*
*யொப்பாய்”*[11]

என நம்பியாரூரர் படைத்த ஏழாம் திருமுறையில் இசைப்பாக்கள் மிகுந்து காணப்படுகின்றன.

*“பண்ணும் பதமேழும் பல வோசைத் தமிழவையும்*
*உண்ணின்றதோர் சுவையும் முறு தாளத்தொலிபலவும்*
*மண்ணும் புனலுயிரும் வரு காற்றும் சுடர் மூன்றும்*
*விண்ணும் முழுதானானிடம் வீழிமிழலையே”*[12]

என்று பாடுவார் ஞானசம்பந்தர்.

*“பண்ணகத்தான் பக்தர் சித்தத்துளான்”*[13]

என்று இசைப்பார் நாவரசர்.

*“ஏழிசையாய் இசைப்பயனாய்”*

*“பாட்டகத்து இசையாகி நின்றானை”*
*“வண்டமிழ் வல்லவர்கள்*
*ஏழிசையேழ் நரம்பின் ஓசையை”*[14]

என்று சுந்தரர் இசையின்பத்தால் ஏழாம் திருமுறையை இன்னிசைப்பார்.

**பண்**

இசை, பண் என்பன காரணப்பெயர்களாகும். பல இயற்பாடல் களோடு இராகத்தை இசைத்தலின் இசை எனப் பெயர் பெறுவதாயிற்று. அப்பாக்களோடு, இசையினை நெஞ்சு, மிடறு, நா, மூக்கு, அண்ணம், உதடு, பல், தலை எனும் இடங்களில் எடுத்தல், படுத்தல், நலித்தல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்னும் தொழில்களால் சீர்படப் பண்ணிப் பாடப் பெறுவதால் பண் எனப்பெறும். பரிமேலழகர் பண்களை 103 ஆகும் என்பார். விபுலானந்த அடிகளார் தம் ‘பண்ணியல்’ என்ற நூலில் மிக நுட்பமாக இதை விளக்கியுள்ளார். நம்பியாரூரர் தம் தேவாரம் வழி இசையமைத்துப் பாடப்பெற்ற பண் பதினேழு ஆகும்.

இந்தளம், காந்தாரபஞ்சமம், காந்தாரம் குறிஞ்சி, கொல்லிக் கௌவாணம், கௌசிகம், சீகாமரம், செந்துருத்தி, தக்கராகம், தக்கேசி, நட்டபாடை, நட்டராகம், பஞ்சமம், பழம் பஞ்சுரம், பியந்தைக் காந்தாரம், புறநீர்மை என்பன போன்ற பண்களைக் கொண்டு ஆரூரர் அருந்தமிழ் இசைத்துள்ளார். ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் பண்ணமைத்துப் பாடியதைத் திருநாவலூரர் பின்பற்றிப் பாடலிசைத் துள்ளதை அவரே அருளுகிறார்.

*“நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்*
*கரையனும் பாடிய நற்றமிழ் மாலை*
*சொல்லியவே சொல்லி”*[15]

என்று தம் ஏழாம் திருமுறையில், முன்னோர்கள் வழியில் இசையுடன் தமிழ்ப் பண் அமைத்ததாகக் குறிப்பிடுகிறார்.

**சுந்தரரின் தோழமையும், இறைவனின் அருட்திறமும்**

சுந்தரர் மாட்டு அளவற்ற பேரன்பை இறைவன் காட்டி, தன் திருவிளையாடல்களை இம்மண்ணில் நிகழ்த்தியுள்ளார். தோழமை தந்து, சுந்தரரின் பணிகளையும் இறைவன் இரங்கி, வந்து ஆற்றியுள்ளார். மற்ற மூவரினும் சுந்தரர் வாழ்வில் இறைவன், அருட்திறம் சிறப்பு மிக்கதாகவும், மிக நெருக்கமாகவும், அதிக அற்புதங்களும் நிகழ்த்தப் பெற்றுள்ளன.

ஆரூரர் அடியவர் வழிபாட்டில் மிகுந்த பற்றுள்ளவராவர். அடியவர்களை வணங்குவதைப் பெரும் பேறாகக் கருதினார். அதை:

*"பாடவல்ல பரமர் அடியார்க்கு வழுவா*
*நாடவல்ல தொண்டன் ஆரூரன்"*[16]

*"அடியார்க்கு அடியவன் தொழுவன் ஆரூரன்"*[17]

*"ஐயா ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே"*[18]

என்ற அவரின் பண்சுமந்த தொடர்களால் அறியமுடிகிறது.

**அடியவர்களைப் போற்றுதல்**

நம்பியாரூரர், தம் திருத்தொண்டத் தொகையுள் அடியவர்களைப் போற்றும் பாங்குச் சிறப்பிற்குரியது. அடியவருக்கு அடைமொழி தந்து, அவ்வடியவரின் வரலாற்றைக் குறிப்பாகவோ, வெளிப்படை யாகவோ கூறிப் போற்றுகிறார்.

மாறன் எனும் பெயர் கொண்ட மூன்று அடியார்கள் உள்ளனர். அவர்களை,

*"இளையான்றன் குடிமாறன்"*[19]

*"அம்பரான் சோமாசிமாறனுக்கு"*[20]

"................. *நெல்வேலி வென்ற*
*நின்றசீர் நெடுமாறன்"*[21]

என்று மூவரையும் வேறுபடுத்தி, அவர்களின் சிறப்பை அடைமொழிக்குள் சுருக்கி விளக்குகிறார் .

*"திருநீலகண்டத்துக் குயவனார்க்கு அடியேன்"*[22]

*"திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன்"*[23]

என்று ஒருவர் குயவர், மற்றவர் பாணர் என்பதை விளக்குகிறார்.

இவ்வாறு திருத்தொண்டின் நெறிகுறித்துப் பலரை (எழுவரை)ப் பாடுகிறார்.

*"இல்லையே என்னாத இயற்பகைக்கு அடியேன்"*[24]

*"இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க்கு அடியேன்"*[25]

*"எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்"*[26]

இதுபோலச் சில அடியார்களின் ஊர்குறித்தும், வரலாற்றுச் செய்திகளைக் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் பதிகமிசைத்துள்ளார். பிரான் அதாவது தலைவர் என்ற பொருளில் சம்பந்தரையும், திருமூலரையும் போற்றுகிறார்.

திருமால், தொண்டைமான், அகத்தியர், பரசுராமர், மார்க்கண்டேயர், அர்ச்சுனன், இராவணன், பாரி, பஞ்பாண்டவர் முதலிய 63 அடியார்கள் அல்லாதவர்களையும் தம் திருமுறையில் போற்றிப் பாடலிசைத்துத் தம் இலக்கியத்திற்குப் பெருமைச் சேர்த்துள்ளார்.

*தன்மையினால் அடியேனைத் தாம் ஆட்கொண்ட நாள் சபைமுன்*
*வன்மைகள் பேசிட வன்றொண்டன் என்பதோர் வாழ்வு தந்தார்*[27]

என்று தாம் தடுத்தாட்கொண்டதையும், வன்றொண்டன் எனப்பட்டதையும் பதிவு செய்கிறார்.

*"என்னுடைய தோழனுமாய் யான் செய்யும்*
*துரிசுகளுக்கு உடனாகி"*
*தன்னைத் தோழமை யருளித் தொண்டனேன் செய்த*
*துரிசுகள் பொறுக்கும் நாதனை"*[28]

என்றுபாடி, இறைவன் என் தோழன், என் பணிகளைச் செய்யும் நண்பன் என்று தெளிவாகப் பாடியுள்ளார். இவ்வரிகளில் சுந்தரரின் மனசாட்சியும், இறைவனின் கருணையும் வெள்ளிடைமலையாக காட்சி தருகின்றன.

**சுந்தரரும் இயற்கைக் காட்சிகளும்**

ஓர் இலக்கியம் சிறப்பதற்குக் கற்பனை, அணிகள், கலைச் சொற்கள், குறிக்கோள், இனியநடை, இயல்புநவிற்சி, தற்குறிப் பேற்றம், அவசியம் எனலாம். மனம் விரிந்தும், ஆழ்ந்தும் சிந்திப்பதற்கு நிலைக்களனாக விளங்குவது இயற்கைச் சூழ்நிலை ஆகும். கவிஞன் தன் மனக்குதிரையைச் செலுத்திட அதிகம் விரும்புவது இயற்கையெனும் இன்பசாகரத்திடத்தில் தான் என்று கூறினால் மிகையாகாது. அவ்வகையில் சுந்தரர் பிறந்த நாடு சார்ந்த பகுதியில் இயற்கை சிறந்த பகுதியாக இயல்பாகவே அமைந்து விட்டது. அவரின் திருமணம் ஒன்று சோழநாட்டிலும் பிரிதொன்று தொண்டைநாட்டிலும் நிகழ்ந்ததாகும். சுந்தரர் தலயாத்திரை சோழ, சேர, பாண்டிய நாடுகளாக அமைந்தன. சுந்தரர் நால்வகை நிலங்களில் மருத நிலத்தைத்தான் அதிகம் பாடியுள்ளார்.

குடகு மலையில் பிறந்து, வங்கக்கடலில் கலக்கும் காவிரி, பொன்சுமந்து புனலுடன் வருவதை,

*'நங்கையாடிய கங்கைநீர் புலமெலாம்*
*மண்டிப் பொன்விளைக்கும்"*[29]

என்றும், மலைபடு பொருளாகிய சந்தனம், அகில், மலைநெல் ஆகியவற்றைச் சுமந்து வந்து இருகரைகளிலும் இறைக்கும் சிறப்பை

*அறிக்குஞ் சந்தனத்தோடு அகில் உந்தி*
*ஐவமைஞ் சுமந்து ஆர்ந்து இதுபாலும்*
*இறைக்குங் காவிரித் தென்கரை தன்மேல்*

என்றும் மேலும் பலவிடங்களிலும் காவிரியின் இயற்கையழகை ஒப்பனையிட்டுக் கவிபாடுகிறார்.

**மருத நிலக்காட்சி**

வயல்களில் அருகே பொழில்கள், ஆண்வண்டுகள் இசை பாட, பெண் வண்டுகள் பண்ணமைக்க, மயில்கள் தோகைவிரித்து நடனம் பயில்கின்றனவாம். தாமரைகள் முகமலர்ந்து காட்சி தருகின்றனவாம். இப்படி ஓர் இயற்கை எழில் நலமிகு காட்சியைக் கலையநல்லூரில் காணுகிறார் சுந்தரர். ஓவியமாக்குகிறார் கவிதையால்.

*"அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட*
*கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனி*
*கமலங்கள் முகம்மலரும் கலயநல்லூர் காணே"*[30]

இக்கவியில், கண்வளர்தலும், முகம்மலர்தலும் மக்கள் மாட்டு நிகழ்வன. இவற்றைக் குவளைகளும், தாமரைகளும் கொண்டனவாகக் கூறுதல் சமாதி என்னும் அணிநலம் பற்றியதாகும். இதைச் சுந்தரர் பாடுவது இலக்கிய நயமிக்கதாகும். மேலும் இச்சோலையில் கலையுணர்வோடு, பக்தி உணர்வையும் பதிவுசெய்கிறார்.

குயில் கூவுகின்றன. மயில் ஆடுகின்றன. சுரும்பும், வண்டுகளும் அவற்றினருகே முரலுகின்றன. பைங்கிளிகள் அடியார்கள் கூறிய பெருமான் புகழை அவர் புகன்றவறே புகழ்கின்றன. காலையிலும், மாலையிலும் கசிந்த அன்பர்கள் கடவுளைப் பணிந்து இன்புறும் இனிய காட்சியை,

*"சோலை மலி குயில்கூவக் கோலமயில் ஆலர்*
*சுரும்பொடு வண்டிசை முரலப் பசுங்கிளிசொல் துதிக்கச்*
*காலையிலும் மாலையிலும் கடவுளடி பணிந்து*
*கசிந்த மனத்தவர் பயிலும் கலய நல்லூர் தானே"*[31]

என்று தம் தேவாரத்தில் பதிவு செய்துள்ளார்.

**தாமரை மஞ்சம்**

திரும்புறம் பயத்தில் மருதநிலக் கற்பனையில் சுந்தரர் மனம் போக்குகிறார். வயல்நீரில் கெண்டை மீன்கள் துள்ளி விளையாடு கின்றன. இதனைக் கண்ட நண்டுகள் நீரில் விளையாடாமல் அருகில் உள்ள தாமரை மலரில் மஞ்சம் கொண்டு விளங்குகின்றனவாம். இயற்கை நிகழ்வைக் கவிஞர் செந்தமிழ்த் துணையுடன் தன்வசமாக்கு கிறார்,

*"துள்ளி வெள்ளின வாளைபாய் வயல்*
*தோன்று தாமரைப் பூக்கள் மேல்*
*பள்ளி நள்ளிகள் பள்ளிகொள்ளும்*
*புறம்பயந் தொழப் போதுமே"*[32]

என்று நம் மனக்கண்ணில் காட்சியை வரைந்து காட்டுவது தனிச்சிறப்பாகும்.

**குயில்களுக்குப் பாட்டுக்கற்பிக்கும் வண்டுகள்**

வாஞ்சியம் என்ற தலத்தில் வயல்களில் பூக்கள் மிகுந்துள்ளன. அப் பூக்களில் உள்ள மதுவருந்தி வண்டுகள் களித்துப் பாட்டிசைக்கின்றனவாம்

அருகில் உள்ள மரங்களில் உள்ள குயில்கள் வண்டுகளின் ஒலிப் பாடல்களைப் பயிலுகின்றதாம். சாதாரண வண்டுகளை இசை யாசானாகவும், கானமிசைக்கும் குயில்களை மாணாக்கர்களாகவும் பாட்டிசைப்பது கற்பவர் நெஞ்சையள்ளும் சிறப்பு மிகுந்ததாகும். சுந்தரர் தாம் ஒரு பெருங்கவிஞர் என்பதை:

*"குளங்களால் நிழற் கீழ்நற்*
*குயில்பயில் வாஞ்சியத் தடிகள்"*[33]

என்று பாடுகிறார். திருமறைக்காட்டில் சங்குகளும், மரக்கலன்களும் மன்றாடியை வணங்குவதாகக் கற்பனை செய்துபாடி, உயிரற்ற மரக்கலத்தை வாழவைக்கிறார். சங்கினங்களை வணங்க வைப்பது சிறந்த கற்பனை நயமாகும்.

*"சங்கங்களும் இலகிப்பியும் வலம்புரிகளும் இடறி*
*வங்கங்களும் உயர்கூம்பொடு வணங்கும் மறைக்காடே"*[34]

என்று தேனினும் இனிய தேவாரத்தில் தன் கற்பனையைக் கவியாக்குகிறார். இதுபோல் அரியகற்பனை நயம் ஏழாம் திருமுறையில் விரவிக் கிடக்கின்றது.

**அகச்சுவை அற்புதம்**

அடியார்கள் தங்களைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் கொண்டு பாடலியற்றுவது அகத்துறைப் பாடல் வகையாகும். சுந்தரர் அகச்சுவையில் பாடல் இயற்றியுள்ளார்.

இறைவன் பிச்சாண்டியாய் வருவதைக் கண்ட பெண்கள் அவனிடம் வினவுவதாகவும், நீ எல்லா இடத்திற்கும் செல்லாமல், என்னிடம் பலிகொள் என்று காதலை விளம்புமுகமாகப் பாடல் உள்ளது, தனிச்சுவையாக மிளிர்கிறது.

*"ஊரெலாந்திரிந்து என் செய்வீர் பலி*
*ஓரிடத்தில் கொள்ளும் நீர்"*[35]

மற்றொரு பாடலில், பாம்பும், எருதுடனும் பிச்சை கொள்ள வராதீர். பாம்பு சீறுகிறது, எருதோ சினந்து நோக்குகிறது என்று கூறித் தனியே வருக எனக் காதல் தூதுவிடும் மொழியாகப் பாடல் உள்ளது அகச்சுவை மிகுந்துள்ளது.

*சிலைத்து நோக்கும் வெள்ளேறு செந்தழல்*
*லாய பாம்பது மூசெனும்*
*பலிக்கு நீர் வரும்போது நுங்கையிற்*
*பாம்பு வேண்டா பிரானீரே"*[36]

என்று அப்பாடல் உள்ளதை அறிந்து மகிழலாம். இவைபோலத் தூதுப்பாடல்களும் தலைவியின் கூற்றாக (7:37:1) (7:36:2) (7:36:3) என்ற பதிகப் பாடல்களில் அகச்சுவை மிகுந்துள்ளதைக் கற்று மகிழலாம்.

**தொல்காப்பியர் கூறும் இலக்கிய வனப்பும் நம்பியாரூரரின் நற்றமிழும்**

தொல்காப்பியர் இலக்கிய அழகாக வனப்புகள் எட்டினை,

*அம்மை, அழகு, தொன்மை, தோலே*
*விருந்தே இயைபே புலனே இழைபெனாஅப்*
*பொருந்தக் கூறிய எட்டொடு (தொல்-செய்-1)*

என்று கூறுவார். 'வனப்பென்பது பெரும்பான்மையும் பல உறுப்புந் திரண்ட வழிப்பெறுவதோர் அழகு' என்று பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் உரைப்பர். இவ்வெட்டு வனப்புகளும் ஆரூரரின் அருந்தமிழில் ஆங்காங்கே பொருந்தி வருகின்றன. அவற்றில் சிலவற்றைச் சிந்திப்போம்.

**அம்மை**

அம்மை என்பதனை மென்மொழி – மெல்லிசை வண்ணம் அமைதல், அறம்பொருள் இன்பம் பற்றிக் கூறுவது. அடிவரையறை கூடாதது அம்மையாகும். இவ்வழகில் சுந்தரர்,

*"செய்யார் மேனியனே திருநீல மிடற்றினனே*
*மையார் கண்ணி பங்கா மதயானை உரித்தவனே*
*கையார் சூலத்தினாய் திருகற்குடி மன்னிநின்ற*
*ஐயா எம் பெருமான் அடியேனையும் அஞ்சலென்னே"*[37]

என்று பதிகம் பாடி மகிழ்கிறார்.

**அழகு**

*"செய்யுள் மொழியாற் சீர்புனைந்து யாப்பின்*
*அவ்வகை தானே அழகெனப்படுமே"*[38]

என்பது தொல்காப்பியரின் நூற்பா ஆகும். செய்யுளுக்கே உரிய மொழிகளால் சீர்புனைந்து யாத்தல் பொருந்தினால் அது அழகு எனப்படும் சுந்தரர் தம் பதிகத்தில்,

*"நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன், நாவினுக்கரையன்*
*நாளைப்போவானும்*
*கற்ற சூதன் நற்சாக்கியன் சிலந்து கணணப்பன்*
*என்றிவர்கள்"*[39]

என்று பாடியதில் 'அழகு' இலக்கணம் பொருந்தியுள்ளது.

**விருந்து**

*"விருந்தே தானும்*
*புகுவதுகிளந்த யாப்பின் மேற்றே"*[40]

என விருந்து என்பது புதிதாகப் படைத்த யாப்பு வடிவம் எனத் தொல்காப்பியர் சுட்டுவார். இவ்விலக்கண அழகினை ஏற்றுத் திருஞானசம்பந்தர் மாலைமாற்று, திருத்தாளச்சதி, மாவின்பாய்சல், ஏகபாதம் முதலியனவும் திருநாவுக்கரசர் திருத்தாண்டகம், திருவங்கமாலை என்பனவற்றையும், சுந்தரர் கொச்சக ஒருபோகு வகையிலமைந்த பாடல்களும், சிந்து கண்ணிகட்கு மூல விதையாகிய பாவடிவங்களும் இவ்வகை வனப்பிற்குத் தக்க சான்றாகும். விரிவு கருதியே பிறவற்றை விளக்கவில்லை.

**சுந்தரரும் ஆற்றுப்படையும்**

சுந்தரர் தம் ஏழாம் திருமுறையில் ஆற்றுப்படை இலக்கிய வகையில் ஒரு பதிகம் பாடியுள்ளார். ஆற்றுப்படையென்பது, பரிசில் பெற்றவன், பரிசு பெறவருபவனுக்குத் தாம் பெற்ற பரிசின் பெருமையையும் பரிசில் வழங்கிய கொடையாளரின் சிறப்பையும் விளக்குவதே ஆகும். சுந்தரமூர்த்தி நாயனார் தான் பெற்ற அருளனுபவத்தைப் பிறருக்குத் தெரிவிக்கும் முறையில் பாடியிருப்பது கொண்டு ஆற்றுப்படை இலக்கணம் பொருந்தி இருப்பதை அறியமுடிகிறது. திருக்கழுகுன்றம் சென்று தொழுங்கள் என அறிவுறுத்துகிறார் சுந்தரர்.

*"கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே*
*நின்ற பாவவினைகள் தாம்பல நீக்கவே*

*சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்*
*கன்றினோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே"*[41]

என்று பாடுவது ஆற்றுப்படையை அறிவிக்கும் பதிகமாகும்.

**உவமை நலம்**

காணாத பொருளை அறிதற்கும், கண்ட பொருளை அழகுடன் வெளிப்படுத்துவதற்கும் உவமை பெரிதும் பயன்படுவதாகும். சுந்தரர் பல உவமைகளைக் கையாண்டுள்ளார். அவற்றைக் காண்போம்.

**தேரைவால்**

தேரை என்ற உயிரினம் தோன்றும்போது வாலும் தோன்றும். அவ்வால் சிலகாலங்களில் தேரையை விட்டு நீங்கும். இதனை நுட்பமாக உணர்ந்த சுந்தரர், அதுபோல நம்மிடம் உள்ள அனைத்தும், அரசனானாலும், படை, சேனை, முதலியன ஒரு கால எல்லையில் நீங்கிவிடும். எனவே நெஞ்சமே புறம்பயம் என்ற தலத்தைத் தொழுது உய்துவிடு எனப்படுகிறார்.

*"படையெலாம் பகடார ஆளிலும்*
*பௌவன் சூழ்ந்தர சாளிலும்*
*கடையெலாம் பிணைத்தேரை வால்கவ*
*லாதெழு மடநெஞ்சமே"*[42]

என்று 'தேரைவால்' என்பதை உவமையாக்குகிறார்.

**குன்றிமணி**

குன்றிமணி என்பது ஒருவகை தாவரத்தில் வருவது. குண்டுமணி என்பர். இது ஒருபுரம் சிவந்தும் மறுபுறம் கருமையாகவும் இருக்கும். இதனைத் திருவள்ளுவரும்,

*"புறங்குன்றி கண்டனையரேனும்"*

*"குற்றுவ குன்றியனைய செயின்"*[43]

என்று உவமையாக எடுத்தாண்டுள்ளார். சுந்தரர் இறைவனின் மேனி நிறத்திற்குக் குன்றிமணியின் நிறத்தைக்காட்ட,

*"குன்றிபோல் வதோர் உருவரோ"*[44]

என்று எளிய உவமையால் இறைவனைச் சுட்டுகிறார்.

### கதிர்கொள் பசி

பசியுடையவன் உணவுப் பொருளைக் கண்டால் உண்ணுவான். பசி நீங்கப் பெறுவான். ஆனால் பசியுடைவன் நெற்கதிரைக் கண்டால் என்ன செய்யமுடியும். பசி நீங்கப் பெறான். இவ்வரிய உவமையைச் சுந்தரர் சேரமானுடன் திருவையாறைத் தொழும்போது உவமையாக்கிப் பாடுகிறார்.

*"கதிர்கொள் பசியே யொத்தே நான்*
*கண்டேனும்மைக் காணாதேன்*
*எதிர்த்து நீந்த மாட்டேன் நாம்*
*எம்மான் றம்மான் தம்மானே"*[45]

திருவையாற்றுக்குப் போக முடியாமல் ஆற்று வெள்ளம் போகிறது. இக்கரையில் சுந்தரர் சேரமானுடன் இருந்து உள்ளார். நேரில் அருகில் வந்து காணமுடியாது இக்கரையில் இருந்து வணங்கு கின்றேனே என்று பாடும்போது, கதிர்கொள் பசி என்ற உவமையிட்டுப் பசியுடையான் நெற்பயிர்க் கதிரைக் கண்டதுபோலவுள்ளேன் என உவமித்துப் பாடுவது அரிய உவமை எனலாம். இதுபோலப் பல உவமைகளை வைத்துப் பதிகம் இயற்றி, சிறந்த இலக்கிய நயமுடன் சுந்தரர் ஏழாம் திருமுறையை இயற்றியுள்ளார்.

### பழமொழிகள்

சுந்தரர் தன் இலக்கியம் சிறக்க, பல பழமொழிகளை ஏழாம் திருமுறையில் வைத்துப் பாடியுள்ளார். சிலவற்றைக் காண்போம்.

### முயல் வலை யானை

விலங்குகளைப் பிடிக்க அதன் வன்மை, மென்மைக்கேற்ப வலை கட்டுவர். முயல் பிடிக்க வைக்கும் வலையில் முயலைத் தான் பிடிக்க இயலும். யானையைப் பிடிக்க இயலாது. அவ்வாறு கருதுவதும் பிழையாகும். இதனைச் சுந்தரர்,

*"முயல்வலை யானை படுமென மொழிந்தவர்"*[46]

என்னும் பழமொழியால் சுட்டுகிறார். இறைவனை அடைய ஈர அன்பும், ஆழ்ந்த பற்றும் வேண்டும். அதற்கு மாறாக நடித்தால் போதாது என்று கூறவந்த சுந்தரர்

*"அயலவர் பரவவும் அடியவர் தொழவும்*
*அன்பர்கள் சாயலுள் அடையலுள் றிருந்தேன்*
*முயல்பவர் பின் சென்று முயல்வலை யானை*
*படுமென மொழிந்தவர் வழிமுழு தெண்ணிப்"*[47]

என்று பாடுவதால் அறியலாம்.

**கழுதை குங்குமம் சுமந்தாலென்ன**

உயர்ந்த பொருள்களைப் பயன்கொள்ளத் தெரியாமல் வைத்திருப்பவனை மற்றையோர் "கழுதை குங்குமம் சுமந்தது போலும்" எனக் கூறுவர். இது உலகியல் வழக்கம். இப்பழமொழியை,

*கழுதை குங்குமம் தான் சுமந்து எய்த்தாற்*
*கைப்பர் பாழ்புக மற்றது போலப்*
*பழுது நானுழன் றுள் தடுமாறிப்*
*படுசுழித் தலைப் பட்டனன் எந்தாய்*[48]

என்றுபாடிக் கழுதை குங்குமம் சுமந்தால் அதன் பயன் அறியாது. அது போல நான் உன் அருமை, பெருமை அறியாது உழல்கின்றேன் என்று பாடுவதும், பழமொழியை வைத்து விளக்குவதும் இலக்கிய உத்திக்குச் சிறப்புச் சேர்ப்பதாகவுள்ளது.

**சொல்லடுக்குச் சிறப்பு**

சுந்தரர் தம் ஏழாம் திருமுறையில் சொல்லடுக்குகள் பலவற்றைச் சுவைபடப் பயன்படுத்தியுள்ளார். திருவாமாத்தூர் பதிகம் இதற்குச் சான்றாகும்.

*"காண்டனன் காண்டனன் காரிகையாள் தன் கருத்தனாய்*
*ஆண்டனன் ஆண்டனன் ஆமாத்தூர் எம்மடி காட்கரப்"*[49]

**சுந்தரரும் முத்தமிழும்**

சுந்தரருக்கு முத்தமிழிலும் மிகுந்த ஈடுபாடு இருந்துள்ளதை அவர் பதிகம் வழி அறியமுடிகிறது. இறைவனைக் குறிக்கையிலும், வழிபடும்போதும் முத்தமிழை மறவாது போற்றியுள்ளார். தமிழுக்கு உரியோன் என்றும் தமிழான் என்றும் குறிப்பிடுகிறார். தமிழ்ப் பற்றினை,

*"தங்களூர் தமிழான் என்று பாவிக்க வல்ல*
*எங்கள் ஊர் எய்தமான் இடையாறுமருதனே"* (7:31:6)

*"தமிழ் சீர்"* (7:35:10)

*"செந்தமிழ் திறம் வல்லீரே"* (7:36:4)

*"ஒண்தமிழ்கள்"* (7:40:11)

*"பன்னுதமிழ் நூல்மாலை"* (7:41:10)

*"செஞ்சொல் தமிழ் மாலைகள்"* (7:42:10)

*"அருந்தமிழ்கள்"* (7:46:11)

எனவும் பாடும் சுந்தரர், இசை, நாடகத்திற்கும் உரியவராக இறைவனைப் பாடுகிறார்.

*"பண்ணிடைத் தமிழொப்பாய்"* (7:29:6)

*"ஏழிசையாய் இசைப்பயனாய்"* (7:51:10)

*"வண்டமிழ் வல்லவர்கள் ஏழிசை ஏழ்நரம்பின்*
*ஓசையை"* (7:83:6)

*"காமரத்து இசைபாட நாவில் ஊறும் நள்ளாறனை"*
(7:68:3)

*'கொட்டு ஆட்டுப் பாட்டால் நின்றானை"* (7:30:3)

என்பன போன்ற பதிகவரிகள் முத்தமிழைச் சிறப்பித்துச் சுந்தரர் பாடலிசைத்தமையை விளக்குகின்றன.

**திருக்குறளும் திருநாவலூராரும்**

*"தேவர் குறளும் திருநான்மறைமுடிவும்*
*மூவர் தமிழும் முனிமொழியும் கோலத்*
*திருவாசகமும் திருமூலர் சொல்லும்*
*ஒரு வாசகமென்றுணர்"*

என்ற ஔவையாரின் நல்வழிப்பாடல், மூவர் தமிழையும், திருக்குறளோடு திருநான்மறையையும், முனிமொழியையும், திருவாசகத்தையும், திருமூலர் பாடல்களையும் ஒருசேரச் சிறப்பிக்கிறது. மூவர் தமிழில், சுந்தரரின் செந்தமிழில் திருக்குறள்

கருத்துக்களும், சொற்றொடர்களும் பயின்று வந்துள்ளன. இது திருக்குறள் மீது சுந்தரர் அளவற்ற ஈடுபாடுடையவர் என்பதை விளக்குகிறது எனலாம். அகர முதல்வன்

*"அகர முதல எழுத்தெல்லாம், ஆதி*
*பகவன் முதற்றே யுலகு"*

என்ற குறளில், எழுத்துக்கள் எல்லாம் தம்மை உடனின்று செலுத்தும் அகர ஒலியினைத் தமக்கு முதலாக உடையன. அதுபோல உலகம் இறைவனை முதலாக உடையது என்ற கருத்தினைத் திருவள்ளுவர் விளக்கினார். இக்கருத்தினைத் திருஞானசம்பந்தர் தம் தேவாரத்தில்

*அகரமுதலானை அணி யாப்பனூரானை*[50]

என்றார். சுந்தரர் தன் செந்தமிழில்,

*"அகர முதலின் எழுத்தாகி நின்றாய்" (7:3:7)*

எனத் திருக்குறள் கருத்தைப் போற்றியுள்ளதை அறியலாம்.

**பொறிவாயில்**

*"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*
*நெறி நின்றார் நீடுவாழ்வார்"*

என்ற திருக்குறள் கருத்தினைத் திருஞானசம்பந்தர்,

*"ஐந்து புலனொடு வென்று பொய்மைகள் தீர்த்த புண்ணியர்"*[51]

என்றார் திருநாவுக்கரசர்,

*"பொல்லாப் புலனைந்தும் போக்கினான் காண்"*[52]

என்றார். சுந்தரரோ, இக்கருத்தை ஏற்றும், இக்குறள் சொற்றொடரைத் தம் பாடலில் தெளிய விளக்கியும்,

*"பொறிவாயிலில் வைந்தினையும் அவியப்*
*பொருது உன்னடியே புகும் சூழல் சொல்லே"*[53]

என்று பாடுவது அறியலாம்.

**பிறவிப் பெருங்கடல்**

மனிதப்பிறவியைப் பெருங்கடல் என்று வள்ளுவர் குறித்து, தன்குறளில், அக்கடலினை எளிதில் நீந்த, இறைவன் திருவடி

புணைபோலப் பயன்படும். அவ்வாறு இறைவன் திருவடியை நினையாதார் பிறவிக்கடலை நீந்தமாட்டார். என்பதை,

*"பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவனடி சேரா தார்"*

என்று பாடுவார். இக்குறட்பாவின் கருத்தினை ஏற்ற சுந்தரர்

*"அற்றார் பிறவிக்கடல் நீந்தி ஏறி*
*அடியேனுய்யப் போவதோர் சூழல் சொல்லே"*[54]

என்று பாடுவது அறியலாம்.

**உறங்குவது போலும் சாக்காடு**

உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி விழிப்பது போலும் பிறப்பு என்ற உலகியல் நிகழ்வைத் திருவள்ளுவர்,

*"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு"*

என்று பாடினார். இக்கருத்தைச் சுந்தரர்,

*"ஒடு புனற் கரை யாம் இளமை உறங்கி*
*விழித் தாலொக்கும் இப் பிறவி"*[55]

என்று ஏற்றிப் போற்றியுள்ளது அறியலாம்.

**வாலறிவன்**

இறைவனைத் திருவள்ளுவர் தம் குறட்பாக்களில் வாலறிவன், அறவாழி அந்தணன், எண்குணத்தான் என்றெல்லாம் குறித்துள்ளார். சுந்தரர்,

*"அறிவே நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே"*[56]

*"அறவா அங்கணனே அடியேனையும் அஞ்ச லென்னே"*[57]

*"இறையவனை மறையவனை எண் குணத்தினானை"*[58]

என்ற பகுதிகளால் குறிப்பாதை அறியலாம்.

**ஊடுதல்**

*"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்*
*கூடி முயங்கப் பெறின்"*

என்ற குறட்பாவின் கருத்தினைச் சுந்தரர் தன் ஏழாந்திரு முறையில்,

*"பாடுமாறும் பணிந் தேத்துமா றும் கூடி*
*ஊடுமாறும் இவை உணர்த்த வல்லீர்களே"*[59]

என்று பாடும் பகுதியால் அறியலாம்.

**மழை**

மழை உலகிற்கு மிக அவசியமானது. ஓரறிவுயிர்க்கும் தேவை என்பதை,

*"விசும்பின் துளி வீழின் அல்லால் மற்றாங்கே*
*பசும்புல் தலைகாண் பரிது"*

என்ற குறளால் விளக்கினார் திருவள்ளுவர். இதனைச் சுந்தரர் தம் பதிகத்தில்

*"குழைக்கும் பயிர்க்கோ மழையே ஒத்தியால்"*[60]

என்ற பகுதியால் குறிப்பது அறியலாம்.

இதுகாறும் விளக்கியவற்றால் ஏழாம் திருமுறையில், திருக்குறட்கருத்துக்களும், சொற்களும், சொற்றொடர்களும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளமை இனிது விளங்கும். தேவர்குறளும், மூவர்தமிழும் ஒருவாசகம் என்று முன்னோர் குறித்துணர்த்தியது ஏற்புடையகருத்தாகிறது.

**மூவர் தமிழும் சுந்தரர் திருவாக்கும்**

சுந்தரர் தமக்கு முன்னிருந்த அடியார் பலரிடத்தும் அளவிறந்த பற்றுடையவர் என்பதை அவர் அருளிய திருத்தொண்டத் தொகையானும், ஞானசம்பந்தர் அப்பர் ஆகியோரைப் பற்றி ஆங்காங்குக் கூறியுள்ள குறிப்புக்களானும் நன்கறியலாம். ஆதலால் அவர்கள் அருளிய திருமுறைக் கருத்துக்களும் அவற்றில் அமைந்த சொற்றொடர்களும், ஆங்காங்கு இவர்தம் வாக்கில் மிளிர்வதைக் காணலாம். இவற்றுடன் மணிவாசகர் அருளிய திருவாசகத்துடன் ஒப்பிட்டுக் காண்டற்குரியனவும் உள. அவற்றையும் காணலாம்.

**சம்பந்தர் திருவாக்கில்**

1. *'புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி*
*அறிவு அழிந்திட்டு ஐம்மேலுந்தி*
*அலமந்த போதாக அஞ்சேலென்*
*றருள்செய்வான் அமருங் கோயில்'* –சம்பந்தர்

'புவனைந்தும் மயங்கி அகங்குழையப் பொருவேலோர்
நமன் தமர்தாம் நலிய
அலமந்து மயங்கி அயர்வதன்முன் அடியேன் உய்யப்
போவதொர் சூழல்சொல்லே' -சுந்தரர் (3-5)

2. 'எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கு
இங்கேயென்று அருள்புரியும் எம்பெருமான்' -சம்பந்தர்

'எங்கேனும் இருந்து உன் அடியேன் உனைநினைந்தால்
அங்கே வந்து என்னொடும் உடனாகி நின்றருளி
இங்கே என்வினையை அறுத்திட்டு எனை ஆளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயவனே' - சுந்தரர் (23-2)

3. 'புத்தரும் சமணரும் புறனுரைக்கப்
பத்தருக் கருள்செய்து பயின்றவனே' -சம்மந்தர்

உண்டாடும் சமணரும் சாக்கியரும் புறங்கூறும்
கொகுடிக் கோயில்
எண்தோள்எம் பெருமானை நினைந்தபோது அவர்
நமக்கு இனியவாறே' -சுந்தரர் (30-10)

4. 'விலையுடை அருந்தமிழ் மாலை வல்லார்
வினையாயின நீங்கிப் போய்
விண்ணவர் வியனுலகம்
நிலையாக முன்னேறுவர் நிலமிசை நிலையிலரே'
-சம்பந்தர்

'விலையார் மாலைவல்லார் வியன்முவுல காள்பவரே'
-சுந்தரர் (27-10)

5. 'வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவி லின்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவில் வேண்டுவார்க்(கு) ஏதுமேதம்
இல்லையே' -சம்பந்தர்

'தேனைக்காவில் கொண்டுவிண்ட கொன்றைச் செழுந்தாராய்
வானைக்காவல் கொண்டு நின்றார் அறியா நெறியானே
ஆனைக்காவில் அரனேபரனே அண்ணா மலையானே
ஊனைக்காவல் கைவிட்(டு) உன்னை உகப்பார் உணர்வரே'
-சுந்தரர் (47-7)

6. 'ஆதியன் ஆதிரையன் அனலாடிய ஆரழகன்
பாதியொர் மாதினொடும் பயிலும்பர மாபரமன்
போதிய லும்முடிமேற் புனலோடுஅர வம்புனைந்த
வேதியன் மாதிமையால் விரும்புமிடம் வெண்டுறையே'
-சம்பந்தர் (61-1)

'ஆதியன் ஆதிரையன் அயன்மால் அறிதற்கரிய
சோதியன் சொற்பொருளாய்ச் சுருங்காமறை நான்கினையும்
ஓதியன் உம்பர்தங்கோன் உலகத்தினுள் எவ்வுயிர்க்கும்
நாதியன் நம்பெருமான் நண்ணும்ஊர் நனிபற்றியதே'
-சுந்தரர் (97-1)

7. 'மூவார் புரங்கள் எரித்தஅன்று மூவர்க்கருள் செய்தான்' -சம்பந்தர்
இத்திறத்தை

முவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்
இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளர் என் றேவிய பின்னை
ஒருவன் நீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநடம் மகிழ
மணிமுழா முழக்க அருள் செய்த
தேவ தேவநின் திருவடி யடைந்தேன்
செழும் பொழில்திருப் புன்கூ ருளானே'-சுந்தரர் (55-8)
என்ற பாடலால் விளக்குவர் சுந்தரர்.

8. 'பெரிய விடைமேல் வருவார் அவர்எம் பெருமான் அடிகளே'
-சம்பந்தர்

'பெருமான் கடவூர் மயானத்துப் பெரியபெருமான் அடிகளே'
-சுந்தரர் (53-1)

9. 'நானாவித உருவாய் நமை ஆள்பவன்'

'நானாவித நினைவார்தமை நலியார் நமன்தமரே'
-சுந்தரர் (82-1)

10. 'நச்சித் தொழுவீர்காள் நமக்கிது சொல்லீர்
கச்சிப் பொலிகாமக் கொடியுடன் கூடி
இச்சித் திரும்பூளை யிடங்கொண்ட வீசன்
உச்சித் தலையிற் பலிகொண்டுழ லூணே' -சம்பந்தர்

'வாரிருங்குழல் வாணெடுங்கண்
மலைமகள்மது விம்முகொன்றை
தாரிருந்தட மார்புநீங்காத்
தையலாள்உல குய்யவைத்த
காரிரும்பொழிற் கச்சிமூதூர்க்
காமக்கோட்டம்உண் டாகநீர்போய்
ஊரிடும்பிச்சை கொள்வதென்னே
ஓணகாந்தன் தளியுளீரே' -சுந்தரர் (5.6)

11. 'எந்தைதான் எனை என்று கொளுங்கொலோ' -சம்பந்தர்

'எந்தை இருப்பதும் ஆரூர்அவர் எம்மையும் ஆள்வரோகேளீர்'
-சுந்தரர் (73.7)

**நாவுக்கரசர் திருவாக்கில்**

1. 'ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேன்உனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத்தாய் உனை நானும் தொழுவனே' -அப்பர்

'தொண்டாடித்தொழு வார்தொழக் கண்டு
தொழுதேன் என் வினைபோக
நண்டாடும்வயல் தண்டலைவேலி நாட்டியத்
தான்குடிநம்பீ' -சுந்தரர் (15-9)

2. நாவரசர் எண் வகை மலர்களால் (அட்ட புஷ்பம்) வழிபடுதல் வேண்டுமென்பர். இவரும்,

'அட்டபுஷ்பம் அவை கொண்டு அடிபோற்றி' (22-8)

என்பார்.

3. கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில் கூவ
மயிலாடும் ஆரூரர்
கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில் கூவ
மயிலாலும் கொகுடிக் கோயில். -சுந்தரர் (30-6)

4. 'பேசப் பெரிதும் இனியாய் நீயே' -அப்பர்

'பேசினால் பெரிதும் இனியானே' -சுந்தரர் (50-11)

5. 'வேண்டுவான் வேண்டுவதே ஈவன் கண்டாய்' -அப்பர்
'அவ்வவர் வேண்டியதே அருள் செய்து'-சுந்தரர் (67-8)

6. ‘முளைத்தானே எல்லார்க்கும் முன்னே தோன்றி’ -அப்பர்

‘பெரிய நஞ்சமது உண்டு அதுமுற்றும் பின்னையால்
முன்னமே முளைத்தானே’ -சுந்தரர்

7. ‘நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்’ -அப்பர்

‘நெக்கிறை யேநினை வார்தனி நெஞ்சம்
புக்குறை வான்உறை பூவணம் ஈதோ’ -சுந்தரர் (11-7)

8. ‘நூந்தா ஒண் சுடரே’ -அப்பர்

‘நுந்தா ஒண் சுடரே நுணையே நினைந்திருந்தேன்’
-சுந்தரர் (21-1)

9. ‘பண்ணினார் பாடலாகிப் பழத்தினில் இரதமாகி’ -அப்பர்

‘பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினில் சுவை
யொப்பாய்’ - சுந்தரர்

10. ‘மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்’
-அப்பர்

‘வெண்ணீறு சண்ணித்த மேனியம்மானை’
-சுந்தரர் (34-6)

11. ‘அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்கமொன்றிலீர்’ -அப்பர்

‘இரக்க மில்லவர் ஐந்தொடு ஐந்தலை
தோள்இருபது தாள் நெரிதர
அரக்கனை அடர்த்தார்’ -சுந்தரர் (87-9)

12. ‘கறிவிரவு நெய் சோறு கையில் உண்டு’ -அப்பர்

‘கறிவிரவு நெய்சோறுமுப்போதும் வேண்டும்’
-சுந்தரர் (46-10)

13. ‘மறவனாய்ப் பன்றிப்பின் சென்ற மாயமே’ -அப்பர்

‘மறவனை அன்று பன்றிப்பின் சென்றமாயனை’
-சுந்தரர் (68-7)

14. ‘எல்லியும் பகலும் எல்லாம் நினைந்தபோது
இனிப்பரே’-அப்பர்

‘எம்மானை மனத்தினால் நினைந்தபோது
அவர் நமக்கு இனியவாறே’ -(80-1) சுந்தரர்

15. 'மடமன்னும் அடியார்கள் மனத்திலுள்ளார்' -அப்பர்

'மடமுடைய அடியார்தம் மனத்தேயுற
விடமுடைய மிடறன்' -(81-6) சுந்தரர்

16. 'எற்றினால் மறக்கேன் எம்பிரானையே' -அப்பர்

'எற்றான் மறக்கேன் எழுமைக்கும்
எம்பெருமானையே' -(92-1) சுந்தரர்

17. 'மன்னியசீர் மறைநான்கும் ஆனாய் போற்றி' -அப்பர்

'மன்னியசீர் மறைநாவல் நின்றவூர்ப் பூசல் -சுந்தரர்

இவ்வாறே திருவாசகத்தொடும் ஒப்புநோக்கிக் காண்டற்குரிய பகுதிகள் பலவுள.

1. 'பண்டேமிக நான்செய்த பாக்கியத்தால்
பரஞ்சோதி நின்நாமம் பயிலப்பெற்றேன்' -சுந்தரர்

'நானேயோ தவம் செய்தேன் சிவாயநம
எனப் பெற்றேன்' -திருவாசகம்

2. 'வானார் நுதலார் வலைப்பட்டு அடியேன்
பலவின்கனி ஈயதுபோல் வதன்முன் -சுந்தரர்

'கொங்கைப் பலாப்பழத்து ஈயின் ஒப்பாய்
விழைதருவேனை விடுதி கண்டாய்' -திருவாசகம்

3. 'சிந்தித்து எழுவார்கு நெல்லிக்கனியே' -சுந்தரர்

'நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையி ன்னமுதை அமுதின் சுவையை' -திருவாசகம்

4. 'சுரும்பார் விண்டமலர் அவைதூவித் தூங்குகண்ணீர்
அரும்பா நிற்குமனத் தடியாரொடும் அன்புசெய்வன்
விரும்பேன் உன்னையல்லால் ஒருதெய்வம் என்மனத்தால்
கரும்பா ருங்கழனிக் கழிப்பாலை மேயானே' -சுந்தரர்

'கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு; குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்; நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலேஇருக்கப் பெறின்; இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்கும்
உத்தமனனே' -திருவாசகம்

5. 'பிழைத்தொருகால் இனிப்போய்ப் பிறவாமை
பெருமை பெற்றேன் பெற்றது ஆர்பெறு கிற்பார்'
-திருவாசகம்

'மற்று நான் பெற்றது ஆர் பெறவல்லார்' -சுந்தரர்

'பந்தமறுத்து எனையாண்டு பரிசறஎன் துரிகம்அறுத்து
அந்தம்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார்
அச்சோவே' -திருவாசகம்

6. 'குறைவி லாநிறை வேகுணக் குன்றே
கூத்த னேகுழைக் காதுடை யானே
உறவி லேன் உனை யன்றிமற் றடியேன்
ஒரு பிழைபொறுத் தால்இழி உண்டோ
சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூர்ச்
செம்பொ னேதிரு வாவடு துறையுள்
அறவ னேஎனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே' -(70-6)சுந்தரர்

'குறைவிலா நிறைவே! கோதிலா அமுதே!
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே!
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே!
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே!
இறைவனே! நீஎன் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை என்னிரக் கேனே?' -திருவாசகம்

7. 'முன்நீ பின்நீ முதல்வன் நீ' -சுந்தரர்

'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே'
-திருவாசகம்

8. 'காய்தான் வேண்டில் கனிதான் அன்றே
கருதிக் கொண்டக்கால்' -சுந்தரர்

'தாம்வளர்த்ததோர்
நச்சுமாமரம் ஆயினும்கொலார் நானும் அங்ஙனே
உடை நாதனே' -திருவாசகம்

9. 'இறைவனை நினையவும் வழிபடவும் அவனருள்
வேண்டும்'

இதனை,

*'தன்னை என்னை நினைக்கத் தருவானை'*

என்பார் சுந்தரர்.

*'அவனருளாலே அவன்தாள் வணங்கி'*

என்பது திருவாசகம்.

*'என்னை நினைந்தடிமை கொண்டு என்னிடர் கொடுத்துத்*
*தன்னை நினையத் தருகின்றேன்'*

எனவரும் பதினோராம் திருமுறையும் ஈண்டுக் காண்டற்குரியதாகும்.

**அரிய சில சொல்லாட்சிகள்**

சுந்தரர் தேவாரத்தில் அரிய பல சொற்கள் காணப்படுகின்றன. இவற்றைத் தொகுத்துக் காண்டல் சொல்லாராய்ச்சி செய்வார்க்கும், மொழியில் "கடிசொல் இல்லைக் காலத்துப் படினே" என்றவாறு கால அமைப்பில் மருவியும் அருகியும் தோன்றி வழங்கும் சொற்களைக் காண்டற்கும் பெருந்துணை செய்வதாகும்.

1 எத்தால் – எவ்வாற்றானும் 1.

2 இட்டளம் – துன்பம் 249.

3 மோறாந்து – (மயக்கத்தால்) மறந்து 211.

4 நுனை – உன்னை. (நின்னை உன்னை என்பனவே வழக்கு, இது புதிது) 209, (நுன் – 212).

5 அப்படி – மிகுதி உணர்த்துவதோர் வழக்குச் சொல் 292.

6 சலச்சலம் – துன்பத்தையும் வெகுளியையும் உணர்த்துவன 296.

7 சிம்மாந்து – செம்மாந்து என்பதன் திரிபு. (உடலை நேராக நிறுத்தி) 299.

8 சிம்புளித்து – கண்களை மூக்கின் நுனி காணுமாறு நிறுத்தி 299.

9 பண்செய்தல் – இசையொடு கூட்டுப்பாடுதல் 303.

10 தமிழான் – தமிழுக்கு உரியவன்; தமிழில் பொலிந்து விளங்கு கின்றவன் 315.

11 இட்டிது – சிறிது; 'ஆகு ஆறளவு இட்டிது ஆயினும்' என் புழிப் போல 331.

12 சாய் – மெலிவு; உள்ளதன் நுணுக்கம் 335.

13 நமரங்காள் – நம்மவர்களே! 336.

14 காணி – நிலஅளவு 342.

15 பூணி – எருது 342.

16 பஞ்சதுட்டன் – ஐவகைக் குற்றங்களைச் செய்வோன்; பஞ்சமா பாதகன் 344.

17 ஆயம் – வருத்தம்; ஆயாசம் என்பது குறைந்து நின்றது 346.

18 நள்ளி – நண்டு 355.

19 தியக்காது – கலங்காது; திகைத்தல் என்பதன் மரூஉ 357.

20 அக்கிரமம் – கொடுமை 375.

21 சுற்றுமுற்றும் – உலகியற் சால் 379.

22 ஒருவாய் – மூளியான வாய் 420.

23 செட்டி – அளவறிந்து வாழ்பவன்; முருகனையும் இச்செல்லால் குறிக்கின்றார் 443.

24 வெட்டென – வெடுவெடுஎன; வெறுக்கத் தக்கனவும் கொடுமை உடையனவுமான 448.

25 அன்றவன் – அணுகியவன் 460.

26 காம்பு, நேத்திரம் – பட்டாடையின் வகைகள் 468.

27 சுவண்டு – அழகு 470.

28 மாதிகை – பெருமை 470.

29 கொடும் பாடன் – கொடுமையுடையவன் 475.

30 பயிக்கம் – பிச்சை 500.

31 நுங்கி – உண்டு 528.

32 கட்டம் – துன்பம்; கஷ்டம் என்பது தமிழாக்கம் பெற்றது 604.

33 பொள்ளல் – நிலையாமை 608.

34 விடக்கு – ஊன் 611.

35 பட்டி – வழக்கிட்டு வெல்பவன் 612.

36 இரைப்பனேன் – பயனில் சொல் பாராட்டுபவன் 615.

37 கூழை – அறியாமை 622.

38 அற்றம் – குற்றம் 625.

39 நிரந்தரம் – அழிவு 632.

40 நிற்கண்டகன் – வன்கண்மையுடையவன் 632.

41 நாட்டகத்தேவர் – அந்தணர்கள் 637.

42 கோடரம் – மரக்கிளை 644.

43 சோத்தானை – சோத்தம் உடையவன்; வணக்கத்திற்குரியவன் 680, 938.

44 பனுபவமாபனுவி – நூல்களில் கூறியுள்ளவாறு செய்யுள் செய்த 682.

45 களேபரம் – எலும்புமாலை 686.

46 மான்று – அறியாமை 686.

47 குரை – ஒலி.

48 குலசேகரம் – கரையில் உள்ள மாமரம் 722.

49 தமரம் – ஒலி; அஃது ஈண்டு ஆரவார நீர்மையை உணர்த்துகிறது 748.

50 கிறி – புகழ்ச்சி மொழி; இனிய மொழி 793. கிறி – வஞ்சனையான சொற்கள் 467.

51 கல்லை – தொன்னை 806.

52 பத்து – பற்று 812.

53 நானாவிதம் – பல்வேறு வகையாக 832.

54 சைவத்த செவ்வுருவன் – சிவாகமங்களிற் கூறப்பெற்ற வடிவுடையவன் 838.

55 அஞ்சுபதம் – திருவைந்தெழுத்து 842.

56 பராமரித்தல் – காத்தல் 842.

57 தாடு – தலைமை 921.

58 மூடம் – அறியாமை 921.

59 சிட்டு – ஒழுக்கம் 195.

60 பண்டம் – பொருள் 187.

61 ஆதன் – அறிவில்லாதவன் 5.

62 நெண்டிக் கொண்டு – வலியச் சென்று 747.

63 ஞானன் – அறிவே வடிவாயவன்.

64 கொத்தை – குருடு 965.

65 நாதியன் – தந்தையாக விளங்குபவன் 985.

66 பேழ்கணிக்க – பெரிதும் எண்ணுதல்; வருந்துதல் 1006.

67 பெட்டன் – விருப்பம் உடையவன் 551.

68 துன்மை – தீ நெறி 601.

69 துன்பம் – இன்பத்திற்கு மாறான நுகர்ச்சி; இடும்பை – அதற்குக் காரணமான நிகழ்ச்சிகள் 602.

70 திரு – வீட்டின்பம்; செல்வம் – பொருளுடைமை 698.

71 பீடை – 549.

72 பெண்டுகள் – உலகியற்சொல் 558.

73 உடல் விருத்தி – பொன் 475.

74 மகிமை – பெருமை – 476.

75 சிலர்கள் – 606. சிலர் என்பதே பன்மையாகக் கள் விகுதியுடனும் புணர்க்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

இதுகாறும் ஆய்ந்தவற்றால் சுந்தரர் அருட்பாடல்கள் இலக்கியப்பண்புகள் நிரம்பப் பெற்றுள்ள அருட்கருவூலமாகும். உவமை, உருவகம், செல்லடுக்குகள், பழமொழி, கவிதை யியல்புகளும் நிறைந்து சிறந்து விளங்குகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற மார்க்கத்தில் யோக மார்க்கத்தில் தோழமை நெறியில் சுந்தரர் சிறப்பாக ஏழாம் திருமுறையை இயற்றி மனுகுலம் ஓதி இன்புற்று இருமைப் பயன்களை எய்த வழிவகுத்துள்ளார்.

*"ஆடுமின் அன்புடையீர் அடிக்கு*
*ஆட்பட்ட தூளிகொண்டு*
*சூடுமின் தொண்டருள்ளீர் உம*
*ரோடு எமர் சூழவந்து*
*வாழும் இவ்வாழ்க்கை தன்னை வருந்*
*தாமல் திருந்தச் சென்று*
*பாடுமின் பத்தருள்ளீர் பழ*
*மண்ணிப் படிக்கரையே"*[61]

## குறிப்புகள்

1 பெரியபுராணம் திருமலைச்சிறப்பு புராணம் பா.19
2 பெரியபுராணம் தடுத்தாட்கொண்ட புராணம் பா.106
3 (7:39:1)
4 பெரியபுராணம் விறன்மிண்டநாயனார் புராணம் பா.11
5 (7:25:1)
6 (7:4:1)
6அ திருக்களிற்றுப்படியார் பா.72
7 திருத்தொண்டர் திருவந்தாதி பா.86
8 பேரூர் புராணம், பள்ளுபடலம் பா.1
9 பெரியபுராணம் தடுத்தாட்கொண்ட புராணம் பா.73
10 நால்வர்நான்மணிமாலை சிவப்பிரகாசர் பா.7
11 (7:29:9)
12 (1:504)
13 (6:2:3)
14 (7:51:10), (7:62:3)
15 (7:91:10)
16 (7:39:1)
17 (7:2:1)
18 (7: :2)
19 (7:39:1)
20 (7:39:5)
21 (7:39:8)
22 (7:39:1)
23 (7:39:11)
24 (7:39:1)
25 (7:39:2)
26 (7:39:5)
27 (7:17:2)
28 (7:51:10)
29 (7:35:8)
30 (7:16:1)

31 ( 7:16:6 )

32 ( 7:35:5 )

33 ( 7:76:8 )

34 ( 7:71:3 )

35 ( 7:36:1 )

36 ( 7:36:2 )

37 ( 7:37:4 )

38 தொல் – செய்யுளியல் : பா.228

39 ( 7:55:4 )

40 தொல் – செய்யுளியல் : பா. 232

41 ( 7:81:1 )

42 ( 7:35:6 )

43 குறள் 277

44 ( 7:33:3 )

45 ( 7:7:9 )

46 ( 7:58:7 )

47 ( 7:58:7 )

48 ( 7:60:1 )

49 ( 7:45:1 )

50 ( 1:88:5 )

51 ( 1:42:4 )

52 ( 6:8:6 )

53 ( 7:3:2 )

54 ( 7:3:3 )

55 ( 7:3:3 )

56 ( 7:24:9 )

57 ( 7:27:2 )

58 ( 7:40:3 )

59 ( 7:37:10 )

60 ( 7:4:4 )

61 ( 7:22:3 )

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
# சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தமிழக வானவியல் சிந்தனைகள் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு | 90.00 |
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும் | 60.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| திருக்குறள் உரைச் சிந்தனைகள் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 95.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |
| மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் | 35.00 |
| A Course in Modern Standard Tamil | 65.00 |
| இசை மருத்துவம் | 45.00 |
| கம்பன் களஞ்சியம் | 550.00 |
| குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம் | 70.00 |
| நவீன நாடகங்களும் ஊடகங்களும் | 50.00 |
| மொழிபெயர்ப்பு ஒரு கவின் கலை | 75.00 |
| மனிதப் புனிதர் கக்கன் | 110.00 |

**669 மூவர் தமிழ் — மூன்று பார்வைகள் 50.00**